# ஞானசம்பந்தம்

ர 15] மன்மத ஆண்டு கார்த்திகைத்திங்கள் 10—12—55 [இதழ்

தருமபுர ஆதீன குருமுதல்வர்



ஸ்ரீலஸ்ரீ குருஞானசம்பந்த தேசிக பரமாசாரிய சுவாமிகள்

ஆசிரியர் வித்துவான், சோமசுந்தரத் தம்பிரான்

உ
குருபாதம்

# "ஞானசம்பந்தம்"

## உட்பொருள்

பக்கம்


1. புதிய யாண்டு ... 1
2. பழையன கழிதலும் புதியன புகுதலும் ... 7
3. இயற்கை நியதி ... 9
4. கனம். சி. சுப்பிரமணியம் அவர்கள் பாராட்டுரை 10
5. கனம். ராஜேந்திரபிரசாத் அவர்கள் ஆற்றிய உரை 12
6. முப்பொருள் விளக்கம் ... 17
7. சொல்லுணர்வு ... 19
8. பூலோக விமர்சனம் ... 23
9. அருளமுது ... 26
10. வள்ளுவரும் வாழ்க்கை நெறியும் 29
11. சமயமும் அறிவும் ... 33
12. மாசில் வீணை ... 37
13. வடமொழிச் செய்யுட்கணங்கள் ... 46
14. குருவருள் ... 51
15. திரு வெண்ணீறு ... 56
16. அஞ்செழுத்துண்மை ... 61
17. கோயில் ... 64
18. சிவன் உருவம் ... 67
19. திருவடி ... 71
20. அருச்சனை ... 76
21. சிவாகம சிவார்ச்சனை ... 78
22. தொண்டு ... 82
23. உண்மை விளக்கம் ... 87
24. எங்கள் குரு முதல்வர் ... 90
25. சமயப்பிரசார நிலைய வரவேற்பு ... 94
26. இரண்டாவது ஆண்டுவிழா ஆசியுரை ... 97
27. கல்வெட்டுத் திறப்பு விழா ஆசியுரை ... 101
28. எதிர்காலம் ... 103
29. திரு. S. ராமசாமி நாயுடு அவர்கள் பேச்சு... 107
30. டாக்டர் ஸ்ரீராஜேந்திர பிரசாத் அவர்கள் பேச்சு 109
31. செய்திகள் ... 113
32. மதிப்புரை 32, 63, 66, 75, 77, 86
33. திருக்கேதார யாத்திரை (அநுபந்தம்) ... 73


நிழல் படங்கள்:- தருமபுரம், திரு. எம். மீனாட்சிசுந்தரம்.
சென்னை, திரு. கிருஷ்ணன்.

# தெய்வம் துணை நிற்பதாக

நமது தஞ்சை ஜில்லாவின் தெற்குப் பகுதியிலும், மதுரை, இராமநாதபுரம், புதுக்கோட்டைப் பிராந்தியத்திலும் மக்களும் கால்நடைகளும் சமீபத்தில் ஏற்பட்ட புயல் வெள்ளத்தால் மிகக்கடுமையாகப் பாதிக்கப்பட்டு அவதியுற்றிருப்பதறிய மிகமிக வருந்துகிறோம். இது ஒரு பெரும் சோதனைக் காலம்தான். அந்த மக்களுக்கு இந்தச் சோதனைக் காலத்தில் எல்லாம் வல்ல சொக்கலிங்கப் பெருமான் மன உறுதியைத் தந்து முன்னிலும் நன்னிலை அருளப் பிரார்த்திக்கிறோம். இன்பத்திலும், துன்பத்திலும் அவன் துணை நின்று நம்மைக் காக்கிறான் என்ற பண்பாட்டில் வளர்ந்தவர்கள் நாம். ஆகவே இந்தத் துன்பக் காலத்திலும் தெய்வ சிந்தனையைத் தவறவிடாமல் நம் மக்கள் நன்னிலை அடையப் பிரார்த்திப்போமாக. அவரவரால் இயன்ற உதவி புரிந்து மகிழ்வோமாக.

அவதியுற்றோருக்கு அவனடியேஉறுதுணை, கோவிலே அடைக்கலம் என்பது இந்தக் காலத்திலும் உண்மையாயிற்று. "கோவிலில்லா ஊரில் குடியிருக்கவேண்டாம்" என்ற நம் மூதாட்டியின் அறிவுரையும் இப்போது நமது நினைவுக்குக் கொண்டுவருதல் நல்லது. உதாரணமாக வெள்ளத்தால் புயலால் பாதிக்கப்பட்ட மக்கள் பலரும் இனம் சாதி சமயம் முதலிய எவ்வித வேறுபாடுமின்றி வேதாரணியம், மன்னார்குடி, ஆவுடையார்கோவில் முதலிய பல ஊர்களிலும் கோவில்களில் அடைக்கலம் புகுந்து நின்றார்கள் என்ற செய்தி உலகமறியும்.

> பற்றாய் நினைந்திடப் போதுநெஞ் சேயிந்தப் பாரைமுற்றும்
> சுற்றா யலைகடல் மூடினுங் கண்டேன் புகல் நமக்கு
> உற்றா னுமையவட் கன்பன் றிருப்பா திரிப்புலியூர்
> முற்றா முளைமதிக் கண்ணியி னான்றன் மொய்கழலே.

என்ற அப்பர் சுவாமிகள் திருவாக்கு இப்போது நமக்கு ஆறுதல் ஆப்த மொழியாகும்.

இவ்வாதீனம் இவ்விதமாக அவதியுறும் மக்களுக்கு உணவளிக்க ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் 100 கலம் அரிசியும் ஆறுதல் செய்தியும் வழங்கியுள்ளார்கள். ஆதீனக் குடிபடைகளுக்கு இயன்ற உதவி செய்ய ஆவன செய்துவருகிறார்கள்.

உ

குருபாதம்

# ஞானசம்பந்தம்

மலர் 15 } மன்மதஹூ கார்த்திகைமீ 10—12—55 { இதழ் 1

உ

திருச்சிற்றம்பலம்

பொன்றயங் கிலங்கொளிந் நலங்குளிர்ந்த புன்சடை
பின்றயங்க ஆடுவாய்! பிஞ்ஞகா! பிறப்பிலீ!
கொன்றையம் முடியினாய்! கூடலால வாயிலாய்!
நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே. —சம்பந்தர்

திருச்சிற்றம்பலம்

## புதிய யாண்டு

'ஞானசம்பந்தம்' பதினான்கு ஆண்டுகளாகத் தொண்டு செய்து வருகின்றது. இது புதிய ஆண்டின் தொடக்கம். சமய சம்பந்தமான திங்கள்வெளியீடுகளுள் இஃதொன்றே இக்காலத்தில் ஏற்றமுடையது என்று அறிஞர்கள் பலர் எழுதியும் சொல்லியும் பாராட்டுகின்றனர். மேன்மேலும் பாராட்டுக்கு உரிய தகுதி உடையதாகச் சிறக்கும் வண்ணம் இதனைப் பல்லாற்றானும் போற்றிவளர்ப்பது நன்மக்கள்கடன். நூறுபக்கங்களுக்குக்குறையாமல் அரும் பெரும் பொருள்களைத் தாங்கி, அழகிய தோற்றத்தில், ஒவ்வொருதிங்களிலும் குறித்தகாலம்தவறாமல் வெளிவந்து கொண்டிருக்கும் இதை வாங்கிக் கற்க யாவரும் விரும்பலாம்.

பதினைந்தாவது ஆண்டு மலரின் முதல் இதழ் ஆதலின் 'ஞானசம்பந்தம்' அடைய விரும்பும் அனைவரும் இதனொடு சம்பந்தம் வைத்துக்கொள்ள, இதுவே தக்க சமயம். கடவுள்

நெறிபற்றிய உயரிய கட்டுரைகளையும், குற்றமில்லாத கவிகளையும், பல கலைகளைச் சார்ந்த வெவ்வேறு பொருள்களையும் அன்பர் உதவலாம். பலர் பலபல கட்டுரைகளை எழுதிவருகின்றனர். அவற்றை வெளியிடவில்லை என்று காரணம் வினவுகின்றனர். வருத்தம் தெரிவிக்கின்றனர். அவற்றிற்கெல்லாம் விடை எழுத முடியவில்லை. தக்கவற்றைத் தாங்கிவரத் தவருது இவ்வெளியீடு என்பது இங்கு அறிவித்துக்கொள்ளலாயிற்று. கட்டுரை முதலியவற்றில் எழுத்துப்பிழை, சொற்குற்றம், பொருட்குற்றங்கள் இருத்தல் கூடாது. நல்ல தமிழில், எளிய நடையில் யாவரும் விரும்பும் வகையில் எழுதப்பெற்றுவரும் கட்டுரை முதலியவை இதில் முதலிடம் பெறும்.

ஞானசம்பந்தத்தின் வளர்ச்சி பதினுலாவது ஆண்டைத் தாண்டிப் பதினைந்தாவது ஆண்டை எட்டிப் பிடித்திருக்கிறது. இளங்குழந்தைப் பருவத்தில் உண்டாகக் கூடிய நோய் நொடியின்றி, நல்ல வளர்ச்சி பெற்று வருகிறது. இதற்குச் செந்தமிழ்ச் சொக்கர் திருவருளும், பல அறிஞர்களின் கூட்டுறவும், பொது மக்களுடைய பேராதரவுமே துணைசெய்தன. எப்பொழுதும் இத் துணை நிலைத்துநின்று பெருகி வளரும் என்றே எதிர்பார்க்கவும் இடமிருக்கிறது. ஒரு சமயப் பத்திரிகை எதிர்பார்க்கக் கூடிய ஆதரவும் வளர்ச்சியும்விட இதற்கு அதிக ஆதரவும் வளர்ச்சியும் இருந்துவருகின்றன என்பதைப் பெருமையுடன் சொல்லிக்கொள்கிருேம்.

ஞானசம்பந்தம் சிறப்பாகச் சைவ சித்தாந்தக் கொள்கையைப் பரப்பும் நோக்கத்தில் எழுந்து, வேலை செய்துவருகிறது. பொதுவான கடவுள் கொள்கையை அது போற்றிவருகிறது. இலக்கியம் – சமயச் சார்புடைய இலக்கியங்கள் எல்லாவற்றையும் ஏற்றுக்கொள்கிறது. அச்சில் வாராத அருமையான நூல்கள் பல இதுவரை இதன்வழி வெளிவந்துள்ளன. பொதுவாக நம்நாட்டு மக்கள் இயல்பு கடவுள் நினைப்பிலே முற்போக்காக இருப்பது. செய்வன எல்லாம் கடவுள் துணைகொண்டு என்ற நம்பிக்கை உண்டு. வரும் நன்மை தீமைகள் எல்லாம் நம் மாசு கழுவ அவன் அருளுகிருன் என்று நம்புகிருேம். முற்றத்துறந்த முனிவர்களாலுைம் அவர்களுக்கும் அடியார் சேர்க்கையும், அரன்நாம சிந்தனையும், ஆலய வழிபாடும், திருவேடப் பொலிவும் எப்பொழுதும் வேண்டப்படுவன என்று நம் குரு முதல்வர்கள் அருளிச்செய்திருக்கிருர்கள்.

அவ்விதமானுல் உலகியலிலே ஈடுபட்டு உதரபந்தத்திலே கட்டுப்பட்டிருப்பவர்களுக்கு அவை மிகமிக இன்றியமையாது வேண்டப்படுவன என்று சொல்லவும் வேண்டுமோ ? அதிலும் பலநூற்ருண்டுகளாகப் பல்வேருகியமதத்தினர்களால் பல்வேருகிய நாட்டினரால் ஆளப்பெற்றும் அவரவர் கொள்கைகளால் திணிக்கப்பெற்றும், நம்முடையது என்ற தனிக்கொள்கையைத் துணிந்து வெளியிட வசதியில்லாத காலமொன்றிருந்தது. அப்பொழுது கடவுட்கொள்கை உடையவர்களுங்கூட ஆட்சிப் பீடத்தில் உள்ளவர்களை அநுசரித்து அவர்வழியில் பேசியும் வாழ்க்கை முறைகளை மாற்றி அமைத்துக் கொண்டும் வாழவேண்டியவராயினர். அந்த இடையீட்டிலே – ஆட்சியின் வலுவிலே பிற சமயக் கொள்கைகளும் நம்நாட்டிலே வளர்வனவாயின. நம்பிக்கை இல்லாவிட்டாலும் நாகரிகத்தின் பெயராலேயாவது கடவுட்கொள்கையைச் சொல்லிக்கொள்ளவில்லை. இவ்விதமாக ஆஸ்திகர்களும் மறைமுகமாக ஏதாவது செய்துகொள்ளவேண்டியதாயிற்று.

நம்நாட்டுச் சமயக் கொள்கை – மெய்ச் சமயக் கொள்கை; பிரசாரமூலம் பரப்பவேண்டாதது; உண்மையை உணர்ந்து அனுட்டித்து வரவேண்டியது; உண்மைத் தேட்டத்திலே அவாவுற்றுவரும் அன்பர்களுக்கு ஞான நெறியிலே – நன்னெறியிலே பயிற்றுவிப்பது; – அதற்கும் சில கட்டுத்திட்டங்கள். இவ்விதமாக ஆன்ற – அமைதியான வழியிலே குரு உபதேசம் பெற்றவர்கள் கடவுளைக் கண்டார்கள். அந்த இன்பத்தை அநுபவித்தார்கள். கண்டவர் விண்டிலர் விண்டவர் கண்டிலர் என்பது நம்முடைய ஆன்ருேர் மொழி. ஆனுல் காலம் மாறியதே, மக்கள் உண்மை நெறியை மறந்தனரே, அவர்களும் செம்மைப்பட்டு வாழவேண்டுமே – நாகரிகம் என்பது வெளி வேஷத்தால் அல்லாமல் உள்ளுணர்வால் – மெய்யறிவால் பெறவேண்டியதாயிற்றே என்று நம் சமயத் தலைவர்கள் அருட் கனிவொடு திருவுளம் பற்றினுர்கள். நம்நாட்டிலும் நம் சமயக் கொள்கைகளையும் நினைவுறுத்தப் பிரசாரம் தேவையாயிற்று. வேலை தொடங்கினுர்கள் உருவான திட்டத்திலே. சமய சபைகள், சமய மாநாடுகள், திருமுறைப் பயிற்சி, ஆகமப் பயிற்சி, பிரசாரப் பயிற்சி என்பனவாகப் பல வழிகளிலே திருத்தொண்டு நடைபெற்றுவருகிறது. பேச்சு வடிவிலும் நூல் வடிவிலும் மக்களுக்குச் சிறந்த செய்திகள் ' நினைவுறுத்திகள் '

சென்றன. மக்களும் உண்மையின் உயர்வை உணரலாயினர். நாகரிகமென்பது அவரவர்கள் கொள்கையிலே சிறக்க இருப்பதைக் கண்டனர். தங்கள்தங்கள் கொள்கைகளைச் சொல்லிக் கொள்வதில் பெருமைப்படலாயினர். சமய ஒற்றுமை காணலாயினர். இதனாலே உண்மை, சகோதரத்துவம், அன்பு மீண்டும் வளர்வனவாயின. அடிப்படையிலே கடவுட்கொள்கையின் மேன்மை அவரவரும் உணரலாயினர்.

இந்தவழியிலே நம் ஞானசம்பந்தம் பதினாலாண்டுகளாகத் தொண்டு செய்து வருவதன் பயன், இதனைப் பெற்றுக் கற்று வரும் பல்லாயிர மக்களுக்கும் தெரியும்.

நமது நாட்டில் பேச்சு சுதந்திரம், மத சுதந்திரம் இவ்விதமாகப் பூரண சுதந்திரம் கிடைத்துவிட்டது. சுதந்திரப் பிரகடனம் செய்துகொள்வதில் இந்தப் பூரண சுதந்திரம் மக்களுக்கு இருப்பது, ஆட்சி மதச்சார்பற்றதாக அமைந்தது என்று சொல்லப்பட்டிருக்கிறது. இந்தச் செய்தி ஒரு சட்ட வரம்பிற்கு உட்பட்டதாக எந்தவொரு மதத்தையும் சார்ந்ததாக இருக்கக் கூடாது; ஆனால் நாட்டிலுள்ள மக்களுடைய எல்லாச் சமய வளர்ச்சியிலும் ஆட்சி அக்கரை உடையதாக இருக்கும் என்ற விளக்கம் தேவையாயிற்று. அரசியல்வாதிகள் என்று சொல்லிக் கொள்ளும் சிலர் இக்கருத்துப் புரியாது மயங்கினர். அரசியல் வாதிகளுக்குச் சமய வளர்ச்சியிலே நாட்டம் வேண்டியதில்லை, அந்தந்த மதஸ்தாபனங்கள்தாம் மதவளர்ச்சிக்குப் பாடுபட வேண்டும் என்பதாக – வெளிப்படையாகப் பேசிவந்தார்கள். பொதுவாக மக்கள் ஒவ்வொருவரும் ஒவ்வோர் அரசியற்கட்சியைச் சேர்ந்தவர்களாகத்தானே இருப்பார்கள்! இவ்விதமாக அரசியற்பேரால் மக்கள் சாராது ஒதுங்கிசிற்கும் பொழுது மதஸ்தாபனங்கள் மட்டும் மதவளர்ச்சிக்காகப் பாடுபடவேண்டியதென்பது எவ்வளவு பொருந்தாத கூற்று என்பதை முதலிலே விளக்கம் கூறவேண்டியதாயிருந்தது. சொல்லால் சொல்லி வந்தாலும், செயலால் பலபல அரசியற் பெருந் தலைவர்களும், பலபல சந்தர்ப்பங்களில் இவ்வாதீன மடாலயத்திற்கு வந்து கொண்டிருந்தார்கள். ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானத்தைக் காணக் கூடிய வாய்ப்புக்கள் பெற்றுவந்தார்கள். அவ்வப்பொழுதும் அவரவர்களைக்கொண்டு மதச்சார்பற்ற அரசாங்கம் என்பதன் பொருள் விளக்கம் மக்களுக்குப் புரியக்கூடியதாக அவரவர்

கருத்தை வெளியிடும் சந்தர்ப்பம் நமது ஞானசம்பந்தத்திற்குக் கிடைத்தது. அதனோடு பொதுச்சமயக் கொள்கையாக எல்லாச் சமயங்களின் அடிப்படையும் ஒன்றையே நாடிநிற்பன என்றதன் விளக்கத்தை அந்தந்தச் சமய பீடாதிபதிகளையும் இவ்வாதீன மடாலயத்தில் வரவேற்று உபசரித்ததன் வாயிலாக வெளியிட வாய்ப்பேற்பட்டது. இவ்விதமாக அரசியல் தலைவர்கள் மதத்தலைவர்கள் முதலிய பல பெருமக்களின் கருத்துக்களை அவ்வப்போது மக்கள் பெற்றுச் சிந்தனை சிறக்கலாயினர். நீண்டநாட்களாகச் செய்த தொண்டு நிற்க, இவ் ஆதீன நிகழ்ச்சியாகச் சமீபத்திலே நடைபெற்ற இரண்டு கூட்டங்களின் எதிரொலி இப்பொழுது நம்முடைய சிந்தனைக்கு ஏற்பதாக இருக்கிறது.

ஒன்று, சென்னையில் ஆதீன பிரசாரநிலய (வேளூர் தேவஸ்தான இறைபணி மன்ற) இரண்டாவது ஆண்டுவிழா நிறைவுக் கூட்டத்தில் நம்நாட்டின் தலைவர் (ராஷ்ட்ரபதி) வந்து கலந்து கொண்டது. மற்றொன்று மதுரைத் திருப்பாசுரக் கல்வெட்டுத் திறப்பு விழா. அவ் விழாச் சிறிது; ஆனால் அதனுடைய பலன் பெரிது. முதலாவதாக உள்ள கூட்டத்தில் நாட்டுத்தலைவர் இவ்வாதீன அழைப்பை ஏற்றுக்கொண்டது, இதுபோன்ற சமயஸ்தாபனங்களின் தொடர்பால் தமக்கு ஆத்மீக எழுச்சி வலுப்படும்; இங்கே கிடைக்கும் செய்தி தம் போன்றோர்க்கு மிகத் தேவையானது; தாம் பெற்ற அநுபவங்களைத் தம்முடைய செல்வாக்கினாலே பலரும் பெறச் செய்ய இயலும் என்ற காரணங்களால் என்பது ஒன்று. காந்தீயத்தின் விளக்கம், அரசியல் அடிப்படைத் தத்துவம் முதலியன மக்களுக்கு விளங்க எடுத்துரைத்தார்கள் அவர்கள். அதன் எதிர் ஒலியாகத் தென்னாட்டுச் சுற்றுப் பிரயாணத்தில் அவர்கள் பேசிய பேச்சுக்கள் அமைவனவாயின. இதனையொட்டி அரசியல்கட்சித் தலைவர்களுடைய பேச்சும் திரும்புவதாயிற்று.

இரண்டாவதன் எதிரொலி, கடவுட்கொள்கைக்கு மாறுபட்டவர் என்று பலரும் நினைக்கக் கூடியதாக உள்ள ஒரு பெரியார் 'தமிழ் மொழியிலே கடவுள் இல்லை என்பதற்கு ஒரு சொல்கூட இல்லை. ஆகையினால் தமிழர்கள் கடவுள் இல்லை என்பார் அல்லர்' என்று விளக்கவுரை தந்திருப்பதாகும். இவ்விதமாக அரசியற் பெருந்தலைவர்களின் உள்ளக்கிடக்கையைக்

ளிந்து வெளியிடுவதாகப் பலபல வாய்ப்புக்கள் இவ் ஆதீனத் திருத்தொண்டால் கிடைக்கின்றன என்ற பெருமை யைச் சொல்லிக்கொள்ளவும் வேண்டுவதுதான்.

'ஞானசம்பந்தம் மக்களோடு – அறிஞரோடு – தொடர்பு கொண்டு, தோழமை பூண்டு நல்ல செய்திகளை வெளியிட்டு வருகிறது.' என்ற பாராட்டையும் பெற்றுள்ளது. ஆதீனமடா லயம் மக்கட்டொடர்பு கொள்வதற்கு ஒரு பெரும் பாலமாக வும் அமைந்திருக்கிறது. இளமையிலே தொடங்கிய தொண்டு களைக் காளைப் பருவத்திலே மேலும் ஊக்கத்தோடு செய்யக் காத்திருக்கிறது. சொக்கலிங்கத்தின் திருவருள் துணைநிற்கும். ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களின் குருவருள் பக்கபலம். மக்களின் அன்பு அதனை ஏற்று உண்டுமகிழும் பெரும்பாத்திரம். வாழ்க குருவருள்! வாழ்க ஞானசம்பந்தம்! வளர்க அருள்வழி!

---

## "ஞானசம்பந்தம்"

### அரிய கட்டுரைகளுடன் வெளிவரும் திங்கள் வெளியீடு

திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனத்திலிருந்து வெளிவருவது. சைவ சமயச் சார்பாக எழுதப்பெறும் தெளி வான கட்டுரைகள் அடங்கியது. சமயங்களின் உண்மைகளை உணர்வதற்குப் பெருந்துணையானது.

பத்துசந்தாதாரரைச் சேர்த்து அனுப்புவோர்க்கு ஓராண்டின் பன்னிரண்டு இதழ் இலவசமாகக் கிடைக்கும். நூறு சந்தா தாரரைச் சேர்த்தவர்க்கு அதனோடு 15—0—0 ரூபாய் கிடைக்கும்.

**ஆண்டுக் கையொப்பம்**

| | | |
|---|---|---|
| உள்நாடு | ... | ரூ. 1—8—0 |
| வெளிநாடு | ... | ரூ. 2—0—0 |
| ஆயுட்சந்தாத் தொகை | ... | ரூ. 50—0—0 |

செயலாளர்,
'ஞானசம்பந்தம்' காரியாலயம்,
தருமபுரம், மாயூரம் P. O.

c

# பழையன கழிதலும் புதியன புகுதலும்

வித்துவான், ஸ்ரீமத் சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள்

தருமபுர ஆதீன சமயப்பிரசார நிலையம், சென்னை.

"எதையும் நன்ருகப் புரிந்துகொள்ளாமல் ஏற்காதீர்கள் எதையும் நன்ருகப்புரிந்துகொள்ளாமல் கைவிடாதீர்கள்" என்று துளசிதாசர் கூறியுள்ளார். இதனைச் சமீபத்தில் 14-11-55ல் சென்னையில் தருமபுர ஆதீன மடாலய தேவாலய சமயப் பிரசார நிலையத்தின் இரண்டாவது ஆண்டு நிறைவு விழாவில் தலைமையுரை நிகழ்த்தும்போது இந்தியக் குடியரசுத் தலைவர் கனம் ஸ்ரீ இராஜேந்திரபிரசாத் அவர்கள் எடுத்துக்காட்டிப் பேசினுர்கள். இந்தச் சமயத்தில் இக்கருத்தை ஏன் வெளியிட வேண்டும் என்று சிலர் சிந்திக்கலாம். வெளியிடக் காரணம் உண்டு. மிகப்பழைய பண்பாட்டை நழுவவிட்டுக்கொண்டு வருகிருேம். இடைக்காலத்து வந்துள்ள மேலைநாட்டுப் புதிய பண்பாட்டை மோகத்தால் ஏற்றுக்கொண்டு வருகிருேம். இதனை அறிந்துதான் தலைவர் இராஜன்பாபு அவர்கள் கொள்ளத் தக்கன இன்னவை, தள்ளத்தக்கன இன்னவை என்பதற்குள்ள இலக்கணத்தை எடுத்துக் காட்டினுர்கள்.

ஆழ்ந்த அனுபவமும் அறிவு வளமும் பெருதவர்களே எக்கருத்தையும் விரைவில் ஏற்று விரைவில் விடவும் துணிவார்கள். நிறைநெஞ்சம்பெற்றவர்கள் எதற்கும் விரைவில் துணியமாட்டார்கள். எக்கருத்தையும் விரைந்து ஏற்று இன்னலுறும் மக்களுக்கு வள்ளுவர் அறிவு கொளுத்துகின்ருர்:

"தேரான் தெளிவும் தெளிந்தான்கண் ஐயுறவும்
தீரா இடும்பை தரும்."

ஒவ்வொரு கருத்தையும் நன்கு ஆய்ந்து தெளிவுபிறந்த பின்னரே உறுதியாகப் பின்பற்றுதல் வேண்டும். நம் நாட்டுப் பண்பாடு அவ்வழியில் வந்ததாற்ருன் எவரும் மாற்றங்காண இயலவில்லை. இதனைக் காலவேகத்தில் மக்கள் மறக்கத் தலைப்படுகின்றனர். புதிய கொள்கைகளில் ஈடுபடுகின்றனர். இவர்கட்குப் பழைமையை நினைவுறுத்தும் முறையில் ஜனுதிபதி அவர்களின் பேச்சு அமைந்திருந்தது.

புதுமையும் தேவையே, புதுமையைக் கொள்ளும் முறையில் - இடத்தில் - அளவில்தான் வேறுபாடு. அடிப்படையையே மாற்றிப் புதுமைகோடலைத்தான் நாம் மறுக்கிறோம். அடிப்படைப் பண்பாடு நமதாக அதற்கு மாறுபடாத கருத்துக்களை நாம் வரவேற்கிறோம். ஒரு உதாரணத்தை நினைவிற்குக் கொண்டுவருவோம். ஒருமரம் பழமையாக உள்ளது, அதன் இலைகள் அடிக்கடி மாறுகின்றன. பழைய இலைகள் கழிகின்றன. புதிய இலைகள் தோன்றுகின்றன. அதில்காணும் அழகினைக் கண்டு அனுபவிக்கிறோம். மரத்தினையும் அகற்றிவிட்டால் அழகினையும் அதன்வழி இன்பத்தையும் காண்டல் அரிதாகிவிடும். இந்நிலையில் வெளியார் பண்பாட்டை நமது பண்பாட்டோடு வேண்டிய அளவு மாற்றி அமைத்துக்கொள்ளலாம். பழமையைப் பழமையாகவே வைத்துக்கொள்ளுதலும் புதுமையை அப்படியே ஏற்றுக்கொள்ளுதலும் நலம் பயவா. நல்ல கருத்துக்களை யார் சொல்லினும் எக்காலத்துச் சொல்லினும் ஏற்றுக்கொள்ளவேண்டுமென்பது வள்ளுவர் கருத்தாகும். சித்தாந்த சாத்திர ஆசிரியர் கருத்தும் ஆம்:

"தொன்மையவாம் எனும் எவையும் நன்றாகா இன்று
தோன்றியநூல் எனும்எவையும் தீதாகா." (சிவப். 12.)

"உடலைப் பாதுகாக்க உணவு தேவை, உயிரைப்பாதுகாக்க உணர்வு-ஆத்மஞானம் தேவை. உடலுக்கு உழைத்து உணவைத்தேடுகிறோம். உயிருக்கு உழைத்து உணர்வைத் தேடிக்கொள்ளுதல்வேண்டும். ஆத்மிக பலத்தால்தான் எவ்வளவோ சிக்கல்களுக்கிடையே நமது இந்திய நாடு உலக நாடுகளில் மேன்மை பொருந்தியதாக விளங்குகிறது." இக்கருத்தினையும் இந்தியத் தலைவர் தலைமையுரையில் அறிவித்தார்கள். பழம் பொருட்கும் பழம் பொருளாக, புதுமைக்கும் புதுப்பொருளாக விளங்கும் பெருமானை வணங்கி வழிபடும் நாம் பழைய பண்பாட்டில் புதிய கருத்துக்களை உருவாக்கிக் காண முற்படுவோமாக! உயிருக்கு உணர்வுதேடி உழைப்போமாக. இக்கருத்துக்களை நமக்கு நினைவுறுத்திய இந்தியத் தலைவர் இராஜன்பாபு அவர்கள் நீடு வாழ்க என வாழ்த்துகிறோம்.



சக்ரவர்த்தி ஸ்ரீ இராஜகோபாலாச்சாரியார்

# இயற்கை நியதி

ஸ்ரீ சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார் அவர்கள்

அன்பை விலைக்கு வாங்கமுடியாது. பூக்கடையில் பணத்துக்குப் புஷ்பம் கிடைக்கும். ஆனால் அன்பு அப்படிக் கிடைக்காது. அன்பைக்கொடுத்தே அன்பைப் பெறமுடியும். முன்னடியே கொடுக்கவேண்டும். கடனுக்குக் கிடைக்காது.

ஆண்டவனுடைய அன்பை அடையவேண்டும் என்று ஆசைப்படுகிறவர்களுக்கும் இதுவே நியதி. ஆண்டவனை அன்பு செய்தால்தான் அவனுடைய அன்பை நாம் பெறலாம். மனைவியை எவ்வாறு காதலிக்கிறோமோ, பெற்ற குழந்தையை எப்படி எடுத்து அணைத்து மகிழ்ச்சி யடைகிறோமோ அவ்வாறு ஆண்டவனைக் காதலிக்க வேண்டும்.

சகோதர மக்களுடைய அன்பைப்பெற விரும்பினாலும் இதுவே வழி. ஒருவரை நாம் அன்புசெலுத்தி உள்ளத்தில் வைத்துக்கொண்டோமானால் அவருடைய உள்ளத்தில் நம்பால் அன்பு உண்டாகும். இது இயற்கை நியதி. 'இயற்கைநியதி' என்றால் ஆண்டவன் இட்ட பெருஞ்சட்டம். இந்த நியதியின் படியே உலக சக்கரம் சுழன்று ஓடுகிறது. யந்திராலயத்தில் சக்கரங்கள் ஒன்றோடொன்று வார்போட்டுப் பிணைக்கப்பட்டுச் சுழல்வதுபோல் மக்களின் உள்ளங்களும் அன்பு என்னும் பரஸ்பர பிணைப்பைக் கொண்டு செல்கின்றன. உலகத்தில் அன்பு வளரவேண்டுமென்றால் ஒவ்வொருவரும் தம் உள்ளத்தில் அன்பை வளர்க்க வேண்டும். வெறுப்பை அகற்ற வேண்டும். களை பிடுங்கி நெற்பயிர் வளர்ப்பதுபோல உள்ளத்தைக் காக்க வேண்டும். அன்பை விட்டுவிட்டு வெறுப்பை வளர்ப்பது மதியீனம். துயரத்துக்கு வழி. இனிக்கும் பழம் இருக்க, புளிக்கும் காயை ஏன் பறித்துத் தின்னுவது?


ஆண்டவன் நமக்கு ஒரு திவ்ய சக்தி தந்திருக்கிறான். அன்புசெய்து அன்புபெறும் சக்தியைத் தந்திருக்கிறான். அதை வீணாக்காமல் பயன் படுத்திக் கொள்ளவேண்டும்.

**கனம், சி. சுப்பிரமணியம் அவர்கள்,**

சென்னைராஜ்ய நிதி அமைச்சர்.

"ஞானசம்பந்தம்" பதினான்கு ஆண்டுகள் முடிந்து பதினைந்தாம் ஆண்டு இம்மலருடன் தொடங்குகிறது. இம் மாதப் பத்திரிகை தமிழ் நாட்டில் செய்துவரும் சமய சேவை எல்லோராலும் போற்றுதற்கு உரியது. கடவுள் இல்லை என்றும் மதம் என்பது மக்களுக்கு ஏற்படும் மயக்கம் என்றும் ஒரு சிலரால் பிரசாரம் நடந்துவரும் இக்காலத்தில் இந்தச் சமயப் பிரசாரம் மிகவும் தேவை. இச்சேவையை இப்பத்திரிகையின் மூலமும் இன்னும் பலவேறு வழிகளிலும் ஆற்றி வரும் தருமபுர ஆதீனத்திற்கு நம் நன்றி என்றும் உரித்தாகுக.

---



இந்தியக் குடியரசு தலைவர்

**கனம் டாக்டர் இராஜேந்திர பிரசாத் அவர்கள்.**

## சென்னை தருமபுர ஆதீன மடாலய தேவாலய சமயப்பிரசார நிலைய

# இரண்டாவது ஆண்டுவிழாவில்

### இந்தியக் குடியரசுத் தலைவர்

## கனம் டாக்டர் இராஜேந்திர பிரசாத் அவர்கள்

### தலைமையுரையின் மொழிபெயர்ப்பு.

உங்கள் எல்லோருடனும் இன்று மாலை ஒருங்கிருக்க வாய்ப்பு ஏற்பட்டிருப்பது எனக்கு ஒரு பெரிய அதிர்ஷ்டம் என்று கருதுகிறேன். இப்பொழுது இங்கே பாடினார்கள். அடுத்த அறையிலும் பஜனை நடந்தது. அவற்றில் கலந்துகொள்ள வாய்ப்பும் கிடைத்தது. இந்தியாவிலே கருத்தும் கொள்கையும் உருவாகும் காலம் இது. இக்காலத்திலே நாம் இருக்கின்றோம். பழைய காலத்தில் நாம் எதை எதை மதித்து வந்தோமோ, எதையெதை எண்ணிவந்தோமோ அவை யாவும் பெரும் பாலும் இப்போது உருமாறும் நிலையில் இருக்கின்றன. புது விஷயங்கள், புதுக்கருத்துக்கள், புதுக்கொள்கைகள் இவை யாவும் கூட அதேபோல் உருப்பெறுகின்ற நிலையில் இருக் கின்றன.

இப்போது நாம் ஒரு முடிவு செய்யவேண்டியிருக்கிறது. முடிந்தவரையில் நமது பழையமுறைகளைக் கைப்பற்றிக்கொண் டிருப்பதா? இக்கால நிலைக்குத் தகுந்தபடி நமது முறைகளோடு அவற்றைப் பொருத்திக்கொண்டு வேண்டிய அளவு மாற்றிக் கொள்வதா? அல்லது நமக்குச்சொந்தமானவற்றை விட்டுவிட்டு நமது அல்லாததை ஏற்றுக்கொண்டு இனி வருங்காலத்தில் பாழ் பட்டுப்போவதா ? இதுதான் நாம் இப்பொழுது முடிவுசெய்ய முன்நிற்பது. சிந்தனையுடைய எவரும், முடிவுக்கு வருவது ஒரு கடினமான செயலாகாது. நம்மிடம் உள்ள சிறந்த செய்திகளை நிறுத்திக்கொண்டு அயலாரது சிறந்த செய்திகளை அவற்றோடு இணைத்துக்கொள்வது சரியென்று எவரும் ஏற்றுக் கொள்வர். 'துளசிதாஸ் இராமாயண'த்தில் ஒருவரி இருக்கிறது. 'நன்கு விளங்குமுன் - விளங்க-உணருமுன் - ஆராயாமல் எதை யும் கொள்ளாதே. தீர முடிவு செய்யாமல் - ஆராய்ந்துபாராமல்- எதையும் தள்ளாதே.' இப்பொழுது நாம் செய்யவேண்டியது இதுவே தான்.

எந்த விஷயத்தை எடுத்தாலும், அது காரண காரியத்திற்கு ஒத்துவருவதல்ல என்று ஒதுக்குவதே பெரும்பாலும் நமது போக்காக இருக்கிறது. யாரோ சிலர், நமது கருத்துக்களில் பல, அறிவியலுக்குப்பொருத்தமானவையல்ல என்று சொல்வது கேட்டு நாம் அவற்றை உதறித்தள்ளிவிடுகிறோம். ஆராயாமல் ஒரு பொருளை ஒப்புக்கொள்ளுவது அல்லது தள்ளிவிடுவதைப் போல காரண காரியத்திற்குப் பொருத்தமில்லாத செய்தி வேறு ஏதாவது இருக்க முடியுமா என்பது எனக்குத் தெரியவில்லை. இப்பொழுது இருக்கும் நமது போக்கு என்னவென்றால், பல பொருள்களை ஆராயாமலும் எண்ணாமலும் தள்ளிவிடுவது, அந்தப் பொருள்களுக்குப் பதிலாக மற்றவற்றை, அதேமாதிரி ஆராயாமலும் தெரிந்துகொள்ளாமலும் ஏற்றுக்கொள்வது என்பதுதான். மாறுதல்காலத்தில் இவ்வாறுதான் இருக்கும் என்று கருதுகிறேன். இவ்விஷயத்தில் இன்று மாலை நாம் கலந்து கொண்டுள்ள விழாவை நடத்தும் நிலையங்கள் போன்றவை தாம் ஒரு முடிவுக்குவர உதவிசெய்யக்கூடும்.

நம்முடைய முன்னோர்கள் மிக்க அறிவாளிகள். இத்தகைய நிலையங்களை அமைத்தார்கள். நம்முடைய பாரம்பரிய ஞானத்தையும் நமது சம்பிரதாய கலையையும் பாதுகாப்பதற்காக மட்டுமல்லாமல், காலப்போக்கில் புது அனுபவங்களுக்கேற்றபடி பயன்படுத்தவும் அந்நிலையங்களிடம் வசதிகளையும் சொத்துக்களையும் ஒப்படைத்தார்கள். தனது அடிப்படையான கொள்கையை விட்டுவிடாமல் பற்றிக்கொண்டிருக்கிற சமூகம் ஒன்று உலகத்தில் இருக்கிறதென்றால் அது இந்திய சமூகம்தான். எவ்வளவு காலமானாலும் எத்தனை நூற்றாண்டுகளானாலும் மாறுதலுக்கேற்றபடி தன்னை மாற்றி அமைத்துக்கொள்ளுகின்றது அச் சமூகம். இதனால்தான் எத்தனையோ ஆயிரம் ஆண்டுகள்கடந்தும் நாம் வாழ்ந்துகொண்டேயிருக்கின்றோம். ஆனால் ஒரு காலத்தில் சிறந்திருந்த பல பிறநாடுகளும் நாகரிகங்களும் எப்போதோ மறைந்துபோயின. இன்று கிடைக்கக்கூடிய புத்தகங்களிலும் ஆவணங்களிலுமே அவற்றைப்பற்றி நாம் ஒருவாறு அறிந்துகொள்ள முடிகின்றது.

இந்தியாவில் உள்ள – நாம் பெற்றுள்ள – பெரிய பரம்பரைச் சொத்து இது. இந்தச் சொத்தை நாம் தள்ளிவிடுவது அறிவிற்கு ஏற்றதன்று. அதிலும் முழுதும் ஆராயாமல் தள்ளி

விடுவது மிக்க அறியாமையாகும். ஆகையினுலேயே நம்முடைய பண்பாட்டிலே, நமது சமயநெறியிலே, நமது வாழ்க்கை முறையிலே நிறைய விஷயங்கள் இருக்கின்றன என்பதை நான் பலமுறை எடுத்து உரைத்திருக்கின்றேன். இவற்றை நாம் ஆராயவேண்டும்; பாதுகாக்கவேண்டும்; மற்றவர் அறிய எடுத்துக் கூறிப் பரப்பவேண்டும்.

இன்று நம்மை உணர்ச்சிவேகம் அடித்துக்கொண்டு போகிறது. அயல் நாடுகளிலிருந்துகொண்டு வந்தவற்றை நம்மிடையே ஊன்றப்பார்க்கிறோம். பெருந்தன்மையும், பெருஞ் சிறப்பும் உடையனவாகக் காணப்படுகின்ற அவை நெடுநாள் நிலைத்தவை அல்ல. காலத்தின் சோதனைக்கு உட்பட்டவை அல்ல. நெடுங்காலம் உலகத் தாக்குதலுக்கு ஆளானவை அல்ல. அந்தத் தாக்குதலைமீறிப் பிழைத்தன அல்ல. இவ் உண்மைகளை நாம் அறிவதில்லை. நமது நாட்டிலே காலத்தின் சோதனைக்கும் நின்று, இன்றுவரை நம்மைக் காத்துவரும் விஷயங்கள் சில இருக்கின்றன. ஏன் நாம் அவற்றைப் புரிந்து கொள்ளக்கூடாது? ஏன் இக்காலநிலைக்கு ஏற்றபடி அவற்றைப் பொருத்திக்கொள்ளக்கூடாது? அல்லது ஏன் நமது கருத்துக் களுக்கேற்றபடி இக்காலச் செய்திகளை மாற்றிக்கொள்ளக் கூடாது? முன் காலங்களிலே இங்ஙனம் செய்து வெற்றிபெற் றிருக்கிறோம். எண்ணற்றதடவை வெற்றியடைந்திருக்கிறோம். இப்போது மட்டும் முடியாதுபோகும் என்பதை நான் ஒப்புக் கொள்ள மாட்டேன்.

அரசியலிலும், ஆட்சியிலும் நாம் துன்பப்பட்டோம், தோல்வியடைந்தோம், துர்அதிர்ஷ்டம் வந்தது. ஒவ்வொரு வீழ்ச்சிக்குப் பிறகும் உயர்வுபெற்றோம். இது என்ன காட்டு கிறது? வாழ்வில் துர்அதிர்ஷ்டத்தால் உடைந்துபோவதுபோல், துர்அதிர்ஷ்டத்தைப் பொறுத்துக்கொள்ளவும் முடியும், எதிர்த்து வெல்லவும் முடியும் என்பதைத்தான் காட்டுகிறது. ஆகவே நாட்டின் நன்மையைக் கருதும் எத்துணையோ காலமாக எத்துணையோ நூற்றாண்டுகளாக நமது வாழ்வுக்கும் பண்பாட் டிற்கும் அடிப்படையாக இருந்து வருகின்ற தெய்விக விஷயங் களைப்பற்றி எண்ணிப் பாருங்கள் என்று ஒவ்வொருவரையும் நான் பணிவோடு வேண்டிக்கொள்கிறேன் (கேளுங்கள் கேளுங்கள்). நம் நாடும் உலகமும் நம்மிடம் எதிர்பார்ப்பது குறைந்தபட்சம் இதையேயாகும்.

நாம் என்ன சாதித்து விடமுடியும்? மேல்நாட்டை வெற்றிகரமாகப் பின்பற்றிவிடலாம். அவ்வளவுதானே! அவர்களிடம் ஏற்கெனவே இருந்தவற்றிற்கும் அவர்கள் புதிதாகக் கண்டு பிடித்தவற்றிற்கும் கூடுதலாக நாம் அதே வகையில் ஏதாவது தந்துவிட முடியாது. ஆனால் நம்மிடம் வேறு யாரிடமும் இல்லாத முழுமுதற் செய்திகள் சில இருக்கின்றன; அவை உலகத்திற்குத் தேவையானவை; உலகத்தின் மற்றப் பகுதிகள் இப்போது பெற்றிராதவை; இது எனக்கு நிச்சயமாய்த்தெரியும். இவற்றை நாம் காப்பாற்றி வளர்த்து, இக்கால உலகம் விளங்கிக்கொள்ளவும், அறிந்து ஏற்றுக்கொள்ளவும் சாத்தியமான வகையில் அளிக்க வேண்டும். நாடு சுதந்திரம் பெற்றுவிட்ட பிறகு நமக்கு இருக்கின்ற பெரிய பொறுப்பு இது.

வயிறு பட்டினியாய்க் கிடக்கும்போது உயர்ந்த பெரிய கருத்துக்களால் நமக்கு என்ன பயன் என்பதும் ஓரளவு சரிதான். ஆகவே வயிறுகளை நிரப்புவதற்கு நம்மாலானதைச் செய்துவருகிறோம். ஆனால் நான் என்ன சொல்லுகிறேன்: "வயிற்றை நிரப்பிக்கொண்டு மனத்தையும் உயிரையும் பட்டினிபோடக்கூடாது" என்று. நம்முடைய மனத்தைச் சிறந்த எண்ணங்களால் நிரப்பி, தெய்விகம், ஒழுக்கம் என்ற ஆற்றலால் வளர்க்கவேண்டும். இந்த ஆற்றல்தான் நமக்கு எவ்வளவு கஷ்டங்கள் நேர்ந்தபோதிலும் நாம் அடைந்திருக்கும் இந்நிலையை அடைய உதவியிருக்கிறது.

காந்திஜி இறந்தவுடன் அவர் சொன்ன எத்தனையோ செய்திகளை நாம் மறந்துவிட்டோம் என்பது ஆச்சரியமாக இருக்கிறது. அவர் உயிருடன் இருந்தபோது அந்தச் செய்திகள் தெளிவாகவும் நன்றாகவும் அவசியமெனவும் தெரிந்திருந்தன. அவற்றிற்கு ஒரு விளக்கம் தேவையில்லாமல் இருந்தது. மேலும் ஆச்சரியம் தருவது என்ன என்றால், தானே விளங்கிக் கொண்டிருந்த அந்தச் செய்திகளை அறிந்துகொள்ள இப்போது சான்று தேவையாய் இருக்கிறது. பல வகைகளில் அவை தப்பானவை போலவும் தோன்றுகின்றன.

காந்திசொன்ன அடிப்படையான செய்தி என்ன? அடிக்கடி அவர் மக்களுடைய பொருள்நிலையை உயர்த்த வேண்டும், பட்டினியையும் நோயையும் போக்கவேண்டும், என்று சொன்னது உண்மைதான். இவற்றை எல்லாம் அவர்

மறக்கவில்லை. அசட்டையும் செய்யவில்லை. உண்மையில் இவற்றைப்போக்க அவரால் ஆன எல்லாம் செய்தார். அதே சமயத்தில் எல்லாவற்றையும் தெய்விக ஒழுக்கம் என்ற அடிப்படையில் அமைத்துவந்தார். இந்த அடிப்படை இன்று காணக்கூடவில்லை. ஆனால் இந்த அடிப்படையின்மேல் நாம் நமது எதிர்காலத்தைச் செய்து அமைத்தால் உறுதியானதாகவும் பெருமையுடையதாகவும் அதனை உருவாக்க முடியும்.

ஆகவே என்னை இந்த நிலையத்திற்கு வருமாறு அழைத்த தற்கு, இந்த எண்ணத்தோடுதான் மகிழ்ச்சியாக ஒப்புக் கொண்டேன். ஏன் என்றால், இத்தகைய நிலையங்களிலிருந்து தெய்வ உயிர்ப்பு அடையக்கூடும் என்று எண்ணினேன். அந்த உயிர்ப்பு நம் எல்லோருக்கும் தேவை. என்னைப் போன்ற வர்களுக்கு மிகுதியும்தேவை. இத்தகைய நிலையங்களில் இருந்து நான்பெறும் நன்மையை மற்றவர்களுக்குச் சொல்லி என்செல்வாக்கினால் செம்மைப்படுத்தக்கூடும் என்று நம்பு கிறேன் நான். ஆகவே, சுவாமிஜி அவர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த நிலையத்தை அமைத்தவர்களுக்கும் நன்றி. அவர்களுடைய ஆசியாலும் பிரார்த்தனையாலும் நமது நாட்டின் மகத்தான சீரமைப்பின் வேலையை வெற்றிகரமாகச் செய்து முடிக்கமுடியும் என்று நான்நம்புகிறேன் (கரகோஷம்).

---

## புண்ணியமே தேடும் பொருள்

எப்பொழுதும் உடம்பையே போற்றிவரின், உயிரைப் போற்றுதல் என்று? உயிரை அறிந்திருக்கின்றாயோ? அறிந்தால், உயிர்க்காக இது வரை என்னசெய்தாய்? உணவும், உடையும், பொன்னும், பொருளும் தேடினால் உயிர்க்குப் பயனுமோ? உயிரொடு தொடர்வன புண்ணிய பாவங்கள். "பற்றித் தொடரும் இருவினைப் புண்ணிய பாவமுமே" பாவம் தொடர்ந்தால், செல்லும் உலகிலும் தீராத்துயரமே. சிவ புண்ணியம் தொடர்ந்தால் நீங்காத இன்பமாம். ஆதலின், புண்ணியத்தையே தேடு.

"புண்ணியம் ஆம். பாவம் போம். போனநாட் செய்தஅவை
மண்ணிற் பிறந்தார்க்கு வைத்தபொருள்—எண்ணுங்கால்
ஈதொழிய வேறில்லை எச்சமயத் தோர் சொல்லும்.
தீதொழிய. நன்மை செயல்."

(ஒழிய - ஒழிக. செயல் - செய்க).

# முப்பொருள் விளக்கம்

வித்துவான், திரு. சி. அருணைவடிவேலு முதலியார் அவர்கள்
தமிழாசிரியர், பச்சையப்பன் உயர்நிலைப்பள்ளி, காஞ்சிபுரம்.

(மலர் 14- இதழ் 12. தொடர்பு.)

வேற்றுநூல்களின் கொள்கைகள் எல்லாம் தன்னுள் அடங்கத் தன்கொள்கை அவற்றுள் அடங்காது அவற்றின் வேருய் நிற்கும் நூல்யாது? அதுவே உண்மைநூல் எனவும் அதன்கொள்கையே உண்மைக்கொள்கை எனவும் உணர்ந்து கொள்ளப்படும். அங்ஙனம் நோக்குழி, மெய்கண்ட நூல்களும் அவற்றின் கொள்கையுமே அவ்வாறுள்ளன.

இன்னும், ஓர் உண்மையை நூலும், ஆராய்ச்சியும், அநுபவமும் என்னும் மூன்றனேடும் பொருந்த உணர்த்துவோனே நல்லாசிரியன் என்ப; அங்ஙனமே மெய்கண்டநூல்கள் அருள் நூற்கொள்கைகளை அளவை நெறியாற் செய்யப்படும் ஆராய்ச்சியின் வைத்து, அநுபவத்தோடும் பொருந்தக் காட்டி இனிது உணர்த்துகின்றன. இவற்றையெல்லாம் யாம் ஈண்டு உணர்த்துமாறு பற்றி நீ தானே பின்னர் உணர்ந்து கோடற் குரியவனுவை. அது நிற்க. இறைவனுவான் யார்? "ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள்தருவாய்" எனவும் "படைப்பாய் காப்பாய் துடைப்பாய் போற்றி - இடரைக் களையும் எந்தாய் போற்றி' (திருவாசகம் போற்றித்திருவகவல்) எனவும் அருளிச்செய்தவாறு உலகத்தைத் தோற்றுவித்தல், நிறுத்தல் ஒடுக்குதல் என்னும் முத்தொழிற்படுத்தி, அவை வாயிலாக உயிர்களின் கட்டறுத்து வீடுபெறச் செய்வானே இறைவனுவான்.

மாணுக்கன் ஐயம்

அற்றேல், அத்தகைய இறைவன் உளன் என்பது காட்சிக் கெய்தாமையின் அதனைத் துணியுமாறென்னை?

ஆ. விளக்கம்

ஐயுறுபொருளை உணர்தற்குக் காட்சிமட்டும் கருவியன்று. வேறும் கருவிகள் உள; அவையாவும் அளவை எனப்படும் ஆதலின், அளவையின் இயல்பு ஈண்டுச் சிறிது உணரற்பாற்று. (அளவை - அளத்தற்கருவி).

2. அளவையியல்

அளவையை ஒருசாரார் காட்சி, கருதல், உரை, இன்மை, பொருள், உவமம் என அறுவகைப்படும் எனவும், மற்றொரு சாரார் அவற்றோடு ஒழிபு, உண்மை, வழக்கு, இயல்பு என்ற நான்கைக்கூட்டிப் பத்துவகைப்படுமெனவும், வேறு ஒரோவொரு சாரார் மேலும் பலவகைப்படும் எனவும் கூறுவர்; ஆயினும் அவையெல்லாம் காட்சி, கருதல், உரை என்னும் மூன்றனுள் அடங்கும் என்றுணர்க.

வடநூலார் அளவையைப் 'பிரமாணம்' எனவும், காட்சியைப் 'பிரத்தியக்கம்' எனவும், உரையை 'ஆகமம்' எனவும், இன்மையை 'அநுபலத்தி' எனவும், பொருளை 'அருத்தாபத்தி' எனவும், உவமத்தை 'உவமானம்' எனவும் ஒழிபைப் 'பாரிசேடம்' எனவும், உண்மையைச் 'சம்பவம்' எனவும், வழக்கை 'ஐதிகம்' எனவும், இயல்பைச் 'சுபாவம்' எனவும் கூறுப. கருதலளவை 'வழியளவை' எனவும்படும்.

> "அளவை காண்டல் கருதலுரை அபாவம் பொருளொப் பாறென்பர்
> அளவை மேலு மொழிபுண்மை ஐதிகத்தோ டியல்பெனநான்
> களவை காண்பர், அவையிற்றின் மேலு மறைவர் அவையெல்லாம்
> அளவை காண்டல் கருதலுரை என்றிம் மூன்றி னடங்கிடுமே"

என்பது சிவஞான சித்தியார்.

இதனால் காட்சி, கருதல், உரை என்னும் மூன்றுமே சிறப்புடையஅளவை என்பது பெறப்பட்டமையான் அவற்றின் இயல்பு வருமாறு :-

(தொடரும்)

# சொல்லுணர்வு

சிரோமணி, திரு. கே. இராஜகோபால சாஸ்திரியார் அவர்கள்
வடமொழிப் பேராசிரியர், ஆதீனப் பல்கலைக் கல்லூரி, தருமபுரம்.

நாம் கண்களால் பொருள்களைக் காண்கிறோம். காதுகளால் ஓசையைக் கேட்கிறோம். நாவினால் சுவைகளையும், மூக்கினால் நாற்றங்களையும், தோலினால் சீதம் உஷ்ணம் முதலிய ஸ்பர்சங்களையும் அறிகிறோம். இவ்விதம் கண் முதலிய ஐம்பொறிகளால் நமக்கு உண்டாகும் அறிவு காண்டல் (பிரத்யக்ஷம்) எனப்படும். கண்டது கொண்டு காணாததை ஊகித்து அறிதல் கருதல் (அநுமானம்) எனப்படும். இவ் இரண்டு பிரமாணங்களைத் தவிர மூன்றாவதாக உள்ளது (சப்த பிரமாணம்) உரை என்பது. இப்பிரமாணத்தால் எவ்விதம் அறிவு மனிதனுக்கு ஏற்படுகின்றது என்பதை விரித்துரைப்பதே இக்கட்டுரை.

ஒருவன் தன் மனத்திலுள்ள எண்ணங்களைப் பிறர்க்குத் தெரிவிப்பதற்காக வாக்கியங்களைக் கூறுகிறான். மற்றவன் செவியினால் அவ் வாக்கியங்களிலுள்ள சொற்களை அறிகிறான். இவ்விதம் செவியால் முதலில் சொல்லறிவு (பதஞானம்) ஏற்படுகிறது. இந்த அறிவு பிரத்யக்ஷமாகும். (நுட்பமாக ஆராய்ந்து பார்த்தால் இந்தச் சொல்லறிவும் பல எழுத்துக்களின் அறிவு முதலில் உண்டாகிய பிறகு அவ்வெழுத்தறிவினின்று உண்டான சொல் நினைவாகத்தான் (பதஸ்மரணமாக) ஆகும். இதைப்பற்றிப் பிறகு ஆராய்வோம். சொல்லறிவினின்றும் அச்சொற்களின் பொருள் நினைவு (பதார்த்த ஸ்மரணம்) ஏற்படுகிறது. பிறகு பொருள் நினைவினின்று வாக்கியத்தின் பொருள் அதாவது வாக்யார்த்தம் அறியப்படுகிறது. இந்த அறிவு வாக்கியார்த்தபோதம் ஆகும். இதைத்தான் சாப்த போதம் எனத் தார்க்கிகர் கூறுவர். இந்தச் சாப்தபோதமே சொல்லுணர்வு என்று ஈண்டுக் குறிக்கப்பட்டிருக்கிறது.

யானை என்று ஒருவன் நம்மிடம் கூறினால், முன்னே நான்கு எழுத்துக்களால் ஆகிய யானை என்ற சொல்லறிவு செவியினால் பிரத்யக்ஷமாக உண்டாகிறது. பின்னர் அவ்வறிவினால் மனத்தில்

கறுத்துப் பருத்த சரீரமும் துதிக்கை முதலியனவுமுடைய ஓர் உருவத்தின் நினைவு உண்டாகிறது. நமது பக்கத்திலுள்ள, தமிழ்மொழி யறிவில்லாத ஆங்கிலேயன் காதில் யானை என்ற சொல் விழுந்தபோதிலும் சொல்லறிவையுண்டுபண்ணுமே யல்லாது யானையின் நினைவினை உண்டுபண்ணுவதில்லை. யானை என்ற சொல்லிற்கும் கறுத்த உருவமுடைய விலங்கிற்கும் உள்ள ஒரு தொடர்பை (சம்பந்தம்) அந்த ஆங்கிலேயன் அறியவில்லை. ஆதலால்தான் அவனுக்குச் சொல்லறிவு ஏற்படினும் அந்தப் பத ஞானத்தினின்று பொருள் நினைவு ஏற்படவில்லை.

சொல்லிற்கும் பொருளிற்கும் உள்ள தொடர்பு (சம்பந்தம்) விருத்தி எனப்படும். யானை என்ற சொல் துதிக்கை முதலியனவுடைய ஜந்துவை உணர்த்தும் பொழுது அச்சொல்லிற்கும் அந்த ஜந்துவிற்கும் உள்ள தொடர்பு சக்தி எனப்படும். சக்தி என்ற தொடர்பினல் உணர்த்தப்படும் பொருள் சக்கியம், அல்லது வாச்சியம் என்று கூறப்படும். சக்தி என்ற தொடர்பினல் பொருளை உணர்த்தும் சொல் சக்தம் அல்லது வாசகம் எனப்படும். பருத்த உருவமுடைய ஒரு மனிதர் வருகிருர். அவரைக்கண்டு யானை வருகிறது என்று கூறினல், இவ்விடத்தில் யானை என்ற சொல், அச்சொல்லின் இயற்கைப்பொருளை உணர்த்ாது, அதையொத்த வேருெரு பொருளை உணர்த்துகிறது. ஆதலால் யானை என்ற சொல் இங்குச் சக்தியினல் பொருளை உணர்த்தவில்லை. இவ்விடத்தில் யானை என்ற சொல்லிற்கும், பருத்த மனிதர் என்ற பொருளுக்கும் உள்ள தொடர்பு லக்ஷணை எனப்படும். பருத்த மனிதரை உணர்த்தும் யானை என்ற சொல் அம்மனிதருக்கு லக்ஷகம் ஆகும். யானை என்ற சொல்லுக்கு அம்மனிதர் லக்ஷ்யம் ஆவர். இந்தச் சக்தி லக்ஷணை என்ற இரண்டுவித தொடர்புகளையே சொல்லுக்கும் பொருளுக்குமுள்ள தொடர்பாக எல்லாச் சாஸ்திரக்காரர்களும் கூறுவர்.

அணியிலக்கணம் வல்லுநர்கள் இவ்விரண்டுவிதத்தொடர்புகளைத் தவிர 'வியஞ்சனை' என்ற ஒரு புதுவகையான தொடர்பையும் கூறுவர். சொற்கள் வியஞ்சனை என்ற தொடர்பினல் பொருளை உணர்த்தும் பொழுது வியஞ்சகம் என்று சொற்களும்

வியங்கியம் (த்வனி) என்று பொருளும் கூறப்படும். சக்தியை 'அபிதா' என்றும் அதனுல் உணர்த்தப்படும் இயற்கைப்பொருளாகிய வாச்சியத்தை 'அபிதேயம்' என்றும் கூறுவதுண்டு.

யானேயையும், அதன் பாகனேயும் தினந்தோறும் குளத்தங் கரையில் சேர்த்துப் பார்த்துவருகிறேம். நம்மையறியாமலேயே யானேக்கும் பாகனுக்கும் உள்ள ஒரு சம்பந்தமும் அறியப் படுகிறது. ஒரு நாள் வேறு ஒரு மனிதனுல் அந்த யானே ஓட்டப்பட்டுவருகிறது. இப்பொழுது யானேயைக் கண்டதும் அந்த யானேயுடன் தொடர்புகொண்டிருந்த பழைய பாகனின் நினைவு ஏற்படுகிறது. இதனுல் ஒன்றுக்கொன்று தொடர் புள்ளனவாக அறியப்பட்டிருந்த பொருள்களுள் ஒன்றன் அறிவு மற்ருென்றன் நினைவை உண்டுபண்ணுகிறது என்பது புலப் படும். சொல்லும் பொருளும் ஒன்றற்கொன்று தொடர்புடை யனவாக நம்மால் அறியப்பட்டிருந்தால் அவற்றுள் ஒன்ருன சொல் அறியப்பட்டவுடன் அதன் தொடர்புள்ள பொருளும் நினைவுக்கு வருகிறது.

சக்தி, லக்ஷணு, வியஞ்சனு என்று மூன்று வகையாகக் கூறப்பட்ட, சொல்லுக்கும் பொருளுக்குமுள்ள சம்பந்தமாகிய விருத்தி எவ்விதம் அறியப்படும்? சக்தி என்ற தொடர்பு எங்குப் பயன்படும்? லக்ஷணு எவ்விடத்தில் உபயோகிக்கப் படவேண்டும்? வியஞ்சனு விருத்தியினுல் எவ்வெவ்விடங் களில் பொருள் கூறலாம்? அவைகளின் உட்பிரிவுகள் என்ன? அவைகளின் பிரிவுகள் என்ன? அவைகளின் ஸ்வரூபம், இலக் கணம் யாவை? இவைகளைப்பற்றி இனி கூறவேண்டும்.

சொல்லிற்கும், அதன் உண்மையான (இயற்கையான) பொருளுக்குமுள்ள தொடர்பு சக்தி. இன்னின்னசொற்களால் இன்னின்ன பொருள்கள் உணர்த்தப்படவேண்டும் என்று ஈசன் விரும்புகிருன். இவ்விதமான ஈசனது விருப்பமே சக்தி. ஈசன் எல்லாமுணர்ந்தவர்; முக்காலமும் அறிந்தவர். ஆதலால் உலகிலுள்ள எல்லாப் பொருள்களைப்பற்றியும் அவற்றிற்குரிய சொற்களைப்பற்றியும் ஈசன் இச்சொற்களால் இவை உணர்த்தப் படவேண்டுமென்று விரும்புகிருன். ஆதலால் ஈசனது விருப்பமே சக்தி. உலகிலுள்ள பொருள்கள் பல. அவற்றைப் பற்றித் தனித்தனியாக, 'இச்சொல்லால் இது உணர்த்தப்பட

வேண்டுமென்று ஈசனுக்கு விருப்பம் கற்பித்தால், ஈசனுடைய விருப்பங்கள் எண்ணிறந்தனவாகும். ஆதலால் சில பொதுப் படையான விருப்பங்களும் உள. உலகில் பிறக்கும் குழந்தைகளுக்குப் பெற்ருேர் அல்லது போஷகர்களால் வைக்கப்படும் பெயர், அக்குழந்தைகளை உணர்த்தும் சொல்லாகட்டும் என்பன போன்றவை பொது விருப்பங்களாகும்.

ஈசன் பெயரைக் குழந்தைகளுக்கு இட்டால், அவைகளைப் பெயர் சொல்லி அழைக்கும் பொழுதெல்லாம், நம்மையறியாமலேயே ஈசன் நாமத்தை உச்சரித்த புண்ணியம் கிடைக்கும் என்ற உயர்ந்த நோக்கம் கொண்டு முன்னேர்கள் கொண்ட வழியை விட்டு, மனம்போனபடி, கல், மண் என்று பெயர் வைக்கின்றனர். இச்சொற்களும் பொருளை உணர்த்துகின்றன. மேலும் பாணினி முதலிய இலக்கணக்காரர்களும் தற்கால விஞ்ஞானிகளும், குழூஉக்குறிகளைக் கூறுகின்றனர். இவைகளும் பொருளை உணர்த்துகின்றன. இப்படியெல்லாம் ஈசன் விரும்பினுன் எனக் கூறுவது பொருந்துமா? ஆதலால் ஈசனது விருப்பம் என்னுமல் விருப்பம் சக்தி என்று கூறவேண்டும். பாணினியின் விருப்பமும், சில விஞ்ஞானிகளின் விருப்பமும் இருப்பதால்குழூஉக்குறிச் சொற்களும் பொருளை உணர்த்துகின்றன. சிலர் ஒன்றுகூடி இராமனுக்கு "மசால்வடை மிகுதியாகத்தின்றதன்காரணமாக" மசால்வடை என்று பெயரிடுகின்றனர். அக்கூட்டத்தினருக்கு மசால்வடை என்ற சொல் இராமனையுணர்த்தும். மற்றவர்களுக்கு இராமனையுணர்த்தாது. அக்கூட்டத்தினர், மசால் வடை என்ற சொல்லை இராமனை உணர்த்த உபயோகிக்கின்றனர் என்று அவர்களுடைய விருப்பம் மற்றவருக்கும் தெரியுமானுல் அவரும் மசால்வடை என்ற சொல்லால் இராமனையுணர்வர். ஆதலால் "விருப்பம் சக்தி" என்று கூறுகின்றனர் வேறு சிலர்.

முக்காலமும் முழுதுமுணர்ந்த ஈசனுக்கு இவைகளைப் பற்றியும் பொதுப்படையாக விருப்பம் இருப்பதாகக் கூறலாம். இதில் பிடிவாதம் கொள்ளவேண்டியதில்லை. ஈசனுடையதோ, ஒரு கூட்டத்தினருடையதோ, ஒரு மனிதனுடையதோ, ஏதோ ஒரு விருப்பம் சக்தி என்றவரையில் அமைவோம். (தொடரும்)

# பூலோக விமர்சனம் (10)

## (பதினேழாம் நூற்றுண்டு வேங்கடாத்வரீ)

தமிழில் ஆக்கியவர்

**பிர்மஸ்ரீ ய. மகாலிங்க சாஸ்திரிகள் அவர்கள் M. A., B. L.,**

தருமபுர ஆதீனப் பல்கலைக்கல்லூரியின் முன்னுள் முதல்வர்.

(முன் இதழ்த் தொடர்ச்சி)

விச்வாவஸு திருவேங்கடம் மலைப்பக்கமாக விமானத்தைச் செலுத்திக்கொண்டு சென்று வேங்கடமலையைக்கண்டு களித்துக் கைகூப்பி வணங்கிப் பின்வருமாறு வருணிக்கிருர். ஸ்ரீநிவாசன் வசிக்கும் இந்தச்சேஷாத்ரீயில் தமாலதிலக ஸால விருக்ஷங்களும் ஓட்டுமாமரங்களும் மற்றும் பெரிய தருக்களும் அடர்ந்து ஓங்கி வளர்ந்திருக்கின்றன. இந்தச் சைலத்தைப் பார்த்தாலே அஞ்ஞானம் நிவர்த்தியாகும். க்ஷேமமுண்டாகும். பரமரிஷிகள்கூட இந்தப் பர்வதத்தில் செடியாகவாவது கொடியாகவாவது மிருகமாகவாவது பக்ஷியாகவாவது பாம்பாக வாவது புலியாகவாவது குகையாகவாவது நீர்ப்பெருக்காக வாவது கல்லாகவாவது பிறத்தலை வேண்டுகிருர்கள். மற்ற மலைகளைவிட இது பெருமை வாய்ந்தது என்பதற்கு என்ன சந்தேகம்? வைகுண்டத்தையேவிட்டுவிட்டு லக்ஷ்மீஸமேதராய் ஸ்ரீமந்நாரயணன் இங்கு வசித்துக்கொண்டு பல லீலைகள் புரிகிருன் அல்லவா?

விச்வாவஸு பகவானைத் தியானத்தில் பார்த்து ஆனந்த பரவசராய்த் துதிக்கிருர்.

கர்மகாண்டம் ஞானகாண்டம் உபாசனுகாண்டங்களினுல் வேதங்களில் குறிப்பிடப்படும் பரமனை, லோகரக்ஷகனை, விருக்ஷகிரிநிவாசனை, லக்ஷ்மிசமேதனை, பக்கதர்களுக்குஅருளும் ஸ்ரீநிவாசனை நித்தியனை நிரந்தரமாகத் தியானிக்கிறேன்.

கிருசானு—ஏது தியானம் வெகுகடுமையாக இருக்கிறதே?

விச்வாவஸு—பகவத் பக்தியின் ரசத்தை அறிந்தவன் எவன்தான் சிலகாலம் தியானத்தில் ஈடுபட மாட்டான்?

கிருசானு—நான் அதற்காகச்சொல்லவில்லை. இந்த ஸ்வாமி பணம்பிடுங்கி ஸ்வாமி அல்லவா! ஏதாவது வேண்டியதற்கோ வேண்டாததற்கோ பக்தியுடன் ஒருவன் பிரார்த்தனை செய்து கொண்டு கார்ய சித்தியானபிறகு உண்டிக்குப் போடுவதாய் வேண்டிக்கொண்ட திரவியத்தை அக்காலத்தில் செலுத்தா விடில் அவனைப் பலவிதமாகப் பயமுறுத்தி வட்டியுடன் காணிக்கை செலுத்தும்படி இவர் செய்கிறார். மேலும் இவர் பரம ஏழையைப்போல் ஒருசமயம் இந்தக் காட்டில் போய்க் கொண்டிருக்கும் ஒருவனை அணுகி எனக்குத் தாகமாக இருக் கிறது கொஞ்சம் தண்ணீர்கொடுத்து உதவவேணும் என்று கெஞ்சவில்லையா? மற்றொரு சமயம் மலையின்பேரில் குளம் வெட்டும் தர்மத்தைச் செய்துகொண்டிருந்த ஒருவருக்கு இருவர் மண்தூக்கவில்லையா? இன்னும் ஒரு சந்தர்ப்பத்தில் ஒருவர் இருவருக்கு மண்ணினால் ஆக்கப்பட்ட மாலையைக் கொடுக்க அதையும் வாங்கித் தன் தலைமேல் இவர் சுமக்க வில்லையா? இவர் சுருதிகளால் த்ரிலோகாதிபதி என்று கொண்டாடப்படும்போது இத்தகைய கீழ்த்தரமான காரியங் களைச் செய்யலாமா!

விச்வாவஸு—ஏன் இப்படிக் கருணாநிதியான வேங்கடா சலபதியைக் குறைகூறுகிறாய்? பக்தர்களை அனுக்கிரஹிக்கும் பொருட்டுப் பரமபுருஷன் பல லீலைகளைச்செய்கிறான். அவன் ஸ்ருஷ்டி, ஸ்திதி, ஸம்ஹார கர்த்தாவானாலும் கருணையினால் மனுஷ்ய ரூபமாகவந்து பலவிதமாக நடித்து ஆஸ்ரித ஸம் ரக்ஷணம் செய்கிறான் - அதை ஒரு குறையாக எடுத்துக்கூற வந்துவிட்டாயே!

மற்றும் நீ அவரைப் பணத்தாசைபிடித்தவரென்று தூஷித் தலும் தகாது. ஸ்ரீகிருஷ்ணபகவான் குசேலரிடமிருந்து பிடி அவலைப் பெற்றுக்கொண்டு அஷ்ட ஐஸ்வரியங்களையும் அவருக்குத் தந்ததுபோல் ஸ்ரீநிவாசன் சிறிய காணிக்கைகளை வாங்கிக்கொண்டு இஷ்டமான வரங்களைப் பக்தர்களுக்கு அளிக்கிறார். இல்லாவிட்டால் அவருக்கு நாம் கொடுத்தா நிரப்பவேண்டும்? அவர்பத்தினியே மகாலக்ஷ்மி. அவர்வசிப்பது ஸஹஸ்ர வஸுவான (பெரியதனவந்தரான) சூரியனுடைய பிம்பத்தில். அவர்மைத்துனனோ குவலயபதி(பூமண்டலாதிபதி) சந்திரன். அவருடைய மாமனாரோ ரத்னங்களை விளைவிக்கும் சமுத்திரராஜன். அப்படியிருந்தும்அவர் நம்மிடம்காணிக்கையை

வாங்கிக்கொள்கிருர் என்ருல் அது நம்மை அனுக்கிரஹிக்கும் பொருட்டாகவல்லது அவரிடமில்லாததற்கா? இதை நீ ஆலோசித்துப்பார்! அனந்தகல்யாணகுணவிசிஷ்டரான, ஸர்வபாபஹரனை லோகநாதனை, ஸ்ரீநிவாஸன் என்ற பெயருடன் நமக்குக் காக்ஷியளிக்கும் பரப்பிரும்மமான இவருடைய குணுதிசயங்களைப் பிருகஸ்பதியாலும் வருணிக்க இயலுமா? பகவான் வெங்கடேசனுடைய பெருமை என்ன; பெருந்தன்மை என்ன; காந்திஎன்ன; மோக்ஷம்வரையிலுள்ள மங்களங்களைக் கொடுக்கக்கூடிய தன்மைஎன்ன; அளவுகடந்த தயவென்ன; ஔதார்யமென்ன; ஆற்றல் என்ன; இப்படியாக அவருடையகுணங்களை எடுத்துக்கூற முயன்ருல் வாக்கிற்குச் சக்தியேது? வாக்கு ஸ்தம்பித்துவிடும். குணங்களின் எண்ணிக்கை முடிவடையாது. ஒருவாறு வேதங்கள்தான் அவருடைய பரத்துவத்தையும் பிரத்யக்ஷத்தையும் எடுத்துக்கூற முயலுகின்றன. நமக்கும் நம்பிக்கையூட்டுகின்றன.

தங்கத்தாமரைக்கு மணம் வாய்த்தாற்போல் நமக்கு அப்பால் உள்ள இவர் நமக்கு எளிதில் சேவிக்கக்கூடியவராக இந்தசேஷாத்திரியைவந்து அலங்கரித்து வீற்றிருக்கும் பெருமை மகிழ்ச்சியைத்தருகிறது. இங்கிருந்துகொண்டு இவர் துஷ்டநிக்ரஹசிஷ்டபரிபாலனம் செய்து வருகிருர். இவருடைய அநுக்கிரஹ மஹிமையால் ஊமை பாடும் கவிதையைச் செவிடன் கேட்டு ஆனந்திக்கிருன். கையில்லாதவன் அதை எழுதக் கண்ணிழந்தவன் படிக்கிருன். முடவன் மலையேறி வருகிருன். மலடி கைக்குழந்தையுடன் மெல்லமெல்ல நடந்துசெல்கிருள். இந்தப் பர்வதத்தில் குரங்குகள் அதிகம் நடமாடுகின்றன. அவைகள் இந்தப் பர்வதத்தை ஸ்ரீ ராமபிரான் என்று எண்ணிக் கொண்டனபோலும்! ஏனெனில் குகனேடும் லக்ஷமணன் முதலிய தம்பிகளுடனும் கூடிய ராமன்போல் இந்தப் பர்வதம் குகையோடும் தாழ்வரைகளோடும் கூடிஇருக்கிறது. சூரிய வம்சத்தில்பிறந்தான் ராமன். பிரகாசமான மூங்கில்காடுகளுடன் கூடிய இந்தப் பர்வதம், ஸாதுக்களால் துதிக்கப்படும் மஹோன்னதமான இந்தப்பர்வதம் ராமனை நினைவூட்டுகிறது அல்லவா? சேஷன் என்ற பாம்புருபமான இந்தப் பர்வதத்திற்குக் கால்கள் (பாதங்கள்–தாழ்வறைகள்) இருப்பது இது ஆச்சர்யம். ஒரு புறமிருக்க இங்கு மேகம் (ஸருமான்) மின்னல்கொடியை (லக்ஷ்மியை) மார்பில் தரிப்பதுபோல் மின்னல்கொடியும் மேகத்தை (கொங்கைகளை) மார்பில் தரித்தல் மிகவும் வியக்கத்தக்கது.

# அருளமுது

வித்துவான் திரு. சொ. முத்தையா தேசிகர் அவர்கள்
ஆசிரியர் பயிற்சிப்பள்ளி, தரங்கை.

நமது சைவ சமயம் தொன்மையானது. நம் நாட்டில் நிலவும் ஏனையமதங்கள் எல்லாம் காலவரையறைக்குட்பட்டன. பௌத்தமா? கி. மு. இரண்டாம் நூற்ருண்டு. இஸ்லாம் மதமா? அது கி. பி. ஐந்தாம் நூற்ருண்டையது. கிறித்துவ மதமா? அது கி. பி. முதலாண்டையது. இவ்வாறு கணித்துக்கூற முடியாதது நம் மதம். நம் மதத்தின் முதல்வரோ ஆலம் உண்ட நீலகண்டர்.

அண்மையில்கண்டுபிடிக்கப்பட்ட ஹாரப்பா மொஹெஞ்சதாரோ புதைபொருள் இலாகாத்தலைவர் கூறுவதைக்காண்க. 'இங்குள்ள மக்களது சமயம், சக்தி, சிவம், ஆவி, வழிபாடேயாம். அது இப்போதுள்ள இந்துமதத்தினின்றும் பிரிக்க முடியாதது' என்கிருர். இச் சக்தி வழிபாடு சிவ வழிபாட்டின் ஒரு பகுதி என்பதை டாக்டர் ஜி. யூ. போப் முதலியவர் விளக்கியுள்ளனர். ரெபர் ஜான் மார்ஷல் என்பார் 'ஹாரப்பா புதைபொருள் அதிசயங்களுள் சிறந்தது சிவ வழிபாட்டின் தொன்மையே' என்கிருர். அங்குக்கண்டு பிடிக்கப்பட்டுள்ள கலைகளுள் மும்மூர்த்தியினது உருவமே சிறந்தது. பொருள்களின்மீது காளையின் உருவமே காணப்படுகிறது. ஆகவே அப் புதைபொருள் இலாகாவினர் அந்நகரின் நாகரீககாலம் கி. மு. 5000 ஆக இருக்கலாமென்கின்றனர். இதுகாறும் கூறியவற்ருல் நமது சமயம் தொன்மையானது என்பது விளங்குகிறது.

சங்கநூல்களுள் நமது சமயம் பேசப்படுகிறது. கொற்றவை, காளி, உமை, பார்வதி ஆகிய தெய்வங்கட்கு நாயகன் சிவன் என்று பேசப்படுகிறது. "யாதுமூரே யாவருங்கேளிர்" என்ற புறப்பாட்டில் 'ஆருயிர் முறைவழிப்படூஉம் என்பதைத் திறவோர் காட்சியில் தெளிந்தனம்' என்பதிலிருந்து அவர்களது சமயக்கொள்கை தெற்றெனெ விளங்குகிறது.

முன்ஞேர் கடவுளை முந்நிலையில் வழிபட்டனர். 1. கடவுள்-கடந்தநிலை - மனம் வாக்குக்காயங்களால் அறியவொண்ணுதது. 2. எல்லாவற்றுள்ளும் கலந்த நிலை - மனம் வாக்குக்காயங்

களால் அறியக்கூடியது. 3. குருவாயநிலை. வழிபாட்டிற்குரியதாக இரண்டாவது நிலையையே கொண்டனர். சமயாசாரியார்கள் கொண்டதும் இந்நிலையே.

"விறகில் தீயினன் பாலில் படுநெய்போல்
மறைய நின்றுளன் மாமணிச் சோதியான்"

என்ற அப்பரடிகளின் அருள்வாக்கினை உன்னுக. நாம் இறைவனை ஏன் வழிபடவேண்டும்! இறைவன் கட்டு அற்றவன். தளை அற்றவன். பூரணன். இயற்கையாகவே அவனிடம் தண்ணளி மிகுந்துள்ளது. நீரில் தண்மையும் தீயில் வெம்மையும் இயல்பேயன்றோ. அதனால் அவன்புகழ் பேசின் நமது மருட்குணம்போய் அருட்குணம் வளருகின்றது. ஆதலால் அவனது அருள்சேர் புகழை இடையருது சிந்தித்தல் வேண்டும்.

"இருள்சேர் இருவினையும் சேராஇறைவன்
பொருள்சேர் புகழ் புரிந்தார் மாட்டு"

இறைவன் புகழ்பேசுவார் அடையும் பயனை வள்ளுவர் எவ்வளவு அழகாகக் கூறுகின்றார். குருவாகக் கடவுளைக் கண்ட பெருந்தகை மணிவாசகப்பெருமான் அவர்.

"எண்ணிறந்து எல்லையிலாதானே நின்பெருஞ்சீர்
பொல்லா வினையேன் புகழுமாறு ஒன்றறியேன்"

என்பதைக்காண, நாமும் இறைவனை இடையருது உன்னி உன்னி உய்வடைய வேண்டுவது இன்றியமையாதல்லவா!

இறைவனை இடைவிடாது சிந்திப்பதால் நாம் அடையும் பயன் பிறவாமையாகும். பிறந்த பிறவியின் வாயிலாய் இனிப் பிறவாத நிலையை யடைகின்றோம்.

"இக்காயம் நீக்கி இனியொருகாயத்தில்
புக்குப்பிறவாத போங்கதி தேடுமின்" —தாயுமானவர்

'பிறவிப்பெருங்கடல்நீந்துவர் இறைவனடி சேர்ந்தோர்' என்பது பொதுமறை. "சாரிட்ட ஆணவக்கருவறையில் கட்டுண்டு கிடந்தேனை" அருள்புரிந்தாய் என்கிறார் தாயுமானார். பிறவியைப் பௌவம் என்றே மணிவாசகரும் பேசுகிறார். 'தனியனேன் பெரும்பிறவிப் பௌவத்தழுந்தி எவ்வத் தடந்திரையால் எற்றுண்டு' என்பதை நோக்குக.

ஆகவே அடியவர்களும் பெரியவர்களும் இறைவனை வாழ்த்துதலும், நற்கிரியை செய்தலும் அஞ்செழுத்து ஓது

துமே பிறவியாம் பௌவத்தினைக் கடக்கப்பெருந்தோணியா மென்றனர். இதற்காகவே பல கிரியைகளுள.

" நிலைபெறுமாறு எண்ணுதியேல் நெஞ்சே நீவா "

என்றபாடலை ஓர்க. இது சரியை மார்க்கத்துக்கு எடுத்துக் காட்டு. அதே நிலையில் குமரகுருபர அடிகளும் தேவியை வழிபாடு செய்வதைக் காண்மின்.

அவர் தேவியின்புகழ் பேசுவதால் வினைநீங்கும்; பௌவம் கடக்கப்பெறும்; பேறு பெறலாம் என நம்பினர். அவர் தமிழ் மொழியின் பயனாகவே கண்டார். அம்மையை வழிபட்டுப் பேறுபெற்றோர் அவர் முன்னால் தோன்றவே தனக்கும் அத் தகைத்தான அருள்புரியவேண்டும், இன்பமடைய வேண்டு மென்றே வேண்டுகிறார். நல்ல வேதக் கருத்துக்களை தமிழ்ப் பதிகத்தோடும் அருள் பாலித்த முலைப்பாலோடும் கலந்து உண்ட சிறப்பினாலேயே காழி நகர்ச்செல்வர் உய்திபெற்றார். மயிற்சேயும் களிறும் வளர்ந்திடுவதற்கும் காரணம் நின் கருணையே யன்றோ! ஆகவே அம்மையே! அருள் செவிலித் தாயே! என்னையும் தனது செல்வனாக ஏற்றுக்கொள் என்று விநயமாக வேண்டுகிறார்.

" செழுமறை தெளியவடித்த தமிழ்ப் பதிகத்தோடே...... கொட்டுக சப்பாணி என்று போற்றித் துதிக்கிறார்."

மணிவாசகரும் இறைவனை அருளமுது வேண்டுகிறார். ' அருளாதொழிந்தால் அடியேனை அஞ்சேல் என்பார் ஆரிங்கு, பொருளா என்னைப் புகுந்தாண்ட பொன்னே பொன்னம்பலக் கூத்தா......தெருளார் கூட்டமொடு காட்டாயேல் செத்தே போனால் சிரியாரோ, என்கிறார். ஆகவே இதுகாறும் கூறிய வற்றால் சைவசமயம் தொன்மையானது. முன்னோர் கடவுளை மூன்றுநிலையில் கண்டனர். அவற்றுள் இரண்டாவது நிலையே வழிபாட்டுக் குரியது. இறைவனை வணங்குவதால் மருள் நீங்கி அருள் உண்டாகும். அவ்வருளே பிறவியைப் போக்க வல்லது. அவ்வருள் தரும்படியே அம்மையை குமரகுருபர அடிகள் வேண்டுகின்றார். என்பனவும், மணிவாசகப்பெரு மானும் அவ்வாறேதான் உய்வதற்கு இறைவனை நோக்கி வேண்டுகிறார் என்பதும் பெறப்பட்டன. அருளமுதம் பெற நாமும் வழிபட்டு உய்வோமாக வளர்க! வழிபாடு.

# வள்ளுவரும் வாழ்க்கை நெறியும்

திரு. முத்துலட்சுமியம்மாள் அவர்கள்

திருவண்ணாமலை.

இப்பெரிய உலகின்கண் தோன்றி மறைந்து வாழ்ந்த அறிஞர் பலர். நாம் அவர்களை மறந்தாலும், அவர்கள் அறிந்துள்ள காப்பியங்களையும் அறநூல்களையும் என்றும் மறக்க இயலாது. தமிழகத்தில் தோன்றிய ஒரு பேரறிஞர் அளித்த ஒரு பெரு நூலே திருக்குறளாகும். அத்தகையபெரியார், வாழ்க்கை நெறியைப் பற்றித் தாமியற்றிய நூலில் என்ன கூறுகின்றார்? அதைக் காண்போம்.

திருவள்ளுவர் முதலதிகாரத்திலேயே கடவுள் வாழ்த்தைப் பாடியுள்ளார். தாம் எடுத்துக்கொண்ட நூல் சிறப்புற எழுதி முடிக்கப்பெறவேண்டும் என்கின்ற நோக்கத்தோடு, கடவுளை வணங்கி, நூலை எழுதப் புகுந்தார் திருவள்ளுவர்.

உலகில் தோன்றிய மக்கள் அனைவரும் இறைவனை வாழ்த்தி வழிபடவேண்டும். தனக்கு உவமை இல்லாதான் தாள்களை வணங்கி வருபவர்களுக்குப் பிறவி நோய் அற்றே போகும்.

"பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவனடி சேரா தார். (குறள்)

இறைவனை வழிபட்டு, ஒத்த அறிவும், பண்பும், கல்வியும் நிறைந்த ஒருவனும் ஒருத்தியும் ஒருங்கிணைந்து நடத்தும் இல்வாழ்க்கைக்கு அன்பும் அறமும் இயைந்திருக்க வேண்டும். அன்பு வளர வளர அறம் செழித்தோங்கும்.

அன்பில்லாதார் எல்லாப் பொருளையும் தமக்கே உரியராகவுடையர். அன்புடையார் பொருளேயன்றித் தம்முடம்புக்கு அங்கமாய எலும்பினையும் பிறர்க்கு உரிமையாக்கல் உடையர்.

"அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார்
என்பும் உரியர் பிறர்க்கு (குறள்)

அன்பு துணையாக அறமும் சிறக்கும். அதே அன்பு மறத்தை நீக்குதற்கும் துணையாய்நிற்கும். அதனால் அறத்தாற்றில் வளர்க்கும் அன்பு நெறியில் செல்லுவதாகவே இல்வாழ்க்கை நிகழவேண்டும். சிறிது மனமாற்றத்துடன் அன்பு வளர்ந்திடினும், வாழ்க்கை பயனற்றதாகிப்போகும்.

"அறத்திற்கே அன்புசார் பென்ப அறியார்
மறத்திற்கும் அஃதே துணை". (குறள்)

ஒருவனும் ஒருத்தியும் சேர்ந்து, அன்பின் வழியாகத் தோற்றிய அறம் நிறைந்த இல்வாழ்க்கையில் அவனும் ஒழுக்கமுடையவனாக இருக்கவேண்டும். அவளும் கற்புடையாளாகத் திகழவேண்டும்.

வாழ்க்கைத்துணையாவாள் யார்? கற்பினின்றும் வழுவாமல் தன்னைக்காத்துத் தன்னைக் கொண்டவனையும் உண்டி முதலியவற்றால் பேணித் தகை சான்ற புகழும் காத்து நற்குண நற்செய்கைகளினும் கடைப்பிடியுடையாளே பெண்ணாவாள்.

"தற்காத்துத் தற் கொண்டாற் பேணித் தகைசான்ற
சொற்காத்துச் சோர்விலாள் பெண்". (குறள்)

சான்றாண்மையுள்ள கணவன் யார்? பிறன் மனையாளை உட்கொள்ளாத பெரிய ஆண் தகைமை, சால்புடையார்க்கு அறனும் ஆகும். நிரம்பிய ஒழுக்கமும் ஆகும்.

"பிறன்மனை நோக்காத பேராண்மை சான்றோர்க்கு
அறன் ஒன்றோ ஆன்ற ஒழுக்கு". (குறள்)

மேற்கண்ட இலக்கணங்களுக்கு உரியவர்களாக அவனும் அவளும் சேர்ந்து நடத்தும் இல்வாழ்க்கை பெரிய இன்பம் அளிப்பதாகும். நல்ல வாழ்க்கைத்துணை ஒருவனுக்குத் திருவருளால் அமைந்தால் அவன் உலகவர்முன் ஏறுபோல் பீடு நடையுடன் செல்லக்கூடும். மாறுபடுமாயின் விளைவைக் கூறலும் வேண்டுமோ?

மங்கலமான மனைமாட்சிக்கு நன்கலமான நன்மக்கட்பேறு அவசியம் அன்றோ? ஒருவர் எவ்வளவுதான் பெருஞ் செல்வம் பெற்றிருந்தாலும் அவரைப் பெற்றோர் எனல் உண்டோ?

மிக்க நிலங்களையும் தோப்புத் துரவுகளையும் பெற்றிருந்தாலும் பெற்றோர் ஆகமுடியாது. பொன்னில் நிறைய வைரங்கள் இழைத்துத் தலைதொட்டுக் கால்வரை அணி அணியாய் அணிந்தாலும் அவளைப் பெற்றாள் என்றோ தாய் என்றோ அழைப்பதில்லை அல்லவா? இதைத்தான் வள்ளுவப் பெருந்தகையாரும் ஒருவன் பெறும் பேறுகளுள் அறிவு அறிந்த மக்களைப் பெறுதலல்லது பிறபேறுகளை யாம் மதிப்பதில்லை என்கின்றார்.

" பெறுமவற்றுள் யாமறிவதில்லை அறிவறிந்த
மக்கட்பேறல்ல பிற". (குறள்)

மழலை மொழி பேசும் பிள்ளைப் பேற்றை அடையாதவர்கள் பிறவி எடுத்ததின் பயனை ஓரளவிற்கு அறியாதவர்கள் எனலாம். தம் மக்களது மழலை கேளாதவர்க்குக் குழலோசையும் யாழோசையும் இனிய. கேட்டவர்க்கு மழலையே இனிது.

" குழலினிது யாழினிது என்பதம் மக்கள்
மழலைச் சொல் கேளா தவர்". (குறள்)

இங்ஙனம், அன்பும், அறமும், புதல்வர்ப் பேறும் நிறைந்து வாழும் வாழ்க்கையில், வரும் விருந்தினர்களைப் பரிவுடன் உபசரிக்கும் தன்மையும், பெரியோர்களிடத்தில் மிக்க அடக்கமும், கணவனுக்கும் மனைவிக்கும் தோன்ற வேண்டும். வரும் விருந்தினர்க்கு, இன்சொல் கூறி முக மலர்ச்சியுடன் அவர்களை அழைப்பின், அதுவே பெரு விருந்து அளித்ததற்கு ஒக்கும். முகனமர்ந்து, உப்பிலாக் கூழிட்டாலும் உண்பவர் அமிர்தம் என ஏற்பர். தன்னை நோக்கி வந்த விருந்தை நாள்தொறும் புறந்தருவானது இல்வாழ்க்கை வறுமையால் வருந்திக் கெடுவதில்லை.

" வருவிருந்து வைகலும் ஓம்புவான் வாழ்க்கை
பருவந்து பாழ்படுதல் இன்று". (குறள்)

விருந்தினரை ஓம்பி வாழும் வாழ்க்கையில் அடக்கமும் மிளிர வேண்டும். அடக்கம் அமரருள் உய்க்கும் அன்றோ? அடங்காமை ஆரிருள் உய்த்துவிடும். அதனால் கற்கவேண்டியவைகளைக் கற்று, கேட்கவேண்டியவைகளைக் கேட்டு, உள்ளம் அடங்கி வாழும் வாழ்க்கையை உடையார், வானுறையுந் தெய்வமாக வைத்து மதிக்கப்படுவார் என்கின்றார் வள்ளுவர்.

இல்லறத்தோடு கூடிவாழும் இயல்பினல் வையத்தின்கண் வாழ்பவன் வையத்தானே யெனினும், வானின்கண் உறையும் தேவருள் ஒருவனுக வைத்து நன்கு மதிக்கப்படுவான்.

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்". (குறள்)

இதனுல் நிலத்திற் பிறந்தவன் ஆனுலும் வாழ்தற்குரிய முறையில் வாழ்வானுகில், வானிற்சிறந்த தேவருள் ஒருவனுக மதிக்கப்படும் பெருமை அடைவான் என்றும், அவ்வுயர்வுக் குரிய நெறியே திருவள்ளுவர் கடைப்பிடித்தார் என்றும் அறியலாம்.

---

மதிப்புரை

## தேனும் அமுதும்

இந்நூல் மணிவாசகரின் திருவாசகத்தின் தேன் அமுது என்னும் சொற்கள் கொண்ட செய்யுட்களின் தொகுப்பு. தொகுப்பாசிரியர் சொக்கலிங்கத்தின் திருவருள் பெற்ற முத்த. வெ. சொக்கலிங்கம் செட்டியார் பர்யாயச் சொற்கள் வந்த செய்யுட்கள் இத் தொகுப்பில் சேர்க்கப்பட்டிருத்தலும், வேறு பொருளில் வந்த செய்யுட்கள் விடப் பட்டிருத்தலும், பொருளுணர்ச்சியோடு தொகுக்கப்பட்டமையைப் புலப்படுத்துவன. ராய. சொ. அவர்களின் நூன்முகம் சிறப்புடையது. ஊனைப்பெருக்கும் விருந்தளித்த தனது மகன் திருமண அன்பு அளிப் பாக உள்ளத்திற்கும் விருந்தளிக்கும் இந்நூல் வெளியிடப்பட்டுள்ளது

## முருகப்பெருமான் பிள்ளைத்தமிழ்

இந்நூல் தேவகோட்டை ஆலயத்தில் எழுந்தருளியுள்ள முருகன்மீது பாடப்பெற்றது. ஆசிரியர் வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகளவர்கள். வேலாயுதத்தின் அருள் பெற்ற இவர் அறுவகை இலக்கணம் முதலிய பல நூல்களை இயற்றியுள்ளார். சிறந்த அநுபூதிமான். குறிப்புரையுடன் கூடியமட்டிலும் பதம் பிரித்து இந்நூல் அச்சிடப்பெற்றுள்ளது. தன்னூரும், தாய்மொழியும் விண்ணுலகினும் சிறந்தனவெனக் கொண்டு நகரத்தார் பலருடைய பொருளுதவிபெற்று திருவாமாத்தூர் கௌமார சபையின் வெளியீடாக வெளியிடப்பெற்றது. முன்னுரையில் ஆசிரியரின் காலம், நூல்கள், சரிதம் முதலியன கூறப்பெற்றுள்ளன. விலை அணு 0—8—0. தி. செ. முருகதாசப் பிள்ளை, கௌமார மடாலயம், திருவாமாத்தூர், விழுப்புரம் போஸ்ட் என்ற விலாசத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

கே. இராஜகோபால சாஸ்திரிகள்.

# * சமயமும் அறிவும்

'தேனி'

உண்மையான அறிவு எது? கற்றநூல்களைக் கருத்தில் அடைத்துக் கொள்ளுவதா அறிவு? கேட்ட இடத்தில் அப்படியே சொல்லும் திறமா அறிவு? சாத்திர தோத்திரங்களில் வரி தவருமல், எழுத்துப் பிழையாமல், அசை வ்ழுவாமல் மனப்பாடம் செய்துகொள்ளும் நினைவுத்திறமா அறிவு? 'நூலகம் அழிந்துபோனாலும், போகட்டும்; அந்நூல்கள் யாவும்தாம் மூளையில் ஏறிவிட்டனவே' என்று முனைப்போடு மொழியும் மூளைத்திறத்திலா அறிவு இருக்கிறது? அறிவு இவையெல்லாம் இல்லை எனில் பின் எதுதான் அறிவு? அறிவு எங்கேதான் இருக்கிறது? ஆராய்ச்சித் திறத்திலா, அன்றி ஆரவாரத்தோடு பேசுவதிலா? நினைவுத் திறத்திலா அன்றி நிமிர்ந்து நின்று சொன்மாரி பொழிவதிலா? ஏட்டுப்பாடத்தை எண்ணி உரைப் பதிலும், கேட்பாரைக் கவரும்படிச் சொல்வன்மை பெறு வதிலும் இல்லை அறிவு.

நல்லன தீயனவற்றைப் பகுத்துணர்ந்து தீயனதள்ளி நல்லன கொள்ளும் நல்லறிவே அறிவு. எந்தப் பொருளை யாவர் சொன்னாலும் அப்பொருளின் நுண்பொருள் காண்பதே அறிவு. எந்தப்பொருள் எந்தநிறத்தில் - வண்ணத்தில் - சுவையில் - வடிவில் இருந்தாலும் அதன்கண் மெய்ப்பொருளைக்காணுவதே அறிவு. ஆம்; அதுவே திருவள்ளுவர் காட்டும் பகுத்தறிவுப் பாதை.

திருவள்ளுவர் காட்டும் பகுத்தறிவுப்பாதையிலே வறட்டுத் தன்மை இல்லை. வளம்பொழியும் வண்மை உண்டு. அழிவு பொங்கும் வன்பு இல்லை. அன்பு வழியும் இன்பம் உண்டு. மருள் நிறையும் குழப்பம் இல்லை. அருள் ததும்பும் தெளிவு உண்டு. குறளைப் புரட்டுங்கள். காணுமிடமெல்லாம் அறிவின் தெளிவைக் காணலாம். அப்படியானால் அந்தப்பாதையில் போய்த்தான் பார்க்கலாமே! தமிழர் நெறிதானே அது!

---

* 25—11—55 அன்று ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் திருவாய் மலர்ந்தருளியது.

பாதைக்குள் புகும்போதே அறிவின்பயனைத் திருவள்ளுவனார் எவ்வளவு தெளிவாகக் காட்டுகிறார்! துணிவான பேர்வழி தான் அவர். இல்லையேல் தொடக்கத்திலேயே நம்மை எச்சரிக்கைசெய்ய முற்படுவாரா? கற்ற அறிவின் பயன் என்ன தெரியுமா? தூய அறிவுவடிவமாக இருக்கும் ஆண்டவனது திருவடிகளை இடைவிடாது நினைத்தலே என்று தெளிவுறுத்துகிறார்.

“ கற்றதனாலாய பயன்என்கொல் வாலறிவன்
நற்றாள் தொழார் எனின் ”

என்பது அவருடைய எச்சரிக்கை. ‘படித்து விட்டுப் பட்டம் பெறுகிறாய், பட்டம் பெறுவதோடு நின்றுவிடாதே. பரமன் திருவடி பணிய மறவாதே’ என்று உபதேசம் செய்கிறார். ஆண்டவனின் வடிவம் தூய அறிவு வடிவம் என்கிறார். எனவே அன்பினைத் துணைக்கொண்டால்தான் அறிவு நிறைவுபெறும் என்பது வள்ளுவனார் கருத்தென்று தெள்ளிதின் விளங்கும். அதுமட்டுமோ?

கண் இருக்கிறது. வழியைத் தெளிவாக நோக்கி நடக்கலாம். மேடு பள்ளங்கள், கல், முள் இவற்றையெல்லாம் கண்ணை மூடிக் கடக்க வியலாது. விழித்த கண்ணோடு வழியைக் கடத்தலே நேரியது; இல்லையேல் பள்ளத்தில் விழ நேரும்; முள் குத்தும்; கல் உறுத்தும்; மேடு தட்டும். அது போலத்தான் வாழ்வும். இன்பம், துன்பம், நன்மை, தீமை, ஒளி, இருள் எல்லாம் கலந்ததே வாழ்வு; துன்பத்தைத் தள்ளி இன்பத்தைக் கொள்ளுதல் அறிவின் பயன். தீமையை நீத்து நன்மையை ஏற்றல் அறிவின் பயன். இருளின் நீங்கி ஒளியின் நடத்தல் அறிவின் பயன்.

உலகத்தோடு நட்பாகச் செல்லுதலே அறிவுக்கு வளர்ச்சி; உலகத்தொடு நட்பு இன்றேல் அறிவு வளராது; தளர்ந்து சிதையும் என்கிறார் திருவள்ளுவர். அறிவுடையார் எல்லாம் உடையார்; அறிவு இல்லாதவர் எவ்வளவுதான் பெற்றிருந்தாலும் இல்லாரோடு ஒப்பர்.

திருவள்ளுவர் திடீரென்று ஒரு புதிய திசையை அறிவுப் பாதையில் சுட்டுகிறார். அது ஒழுக்கம் உடைமை. தூயஅறிவு, ஒழுக்கத்தைத் துணைக்கொண்டே உயர்கிறது. ஒழுக்கமும் அறிவும் இருகண்கள்.

சிலர் இன்று பேசக்கேட்கிறோம். தமிழகத்து மேடைகளில் ஒருகுரல் தவறாது கேட்கிறது. "அறிவைத் தாராளமாகப் பயன் படுத்த உரிமை கொடுக்கப்படவேண்டும்" என்பதுதான் அது உண்மைதானே! அதற்குத்தடை ஏது; அறிவை நிச்சயம் பயன் படுத்தியே ஒவ்வொரு செயலையும் ஆற்ற முற்பட வேண்டும். அந்தச்செயல்தான் அறிவுலகத்தால் மதிக்கப்படும். சமயங்களும் வெறும் நம்பிக்கையின் மீதுமட்டும் கட்டப்பட்டவையல்ல. நம்பிக்கையோடு அறிவியலும் சமயங்களின் நிலைக்களங்கள். இதையாவரும் உணரவேண்டும்.

அறிவியலுக்குப் பொருத்தமான–அறிவியலுக்கு ஒத்த–அறிவியலுக்கு அடங்கிய–நெறியே சமயநெறி. தூய அறிவில் அருளாக இலங்குவதே நம் சமயப் பரம்பொருள்.

"அறிவினில் அருளால் மன்னி அம்மையோ டப்பனுகிச்
செறிவொழியாது நின்ற சிவனடி சென்னி வைப்பாம்".

என்கிறது சிவஞான சித்தியார். அறிவில் அருளாக இருக்கும் பரம்பொருளை உட்கொண்ட சமயநெறி அறிவியலுக்குப் புறம்பானதாகவா இருக்கமுடியும்? எதற்கும் சிந்தனை வேண்டும். சிந்தனையின் முடிவிலே தெளிவு பிறக்கும். அந்தத் தெளிவுதான் சிந்தனையை வாழ்விக்கும். அறிவை வளர்க்கும்.

வானத்தில் இருக்கும் கிரகங்கள் சிறிதும் பெரியதுமாக எண்ணிலாதன இருக்கின்றன. அவை அளத்தற்கு அரியவை; ஆனால் வளப்பெருங்காட்சி வழங்குபவை என்கிறாரே மாணிக்கவாசகப்பெருமான்! இது அறிவியலுக்கு ஒத்ததா? இல்லை அறிவியலுக்குப் புறம்பானதா?

"அண்டப்பகுதியில் உண்டைப்பிறக்கம்
அளப்பருந்தன்மை வளப்பெருங்காட்சி
ஒன்றனுக்கொன்று நின்றெழில் பகரின்
நூற்றொரு கோடியின் மேற்பட விரிந்தன"

என்பது திருவாசகம் - திருவண்டப் பகுதி.

"சென்று சென்று அணுவாய்த்
தேய்ந்து தேய்ந்து ஒன்றும் திருப்பெருந்துறைஉறைசிவன்"

என்னும் திருவாசகம் அறிவியலுக்கு ஒத்ததா? இல்லை அறிவியலுக்குப்புறம்பானதா?

ஆகவே பகுத்தறிவு நெறியேபழைய சமயநெறி. பகுத்தறிவு நெறியே அன்புநெறி, பகுத்தறிவு நெறியே மதநெறி. பகுத்தறிவு நெறியே தமிழர்வாழ்வுநெறி. திருவள்ளுவரின் அறிவுப்பாதை சமய நெறிகளின் அறிவுப்பாதை. எல்லாம் அன்பினுல் விளக்கமுறுகின்றன. அன்பினுல் பொலிகின்றன. அன்பினுல் மலர்கின்றன. அன்பும் அறிவும் தோளோடுதோள் பிணைதலே இன்றைய சமுதாயத்துக்குத்தேவை. அன்பற்ற வெற்றறிவுதளிர்க்காது. தழைக்காது. சிதைந்தொழியும். அதுபோல அறிவற்ற அன்பும் நிலைக்காது. இயங்காது. மாண்டொழியும்.

தமிழ்நெறி தெய்வம்கண்டநெறி. தமிழ் தெய்வத்தமிழ். தமிழொடு பாலொடு சுவைபோல் கலந்தது. அக்கலப்பாலேயே தமிழ் எதிர்ப்புக்கும் தாக்குக்கும் ஈடுகொடுத்து இன்றளவும் வாழ்கிறது. இதைத் தமிழர் ஒவ்வொருவரும் நன்ருக உணர வேண்டும்.

**"கடவுள் இல்லை என்பதைக்குறிக்கத் தமிழில் சொல்லே இல்லை என்பது தமிழறிந்த யாவர் துணிவும் ஆகும்."**

அறிவு, அன்பு, ஒழுக்கம் எனும் இவையே சமயநெறியில் வேண்டப்படும் அழியாத உண்மைகள்.

---

## 1 துதிப்பது குற்றமா?

மஹிம்ன: பாரம் தே பரமவிதுஷோ யத்யஸத்ருசி
ஸ்துதிர் பிர்மாதீனுமபி ததவஸன்னுஸ்த்வயி கிர: 1
அதாவாச்யஸ் ஸர்வஸ் ஸ்வமதிபரிணுமாவதி க்ருணன்
மமாப்யேஷ ஸ்தோத்ரே ஹர நிரபவாதஃ பரிகர: 11

பிர்மா முதலியவர்களின் சொற்களும் உன்னைத் துதிசெய்ய முடியாமல் பின்னடைகின்றன. உனது எல்லையற்ற மகிமையை அறியாத நான் துதிக்க முயற்சிசெய்வது பொருத்தமற்றதே; எனினும், புத்திக்கு எட்டிய அளவு உன்னைத் துதிப்பது எனக்கு அபவாதத்தை உண்டுபண்ணுவதாக ஆகாது.

புஷ்பதந்தன்.

# மாசில் வீணை

வித்துவான், திரு. சொ. சிங்காரவேலன் அவர்கள்
தமிழ்ப் பேராசிரியர், பல்கலைக்கல்லூரி, தருமபுரம்.

சென்றஇதழில்

*திருக்குற்றாலத்தில் பிறைசூடியார் இல்லை. கானப் பேரெயில் சென்றிருந்தார் அவர். நிலாமுடியனும் மல்லிகையும் ஒருநாளிரவு திருக்குற்றாலத்திற்கு வருகிறார்கள். தந்தப் பேழையைக் காப்பாற்றிவிட்ட செய்தியை நிலாமுடியன் சொல்கிறான். பாரிக்கு இப்போதுதான் கவலை தீருகிறது. சந்தனத்தேவனிடம் சிக்கிய பொன்முடியின் விடுதலைக்காகப் புறப்பட்டுப் போனாளே சொக்கி........உதவி கிடைத்ததா? அவள் நல்லானைப் பார்க்க முடிந்ததா? இல்லையா? படியுங்கள்.*

பதினாறும் அத்தியாயம்

## சில திட்டங்கள்!

தன் அன்புமகள் பொன்முடி ஆபத்தில் சிக்கிக்கொண்டாளென்று சொக்கியின் வாயிலாகத் தெரிந்துகொண்ட நல்லான் நடுங்கினான்; மனம் சோர்ந்துபோனான். சந்தனத் தேவனின் வெறியாட்டத்துக்கும் பலியாவதன் முன்னம் அவளைக் காப்பாற்றிவிட அவன்மனம் துடித்தது. ஆனால் மருதநம்பி எங்கு இருக்கிறானோ தெரியவில்லையே ......! தெய்வமே! திக்கற்றவர்களுக்கு நீயல்லவா துணை' என்மகளுக்கு யாதொரு கேடும் நேராதவண்ணம் பாதுகாத்தருள்வாய் பரம்பொருளே என்று பணிந்தான்! பரவினான்! உருகினான்!

ஐயா! மனம் சோரும் சமயம் இது அல்ல. எப்படியாவது பொன்முடியைக் காப்பாற்ற மேல் ஏதாவது உடனடியாக வகைசெய்ய வேண்டும். ... அதற்கு ஏதாவது......'

சொக்கி அவசரப்படுத்தினாள்.

“ஆம்சொக்கி; புறப்படு! உடனே பிரான்மலைக்குப் போவோம்! மருதநம்பியைத்தேடி அவனையும் துணைக்கொண்டு கருவூர்ப்பக்கம் ஓடுவோம்” என்று கூறிய நல்லான் பிரயாணத்துக்கு வேண்டிய ஆயத்தங்களைச் செய்யத் தொடங்கினான்.

காவிரிப்பூம்பட்டினத்திலிருந்து வரும் சாலையில் வானளாவி இருந்த பல்லவனீச்சரம் திருக்கோயில் பக்கம் குதிரை வந்ததும் நிறுத்திவிட்டுக் கோயிலுக்குள் ஓடினான் நல்லான்! சொக்கி தயங்கித் தயங்கி நாற்புறமும் விழிகளை ஓட்டியவாறே அவனைத் தொடர்ந்தாள்.

கோயில் அழகான அமைப்புள்ளது. கருக்கல் திருப்பணி ஏராளமான சிற்பங்கள். ஒரு கலைக்கூடமாகத் திகழ்ந்தது அது. காலைநேரம் ஆதலால் காலை வழிபாடு நடந்துகொண்டிருந்தது. சோழனின் ஆட்சியல்லவா? கோயிற்கரணத்தார் நின்று பெருமானை வணங்கிக்கொண்டிருந்தார்.

சந்நிதிக்குச் சென்றதும் கீழேவிழுந்து வணங்கினான் நல்லான். அவன் கண்களிலிருந்து கண்ணீர் ஆருயப் பெருக்கெடுத்தது வாய் ஏதோ ஒரு பழம்பாடலை முணு முணுத்தது!

“பெருமானே! உன்னைத்தான்நம்பியிருக்கிறேன். நீயன்றோ உற்றதுணைவன்! பிறவாயாக்கைப் பெரியோனே! நுதல்விழி முக்கண் நுண்ணியோனே! நீலமேனி வாலிழை பாகத்து நின்மலனே! என் அன்புமகள் உன் அடைக்கலம்!” என்று உளமுருகத் துதித்து நின்றான் நல்லான். அருச்சகர் தந்த திருநீற்றைப் பூசிக்கொண்டு திரும்பினான்......

மீண்டும் காவிரிப்பூம்பட்டினத்திலிருந்து குடந்தை செல்லும் சாலையில் அந்த இரண்டு புரவிகளும் பறந்தன.

சொக்கிதான் எவ்வளவுஇலேசாகக் குதிரை ஓட்டுகிறாள். அதுமட்டுமா வியப்பு! இவ்வளவுவயதான காலத்தில் நல்லான் எவ்வளவுவிரைவாகக் குதிரையைச் செலுத்துகிறான்!

தமிழ் மண்ணல்லவா? மனவலிமை இந்த மண்ணோடு கலந்ததல்லவா?

*　　*　　*

திருக்குற்றால மலைக்கு நிலாமுடியனும் மல்லிகையும் சென்ற மறுநாள். காலைவிடிந்துகொண்டிருந்தது. மண்டபத்தின் முகப்பில் நின்றுகொண்டிருந்தான் நிலாமுடியன். அவனுக் கருகில் மருதநம்பி கையில் ஈட்டிஒன்றைப் பிடித்தவாறே நின்றிருந்தான்.

நீர்வீழ்ச்சி பாயும் அழகில் நிலாமுடியனின் நெஞ்சு ஈடுபட்டிருந்தது...அந்தவேளையில் மண்டபத்துக்கு வரும்ஒற்றையடிப் பாதையில் வேகமாக வந்துகொண்டிருந்தது ஒரு வெண் குதிரை. அதன்மேலிருந்ததுயார்! ஆ புலவர் பிறைசூடியா ரல்லவா வந்துகொண்டிருந்தார்!

கானப்பேரெயில் சென்றுவிட்டு அவர்தாம் வந்துகொண் டிருந்தார்!

"புலவர் ஐயா்வா வரணும்! வரணும்! என்று நிலாமுடியன் கைகூப்பினன்.

"நிலாமுடியனு? என்னப்பா எதிர்பாராவிதமாக" என்று சொல்லியபடியே குதிரையை மண்டபத்துத் தூணில் கட்டி விட்டு நெருங்கிவந்தார் பிறைசூடியார்.

"தந்தப்பேழை என் குடிசையில் இருக்கிறது... என்ற செய்தியைத் தெரிவித்து விட்டுப் போகலாமென்றே ஓடோடி நானும் மல்லிகையும் நேற்றிரவு வந்தோம்."

"அப்படியா? மல்லிகை எங்கே?"

"இளவரசியோடு பூக்கொய்யப் போயிருக்கிருள்". அதற் குள் மருதநம்பி பிறைசூடியார் ஏறிவந்த குதிரைக்குத் தீனி யிடுவதில் முனைந்தான்.

* * *

உணவுக்குப்பின் மண்டபத்தின் உள்ளிருந்த கல்யாண கூடத்தில் எல்லோரும் ஒன்று கூடினர்கள். மல்லிகை பொன்னி தேவியோடு ஒரு மருங்கு உட்கார்ந்திருந்தாள். மற்ெருரு மருங்கில் நிலாமுடியன் மருதநம்பியோடு இருந்தான். நடுவில் பிறைசூடியாரும், பாரியும் உட்கார்ந்திருந்தார்கள்.

தந்தப்பேழை பாதுகாகப்பட்ட செய்தி கேட்டுப் புலவர் களித்தார். அடுத்து அவர் கூறிய செய்தி அனைவரையும் வியப்பில் ஆழ்த்தியது, என்ன அந்த வியப்பான செய்தி?

'கானப்பேரெயில் சென்றிருந்தேன். அதன் மன்னர் வேங்கைமார்பனை ச்சந்திக்தேன். பிரான்மலைக்கு நேர்ந்திருக்கும் பேராபத்தை எடுத்துக் கூறினேன். உக்கிரப்பெருவழுதியோடு போராடத்துடித்துக் கொண்டிருக்கும் அவருக்கு இது ஒரு தூண்டுகோலாக இருக்கிறது. பறம்பு நாட்டின் மன்னர் வீரவேளின் உற்ற நண்பரின் மகனுர் அல்லவா வேங்கை மார்பன்! எனவே, பறம்பு நிலத்தின் உரிமையைப் பறித் திருக்கும் பாண்டியனைப் போரிட்டு நொறுக்க அவர் இதயம் முற்பட்டிருக்கிறது......"

என்று கூறி நிறுத்திஞர் புலவர். அவர் விழிகளில் இது வரைக்கும் அப்படி ஒரு ஒளி வீசியதில்லை. அது வீர ஒளி.

'சொல்லுங்கள் புலவரே சொல்லுங்கள்! பறம்புநாட்டின் இளவரசனேடு சேர்ந்து பாண்டியனை எதிர்க்க அவர் உறுதி கூறினரா?'

பாரியின் பரபரப்பான வினவுக்குப் பதில் கூறுவதுபோலப் புலவர் மேலும் தொடர்ந்தார்.

'ஆம் இளவரசே!......

......நாளை இங்கிருந்து எல்லோரும் கானப்பேரெயில் புறப்படவேண்டும். நான் இன்று மாலையே புறப்பட்டு முன்பு போகிறேன். வேங்கை மார்பன் இளவரசனையும், இளவரசி யையும் பார்க்க ஆவலாக இருக்கிறர். மறைந்துபோன தன் நண்பரின் செல்வங்களைக்காண அவர் உள்ளம் துடிக்கிறது! ......ஆகவே நம்முடைய வருகை நோக்கி அவர் காத்திருக் கிறர்....... பிறகு திருவருளின்படி எப்படி நடக்கிறதோ அப்படி......'

புலவரின் குரலில் ஒரு தனி வீறு ஒளிர்ந்ததை இளவரசியும் கண்டாள்; எல்லோரும் கண்டனர்.

'நிலாமுடியன் பூங்காட்டு மண்டபம்போய் அங்குள்ள நிலை, மதுரையின் நிலை எல்லாவற்றையும் ஒற்றறிந்து பின் கானப் பேரெயில் வரலாம்'

என்றார் புலவர். நிலாமுடியன் எழுந்து தலைவணங்கி நின்றான்.

*     *

பூங்காட்டு மண்டபத்தை நல்லானும் சொக்கியும் அடைந்தபோது அவர்கள் மிகவும் களைத்திருந்தனர். இரண்டு நாள் குதிரைச்சவாரி என்றால் சும்மாவா என்ன? அதிலும் சொக்கி சோர்ந்தே போனாள். என்னதான் மனவலிமை இருந்தாலும் மென்மையான சாயல் படைத்த மெல்லியல் தானே அவள்!

மண்டபத்தை யடுத்திருந்த குடிசையின் வாயிலில் வந்தனர். குதிரைகளை இழுத்துக் கொய்யா மரத்திற் கட்டி விட்டுக் குடிசைப்பக்கம் சென்றனர்.

'வீட்டில் யார்? ஐயா - ஐயா?' என்று அழைத்தான் நல்லான்.

உள்ளேயிருந்து நிலாமுடியன்தான் வந்தான். அவனுக்கு ஒன்றும் புரியவில்லை. இந்த அழகிய பெண் யார்? இவர்கள் ஏன் தன்னைத் தேடிவர வேண்டும்? ஒருவேளை அயலூர்க் காரர்களாக இருக்கலாமோ? இல்லையேல் மல்லிகையின் தூரத்து உறவாகவும் இருக்குமோ? ஆம்; இப்படியெல்லாம் அவன் சிந்தனைகள்,......

'யார் ஐயா நீங்கள்? யாரைப்பார்க்க வேண்டும்?'

'மதுரையிலிருந்து ஒரு வீரன் பறம்புநாட்டு இளவரசரோடு சேர்ந்துகொண்டு சேவை செய்கிறான்..... அவனைத் தெரியுமா உங்களுக்கு?'

நிலாமுடியனுக்குச் சிந்திக்க வேண்டிய அவசியமே இல்லை இப்போது. ஆம், மருதநம்பியைத்தான் அப்பெரியவர் கேட்கிறார் என்று அவனுக்கு நன்றாகப்புரிந்தது.

‘நன்ருகத் தெரியும்.. ... மருதநம்பியைத்தானே கேட்கிறீர்கள்?’ இப்போதுதான் சொக்கியின் முகத்தில் கொஞ்சம் மலர்ச்சி பூத்தது.

‘அவரைத்தான் நாங்கள் இப்போது அவசியம் பார்க்க வேண்டும்’ என்ருள் பரபரப்புடன்.

நிலாமுடியன் ‘அப்படியா நிற்கிறீர்களே. உட்கார்ந்து பேசுங்களேன்’ என்று உட்காரவைத்தான். தானும் உட்கார்ந்து கொண்டான். மெல்லிய பூங்காற்று அங்கு மிதந்தது. நிலாமுடியனுக்கு இப்போதுதான் கொஞ்சம் புரிந்தது...... இந்தப் பெரியவர் மருதநம்பியின் மாமஞராக இருக்கவேண்டும். இந்த இளம்பெண் மருதநம்பியின் மனைவிதான். ஐயமே இல்லை.

‘நீங்கள் யார்?’ என்று கேட்டான்.

‘நான் அவன் மாமஞர். இந்தப் பெண் என்மகளின் தோழி?

நிலாமுடியன் தான் நினைத்தது தவறு என்று உணர்ந்தான். நல்லான்தான் மேலும் பேசினன்.

‘மருதநம்பியின் மனைவி - என்மகள் - பொன்முடியைச் சந்தனத்தேவன் கவர்ந்து சென்று கருவூரை யடுத்த காட்டில் சிறைவைத்திருக்கிருனம். இந்தப்பெண் அங்கிருந்து உயிரையும் பொருட்டாக எண்ணுது பொன்முடியின் விடுதலைகோரி ஓடிவந்திருக்கிருள். ஆகவேதான்...... ?

‘என்ன இந்த இளம் பெண்ணு... ஆகா... எவ்வளவு தைரியம்? என்று பாராட்டினன் நிலாமுடியன் நெஞ்சுக்குள்.

‘மருதநம்பி திருக்குற்ருலத்தில் இளவரசரோடு இருக்கிருர். இன்றுமாலை கானப்பேரெயில் புறப்படுவதாகத் திட்டம். ஆகவே... நாம் இப்போதே புறப்படவேண்டும்... ?

நிலாமுடியன் குரலில் பரபரப்பு இருந்தது.

‘ஆம் ஐயா... உடனே புறப்படுவோம்! இல்லையேல் பொன்முடியை உயிரொடு பார்ப்பது அரிது. சந்தனத்தேவன்

கொடியவன்! வஞ்சகன்!' நல்லானின் மீசைகள் துடித்தன. நரம்பு புடையெழுந்தது. நெற்றி வளைந்தது. புருவங்கள் நெரிந்து மேலேறின.

அடுத்த சில கணங்களில் தத்தம் குதிரைகளில் ஏறி மூவரும் திருக்குற்றுலம் நோக்கிப் புறப்பட்டார்கள். மிலா முடியன் முன்னே போனுன். அவனைத்தொடர்ந்து சொக்கியும், நல்லானும் போனுர்கள்.

குதிரைகளோடு அவர்கள் உள்ளங்களும் குதித்தோடிக் கொண்டிருந்தன.

ஆனுல் அங்கேயோ......

## பதினேழாம் அத்தியாயம்

## கானப்பேரெயில்

காளையார்கோயில் என்று இக்காலத்து வழங்கும் ஊர் சங்ககாலத்திற் கானப்பேர் எயில் என்று பெயர் பெற்றிருந்தது. பெரிய ஊர். வேங்கை மார்பன் என்ற சிற்றரசரால் ஆளப் பெற்று வந்தது. ஊரைச் சுற்றிப் பெரிய மதில்கள்! அவைதான் எவ்வளவு வலிமை பெற்றவை தெரியுமா? எத்தனையாயிரம் படை வந்தாலும் அந்த மதிலைத் தகர்க்க முடியவே முடியாது! அவ்வளவு ஆற்றல் படைத்தது அம்மதில். மதிலைச் சுற்றிலும் பெரிய பெரிய அகழிகள் உண்டு. அவை மிகமிக ஆழ மானவை. அவற்றினுடு முதலைகள் அதிகமாக இருந்தன. யாரேனும் விழுந்தால் அவ்வளவுதான்.

அகழியை அடுத்துப் பெரியகாடு. விண்ணையளாவிய மரங்கள், செடிகள், கொடிகள், மண்டிய புதர்கள். ஆம், அது காவற்காடுதான். பகைவர் படையெடுத்து வருவதென்ருல் அது அரியசெயல். இத்தகைய காரணத்தால்தான் அதற்குக் 'கானப் பேர் எயில்' என்று பெயரிட்டார்கள் போலிருக்கிறது.

இக்காலத்திலும் இல்லையா? புதுக்கோட்டை, நாட்டரசன் கோட்டை, பாளையங்கோட்டை, பட்டுக்கோட்டை, அறுப்புக் கோட்டை என்றெல்லாம் பெயர் விளங்குதல் போலத்தான்.

சங்ககாலத்தில் உக்கிரப் பெருவழுதி மதுரையைத் தலை நகராகக் கொண்டு பாண்டிய நாட்டை ஆண்டபோது, இக்கானப்பேரெயிலை வேங்கை மார்பன் என்ற வீரம்மிக்க அரசர் ஆண்டு வந்தார். அதே காலத்தில் சேரநாட்டில் மாவெண்கோவும், சோழநாட்டில் பெருநற்கிள்ளியும் ஆட்சி புரிந்தனர்.

வேங்கை மார்பனது நாட்டைத் தன்நாட்டோடு சேர்த்து ஆள உக்கிரப்பெருவழுதிக்கு ஆசை பிறந்தது. அதன் விளைவு தான் கடும் படையெடுப்பு. கப்பம்கட்டிச் சிற்றரசனாய் வாழ மனமில்லாத வேங்கைமார்பன் தலைமறைவாய்த் திருக் குற்றாலத்தை யடுத்த காட்டுப் பகுதியில் வாழ்வதாகச் சொல்லிக்கொண்டார்கள் அக்கால மக்கள்.

* * *

சில ஆண்டுகளுக்குப் பின்பு திடீரென்று ஒருநாள்:—

கானப்பேரெயிலிலிருந்த பாண்டியர் படைத்தலைவன் அழகிய சொக்கதேவனை எதிர்த்துச் சிறு படையொன்று வந்தது. 'வேங்கை மார்பன்! வெல்க வெல்க' என்ற வீர முழக்கத் தோடு வந்த அப்படை அரண்மனைக்குள் புகுந்தது.

மக்களும் சேர்ந்துகொண்டார்கள். பாண்டியர் பக்கம் வீழ்ந்தது. பின் என்ன? கானப்பேரெயிலின் அரசவீதிகளில் வீரர்கள் நாலாபுறமும் ஓடினர். பாண்டியர் பட்டாளம் பாடழிந்தது. சரிந்தது பாண்டியர் வாழ்வு. மதுரைக்கு ஆள் அனுப்பக்கூட வில்லை. ஓடிய ஒற்றனைப் பிடித்துக்கொன்றனர் கானப்பேரெயில் மக்கள்.

அரண்மனை யெங்கணும் புரட்சி வீரர் காவல்காத்து நின்றனர். அழகிய சொக்கதேவன் கொல்லப்பட்டான். அவன் உடலம் சுரங்கவழியாக நான்கைந்து புரட்சிக்காரர் களால் அப்புறப்படுத்தப்பட்டது.

அன்று இரவு—

ஒரு பல்லக்கு கானப்பேரெயிலை யடுத்திருந்த காட்டுக்குள்ளிருந்து அரசவீதி வலமாக வந்தது. மக்கள் சாரிசாரியாக நின்று 'மன்னர் வாழ்க' என்று முழக்கிக்கொண்டிருந்தார்கள்.

இருபுறமும் தீவர்த்திகளைக் கையிற்பிடித்தபடி வீரர் பலரும் காத்துவந்தனர்.

பல்லக்கின் உள்ளே—

கானப்பேரெயிலுக்கு உரிய வேந்தர் வேங்கை மார்பன் வீற்றிருந்தார். கம்பீரமான தோற்றம், விசாலமான மார்பு, வீரம் பொங்கும் கண்கள், கட்டான உடம்பு, கதிரொளி வீசும் திருமுடி, கண்ணைப்பறிக்கும் பொன்னாபரணங்கள், இரண்டு காதுகளிலும் தொங்கி ஆடும் முத்துக்குண்டலங்கள்!

ஆ...... இந்த உருவத்தை...... நாம் எங்குப் பார்த்திருக்கிறோம்? நாம் கண்ட சாயலாக அல்லவா இருக்கிறது தோற்றம்! எல்லாவற்றுக்கும் மேலாக அந்தப் புன்னகை...... ஆம்............ நமக்கு நன்றாக அறிமுகமான புன்னகைதான்! ஆனால்....!

(தொடரும்)

---

## 2 புதுமையில் மனம் செல்லாதா?

அதிதஃ பந்தானம் தவச மஹிமா வாங்மனஸயோர்
அதத் வ்யாவ்ருத்யா யத் சகித மபிதத்தே சுருதிரபி
ஸ கஸ்ய ஸ்தோதவ்யஃ கதிவிதகுணஃ கஸ்ய நவிஷய:
ப்தே த்வர்வாசீனே பததி ந மன: கஸ்ய ந வச:

உனது நிர்குண ஸ்வரூபத்தின் மஹிமை மனோவாக்குகளின் வழியைக் கடந்தது. வேதமும் அது அன்று. அது அன்று என்று அன்மையினாலேயே பயந்து அதை உணர்த்துகிறது. அதை யார் துதிக்கமுடியும்? எவ்வகைக் குணமுடையது அது? அது யாருக்குப் புலனாகும்? எனினும், ஸகுணமாய் எடுத்த நூதன அவதாரங்களில் மனமும் வாக்கும் யாவர்க்கும் செல்வது இயற்கையே.

# வடமொழிச் செய்யுட்கணங்கள்

பன்மொழிப்புலவர்

**வித்துவான், திரு. வே. வேங்கடராஜுலு ரெட்டியார் அவர்கள்**

சென்னைப் பல்கலைக்கழகத்து ஒப்புபெற்ற ஆராய்ச்சிப்பேராசிரியர்.

## ப்ராக்ருதத்தில் லகு குரு விவரணம்

இனி, ப்ராக்ருதத்தில் ண்ஹ, ல்ஹ ஸம்யோக பூர்வக லகு குரு ஆதல் இல்லை.

'பரில்ஹஸி'

என்பதில், ல்ஹ என்னும் ஸம்யுக்தாக்ஷரத்தின்மேல் உள்ள ரி குரு ஆயிற்றிலது; லகுவே, இனி.

'ஸுந்தரிர்ஹதஹி'

என்பதில், ர்ஹ என்னும் ஸம்யுக்தாக்ஷரத்தின்மேல் உள்ள :ரி குரு ஆயிற்றிலது, லகுவே.

இகாரம், ஹிகாரம் பிந்துவோடு கூடியிருப்பினும் லகு ஆதல் உண்டு. உதாரணம்—

'மாணிணி மாணஹிo காஇம்'

ஏகாரம் ஓகாரம் லகு ஆதல் உண்டு. நெட்டெழுத்தினை லகு ஜிஹ்வையினுல் படித்தால் அது லகுவாகும்.

'அரேரே பாஹஹி கால்ஹ ளுப'

இவ்வடியில், ரேரே இரண்டும் லகுவாயுள்ளன. அல்லாக்கால் 2 மாத்திரை மிக்குச் செய்யுளிலக்கணம் கெடும், செய்யுளிலக்கணங் குன்றிய செய்யுளைப் படித்தால் துன்பமும் பழியும் உண்டாகும், ஆகலின்' செய்யுளிலக்கணங் கெடாதவாறு அமைத்துக்கொள்ளல் வேண்டும். பெரும் புலவர்முன் புலமையில்லாதார் செய்யுளிலக்கணங் குன்றிய செய்யுளைப் படிப்பது, ஒருவன் தன் தோளில் வைத்திருந்த கத்தியால் தன் தலையை வெட்டுதல் போல்வதாகும்.

இங்கு கூறியவற்ருல், செய்யுளிலக்கணம் கெடாதவாறு போற்றிக் கொள்ளுதல் வேண்டும் என்பது நன்கறியலாகும்.

## கன்னட மொழிக்குரிய கணங்கள்

கன்னட மொழியில் வடமொழிக் கணங்களே யன்றி, அம் மொழிக்கே யுரிய கணங்களும் உள. அம் மொழிக்குரிய கணங்கள் அம்மொழிக்குரிய செய்யுட்களில் கொள்ளப்படும், அவை பிரமகணம் என்றும் விஷ்ணுகணம் என்றும் ருத்ரகணம் என்றும் கூறப்படுகிறன. பிரமகணம் 4; விஷ்ணு கணம் 8; ருத்ரகணம் 16. அவையெல்லாம் மாத்ரா கணங்களே. அவை 3 மாத்திரை முதல் 8 மாத்திரை வரை உடையன. அவற்றுள் பிரமகணம் 3, 4 மாத்திரையன; விஷ்ணுகணம் 4, 5, 6, மாத்திரையன; ருத்ரகணம் 5, 6, 7, 8 மாத்திரையன. இனி எழுத்துக்களை நோக்கினுல், பிரமகணம் 2, 3 எழுத்துக்களையும் விஷ்ணு கணம் 3, 4 எழுத்துக்களையும் ருத்ரகணம் 4, 5 எழுத்துக்களையும் உடையன.

### பிரமகணம் 4 ஆவன:

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | ப ப | குரு குரு | (க க) | மாத். 4 |
| 2. | – – ப | லகு லகு குரு | (ஸ கணம்) | ,, 4 |
| 3. | ப – | குரு லகு | (கல) | ,, 3 |
| 4. | – – – | லகு லகு லகு | (ந கணம்) | ,, 3 |

### விஷ்ணுகணம் 8 ஆவன:

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | ப ப ப | குரு குரு குரு | (ம கணம்) | மாத். 6 |
| 2. | – – ப ப | லகு லகு குரு குரு | (ஸ க) | ,, 6 |
| 3. | ப – ப | குரு லகு குரு | (ரகணம்) | ,, 5 |
| 4. | – – – ப | லகு லகு லகு குரு | (நல) | ,, 5 |
| 5. | ப ப – | குரு குரு லகு | (த கணம்) | ,, 5 |
| 6. | – – ப – | லகு லகு குரு லகு | (ஸ ல) | ,, 5 |
| 7. | ப – – | குரு லகு லகு | (ப கணம்) | ,, 4 |
| 8. | – – – – | லகு லகு லகு லகு | (ந ல) | ,, 4 |

### ருத்ரகணம் 16 ஆவன:

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | ப ப ப ப | குரு குரு குரு குரு | (ம க) | மாத். 8 |
| 2. | – – ப ப ப | லகு லகு குரு குரு குரு | (ஸ கக) | ,, 8 |
| 3 | ப – ப ப | குரு லகு குரு குரு | (ர க) | ,, 7 |
| 4. | – – – ப ப | லகு லகு லகு குரு குரு | (ந கக) | ,, 7 |

| | | | | |
|---|---|---|---|---|
| 5. | ப ப – ப | குரு குரு லகு குரு | (த க) | மாத். 7 |
| 6. | – – ப – ப | லகு லகு குரு லகு குரு | (ஸ லக) | ,, 7 |
| 7. | ப – – ப | குரு லகு லகு குரு | (ப க) | ,, 6 |
| 8. | – – – – ப | லகு லகு லகு லகு குரு | (ந லக) | ,, 6 |
| 9. | ப ப ப – | குரு குரு குரு லகு | (ம ல) | ,, 7 |
| 10 | – – ப ப – | லகு லகு குரு குரு லகு | (ஸ கல) | ,, 7 |
| 11. | ப – ப – | குரு லகு குரு லகு | (ர ல) | ,, 6 |
| 12. | – – – ப – | லகு லகு லகு குரு லகு | (ந கல) | ,, 6 |
| 13. | ப ப – – | குரு குரு லகு லகு | (த ல) | ,, 6 |
| 14. | – – ப – – | லகு லகு குரு லகு லகு | (ஸ லல) | ,, 6 |
| 15. | ப – – – | குரு லகு லகு லகு | (ப ல) | ,, 5 |
| 16. | – – – – – | லகு லகு லகு லகு லகு | (ந லல) | ,, 5 |

இவற்றிற்குத் தமிழிலக்கணத்தின் அசையுஞ் சீரும் நோக்குவோம்:

## பிரமகணம் 4:

| | | | |
|---|---|---|---|
| 1. | ப ப | (நேர் நேர்) | நேர் நேர் |
| 2. | ப – | (நேர் நேர்) | நேர் நேர் |
| 3. | – – ப | (நேர் நேர் நேர்) | நிரை நேர் |
| 4. | – – – – | (நேர் நேர் நேர்) | நிரை நேர் |

## விஷ்ணு கணம் 8:

| | | | |
|---|---|---|---|
| 1. | ப ப ப | (நேர் நேர் நேர்) | நேர் நேர் நேர் |
| 2. | ப – ப | ( ,, ) | நேர் நிரை |
| 3. | ப ப – | ( ,, ) | நேர் நேர் நேர் |
| 4. | ப – – | ( ,, ) | நேர் நிரை |
| 5. | – – ப ப | (நேர் நேர் நேர் நேர்) | நிரை நேர் நேர் |
| 6. | – – – ப | ( ,, ) | நிரை நிரை |
| 7. | – – ப – | ( ,, ) | நிரை நேர் நேர் |
| 8, | – – – – | ( ,, ) | நிரை நிரை |

## ருத்ரகணம் 16:

| | | | |
|---|---|---|---|
| 1. | ப ப ப ப | (நேர் நேர் நேர் நேர்) | நேர் நேர் நேர் நேர் — |
| 2. | ப – ப ப | ( ,, ) | நேர் நிரை நேர் |
| 3. | ப ப – ப | ( ,, ) | நேர் நேர் நிரை |
| 4. | ப – – ப | ( ,, ) | நேர் நிரை நேர் |
| 5. | ப ப ப – | ( ,, ) | நேர் நேர் நேர் நேர் — |

| | | | |
|---|---|---|---|
| 6. | ப – ப – | (நேர் நேர் நேர் நேர்) | நேர் நிரை நேர் |
| 7. | ப ப – – | ( ,, ) | நேர் நேர் நிரை |
| 8. | ப – – – | ( ,, ) | நேர் நிரை நேர் |
| 9. | – – ப ப ப | (நேர் நேர் நேர் நேர் நேர்) | நிரை நேர் நேர் நேர்— |
| 10. | – – – ப ப | ( ,, ) | நிரை நிரை நேர் |
| 11. | – – ப – ப | ( ,, ) | நிரை நேர் நிரை |
| 12. | – – – – ப | ( ,, ) | நிரை நிரை நேர் |
| 13. | – – ப ப – | ( ,, ) | நிரை நேர் நேர் நேர்— |
| 14. | – – – ப – | ( ,, ) | நிரை நிரை நேர் |
| 15. | – – ப – – | ( ,, ) | நிரை நேர் நிரை |
| 16. | – – – – – | ( ,, ) | நிரை நிரை நேர் |

இவற்றால், தமிழில் இப்போது வழங்குகின்ற இயற்சீர்கள் 4ம், காய்ச்சீர்கள் 4ம், கனிச்சீர்களுள் தேமாங்கனி, புளிமாங்கனிச் சீர்களும் கன்னடத்தில் உள்ளன; கூவிளங்கனி, கருவிளங்கனிச் சீர்கள் இல்லை என்பது போதரும். ஆயின், நாலசைச் சீர்களுள் தேமாந் தண்பூ, புளிமாந் தண்பூ இச் சீர்கள் கன்னடத்தில் உள.

## தெலுங்கு:

இனி, தெலுங்கு மொழியை நோக்குவோம்: தெலுங்கில் வட மொழிக் கணங்களேயன்றித் தெலுங்குமொழிக் குரிய கணங்களும் உள்ளன; அவை கன்னடத்துக் கணங்களை ஒத்தனவே. ஆயின் கன்னடத்துக் கணவகைகள் ஒவ்வொன்றிலும் முதலில் உள்ள இரண்டு கணங்கள் இல்லை. இவையே வேறுபாடு. இனி, கன்னடத்திலுள்ள பிரமகணம் சூரியகணம் என்றும், விஷ்ணுகணம் இந்திரகணம் என்றும், ருத்ரகணம் சந்திரகணம் என்றும் தெலுங்கில் வழங்கப்படும். ஆகலின், தெலுங்கில்—

| | | |
|---|---|---|
| சூரியகணம் | — | 2 |
| இந்திரகணம் | — | 6 |
| சந்திரகணம் | — | 14 ஆக 22 கணங்கள் உள்ளன. |

கன்னடத்தில் உள்ளவற்றுள் தெலுங்கில் இல்லாத கணங்கள்:

### பிரமகணம் 2:

| | | | |
|---|---|---|---|
| 1. | ப ப | தமிழில் | நேர் நேர் |
| 2. | – – ப | ,, | நிரை நேர் |

### விஷ்ணுகணம் 2:

| | | | |
|---|---|---|---|
| 1. | ப ப ப | தமிழில் | நேர் நேர் நேர் |
| 2. | – – ப ப | ,, | நிரை நேர் நேர் |

### ருத்ரகணம் 2:

| | | | |
|---|---|---|---|
| 1. | ப ப ப ப | தமிழில் | நேர் நேர் நேர் நேர் |
| 2. | – – ப ப ப | ,, | நிரை நேர் நேர் நேர் |

இவற்றால் ஈரசைச் சீர்களுள் தேமா, புளிமாச் சீர்களும், மூவசைக் காய்ச் சீர்களுள் தேமாங்காய், புளிமாங்காய்ச் சீர்களும், நாலசைச் சீர்களுள் தேமாந்தண்பூ, புளிமாந்தண்பூச் சீர்களும், தெலுங்கில் இல்லை என அறியப் படும். ஆகலின் நாலசைச் சீர்களுள் ஒன்றுமே தெலுங்கில் இல்லை என்பது போதரும். கன்னடத்தில் இல்லாத விளங்கனிச் சீர்கள் 2-ம் தெலுங்கில் இல்லை என்பது கூறுமே அறியப்படுமன்றே!

---

## 3 சொற்கள் தூய்மை பெற வேண்டும்

மதுஸ்பீதா வாச: பரமமமிர்தம் நிர்மித வதஸ்
தவ பிர்மன் கிம் வாகபி ஸுரகுரோர் விஸ்மய பதம்।
மமத்வேதாம் வாணீம் குணகதன புண்யேன பவத:
புனுமீத்யர்த்தேஸ்மின் புரமதன புத்திர் வ்யவஸிதா॥

அமிர்தம் போன்ற தேன் பொழிகின்ற வேதவாக்யங்களை மூச்சைப் போல் எளிதில் வெளிப்படுத்திய உனக்கு வியாழனின் வாக்கும் வியப்பு அளிக்காது. உனது குணங்கூறும் புண்ணியத்தால் எனது சொல்லைச் சுத்தம் செய்து கொள்ளவே உன்னைத் துதிக்கும் காரியத்தில் புத்தி ஈடுபட்டது

# குருவருள்

தருமபுர ஆதீனப் புலவர், சித்தாந்த ரத்நாகரம், மதுரகவி

திரு. முத்து. சு. மாணிக்கவாசக முதலியார் அவர்கள்

குரு-ஆசிரியன். அருள்-ஞானம். குருவருள்-ஆசிரியனால் கிடைக்கும் ஞானம். சிவபெருமான் நேரே தன் திருவருளைக் குருவுக்கு நல்கினன். குருமூலமாகத் திருவருளைப்பெறத் தக்கவர் நேரே சிவமூலமாகப் பெறுதல் இயலாது.

"முத்திதரும்
நன்னெறிவிஞ் ஞானகலர் நாடுமலம் ஒன்றினையும்
அந்நிலையே உள்நின்று அறுத்தருளி"

வரும் முறைமை நேரே சிவமூலமாகத் திருவருளைப் பெறுதலாகும். அது விஞ்ஞானகலர் தகுதிக்குரியது.

"பின்அன்பு
மேவா விளங்கும் ப்ரளயா கலருக்குத்
தேவாய் மலகன்மம் தீர்த்தருளி"

வரும் முறைமை குருமூலமாகத் திருவருளை அடைதலாகும். இது பிரளயாகலருக்கு உரியது.

சிவமே குருவாயெழுந்தருள்வதால், 'குருவே சிவம்' எனக்கொண்டு வழிபடுவது சைவசம்பிரதாயம்.

'குருவே சிவம்எனக் கூறினன் நந்தி
குருவே சிவம் என்பது குறித்தோரார்
குருவே சிவமாகிக் கோனுமாய் நிற்கும்
குருவே உரை உணர்வு அற்றதோர் கோவே'

(திருமந்திரம் 1581.)

பிரளயாகலர்க்கு முன் நின்று உணர்த்திய குருவின்வடிவம் சிவபிரானது இயற்கை வடிவம். அது நான்கு தோளும் மூன்று கண்ணும் திருநீலகண்டமும் பிறவும் ஆகிய உறுப்புக்களை யுடையது. முத்தொழில் நடாத்தி நின்ற இறைவனுடையது. இறைவன் அவ்வியற்கை வடிவில் நின்று உபதேசமுகத்தான் அவர்க்கு உணர்த்துவான்.

சகலர்க்கு அச்சகலர் வடிவை ஒக்கும் குருவடிவாகிய மானுடப் போர்வையின் மறைந்து (பின்) நின்று உபதேசமுகத்தான் உணர்த்துவான் பிரளயாகலர்க்கும் சகலர்க்கும் உணர்த்துவது குருவடிவம் என ஒன்று யிருந்தாலும் முன் பின் ஆதலும், இயற்கை வடிவம் செயற்கை வடிவம் ஆதலும் அவ்வடிவுகள் முறையே முத்தொழில் புரிதலும், முத் தொழிற்படுதலும் நோக்கின், வேறுபாடு நன்கு புலனாகும், விஞ்ஞான கலர்க்குத் தானே மெய்ஞ்ஞானம் விளையும். ஏனை இருதிறத்தார்க்கும் குருவருளால்தான் அது கிடைக்கும்.

சிவஞானபோதம் "இவ்வான்மாக்களுக்குத் தமது முதல்தானே குருவுமாய் உணர்த்தும்" என்கின்றது. இதில், தம் முதல் நேரே உணர்த்துதல் என்றும், அதுவே குருவுமாகி உணர்த்துதல் என்றும் ஆகும் இருவகையுபதேசம் உண்மை வெளிப்படும்.

> " அஞ்ஞான அச்சகலர்க்கு அக்குருவாய் – மெய்ஞ்ஞானம்
> பின் உணர்த்தும் அன்றிப் ப்ரளயா கலருக்கு
> முன் உணர்த்தும் தான்குருவாய் முன் "

என்ற சிவஞான போதவெண்பாவால், குருவாகி உபதேசித்தல் இரு வகைப்படும் எனத்தெரியும். அதன் முதலில், 'மெய்ஞ்ஞானம் தானே விளையும் விஞ்ஞானகலர்க்கு' என்றதால் அந்நியம் இன்றிச் சைதன்னிய (ஆன்ம) சொருபியாய் நிற்கும் தம்முதல் தானே நேரே உள் நின்று உணர்த்தும் தலைமை யுபதேசம் ஒன்று உண்டு என்பது புலனாகும்.

தமக்கு முதலாய் இதுவரையில் உள் நின்று உணர்த்திவந்த பரம் பொருளே குருவாய் வந்து உணர்த்துவது வேண்டும். ஏனையோர்க்கும் அவ்வியல்பு அறிந்து உணர்த்துதல் கூடாது.

> " அகத்துறுநோய்க் குள்ளினர் அன்றி அதனைச்
> சகத்தவரும் காண்பரோ தான் "

(திருவருட்பயன் 42.) குருவடிவு இரண்டனுள் முன்னது சிவரூபம், பின்னது மானிட ரூபம். இரண்டனையும் 'தம் முதல் குருவுமாய்' என்றது சிவஞானபோதம்.

முதல்வன், வேற்றுமை இல்லாமல், உடம்பில் உயிர் இருப்பது போலும் ஒரு கலப்புடைமையால் ஆன்மாவே திருமேனியாக உடைய வனாகி நிற்கின்றான்.

சில ஆகமங்களில் குருமூர்த்தியாதாரத்தை அதிட்டித்து நின்று உணர்த்தும் என்றிருப்பதற்கு இயைபு யாது? பொருளியல்பால்தானே ஆதலாகிய இயைபு.

கலப்பாய் நிற்றலால் உயிரேயாதலும், பொருளியல்பால் வேறு நிற்றலால் தானே யாதலும், உயிர்க்கு உயிராய் நிற்றலால் தானேயுயிரா தலும் என்னும் முத்தன்மையும் இறைவன் உடையவன். அம்மூன்றி யல்பும் முன்னோர் விளக்கியவாறு இங்கு விளக்கப்பெறும்:—

1. உடம்பில் உயிர்போல, உயிரேயாய் நிற்பது ஒன்றாய கலப்புப் பற்றியது.

2. கண்ணின் கதிரோன் போல உயிரின் வேறாய் நிற்பது பொரு ளியல்பு பற்றியது.

3. கண்ணொளியின் உயிரறிவுபோல் உடனாய் நிற்பது உயிர்க்குயி ராதலாகிய தன்மைபற்றியது.

இங்ஙனம் இருப்பதால், அத்திருவருட்பயன் 'உள்ளினர்' என்று குருமுதல்வரைக் குறித்தது.

குருவருளைப் பெறச் சிவபுண்ணிய விசேடம் இன்றியமையாது வேண்டும். அதைத் 'தவம்' என்பர் முன்னோர். 'தம் முதல் குருவுமாய்த் தவத்தினில் உணர்த்த' என்றது காண்க.

அத்தவம் 'இறப்பில் தவம்' ஆகும். 'இறப்பில் தவத்தான் மருவு வனும் ஞானத்தை வந்து' என்றது சிவஞானபோத வெண்பா (47).

அவ்வாறு அழிவில்லாத சரியை கிரியை யோகங்களாகிய தவத்தைச் செய்து வந்து ஞானத்தை மருவியவருள் திருஞானசம்பந்தரும் ஒருவர். அதை மருவிய திறத்தில் அவர் தனிச் சிறப்புடையவராய்த் திகழ்கின்றார்.

"பரசமயத் தருக்கு ஒழியச், சைவமுதல் வைதிகமும் தழைத்து ஓங்க, தொண்டர் மனம்களி சிறப்பத், தூய திருநீற்றுநெறி எண்திசையும் தனிநடப்ப, ஏழ் உலகும் குளிர்தூங்க, வண்தமிழ் செய்தவம் நிரம்ப, அசைவில் செழுந்தமிழ் வழக்கே அயல் வழக்கின் துறைவெல்ல, திசையனைத்தின் பெருமையெலாம் தென்திசையேவென்று ஏற, தவம் பெருக்கும் சண்பையிலே சராசரங்கள் எல்லாம் சிவம் பெருக்கும் (அத்திருஞானசம்பந்தப்) பிள்ளையார் திருவவதாரம் செய்தார்.

தோணியப்பர் திருவருட்குச் செய்யும் தவத்தின் முளைபோல் வளர்ந் தருளினர். உலகு உய்ய மூன்றுவதாண்டில் நிகழ்ந்தது குருவருள்.

பண்டு திருவடிமறவாப்பான்மையார் அவர். பரசிவன் திருவருளால் வேதியர் வழிபாட்டின் பயனாக மறைக்குலத்தில் தொண்டின் நிலை தர வந்தவர். சிவபெருமானைப் பிரிந்த உணர்வு நினைவிற்கொண்டீர்க்க, அயலான குறிப்பினராய் வெருக்கொண்டழுவார்.

ஒருநாள் நீராடச்சென்ற தாதையாருடன் தொடர்ந்தழுது பின் சென்று, சிகாழியில் பிரமதீர்த்தக்கரையில் நின்றார். தாதையார் வாவியுள் இறங்கி நீருட்புகுந்தார். அகமருடணம் பற்றி மீண்டும் நீரில் முழுகினர். அவரைக் காணுமை (இருபொருளில்) பற்றி, முறைபுரிந்த முன்உணர்வு மூள 'அழத் தொடங்கினர்'. அழுதருளினர்' 'செம்மேனி வெண்ணீற்றூர் ஆகிய குருவினது திருத்தோணிச்சிகரம் பார்த்து அம்மே அப்பா என்று அழைத்தருளினர் அழுதருளினர்'.

' அருள் நோக்கால் (சக்ஷு தீக்ஷையால்) பொன்மலை வல்லியும் தாமும் பொருவிடைமேல் எழுந்தருளிச் சென்னி இளம்பிறை திகழப் பொய்கை (பிரமதீர்த்தம்) மருங்கு அணைந்தார்! இறையவர் மலைக்கொடியைப் பார்த்து, பால் அடிசில் பொன்வள்ளத்து ஊட்டு என்ன, கறந்து, எண் அரிய சிவஞானத்தின்னமுதம் குழைத்து, அடிசில் உண் என ஊட்ட, எதிர்நோக்கும் கண் மலர்நீரை உமையம்மை துடைத்து, பொற்கிண்ணம் கையில் அளித்து, அழுகைதீர்த்து, அருள்புரிந்தார் அங்கணனர் '

' யாவருக்கும் தந்தைதாய் ஆம் இவர் இப்படி அளித்ததால், அவர் பிள்ளையாரானர். ஆகவே கிடைத்தற்கரிய சம்பந்தம் கிடைக்கப்பெற்றூர். அச் சம்பந்தம் யாது? அகில தேவருக்கும் முனிவருக்கும் தெரிவரிய பொருளினுடைய சம்பந்தம். அப்பொருள்தான் யாது? தாவில்லாத தனிச் சிவஞானம். அச் சிவஞானமே குருவருள். அதன் சம்பந்தம் உற்றதால் ' சிவஞானசம்பந்தர் ஆயினர்.'

1. சிவனடியே சிந்திக்கும் திருப்பெருகு சிவஞானம் ஆகிய உவமையிலாக் கலைஞானம். 2. பவமதனை அறமாற்றும் பாங்கினில் ஓங்கிய ஞானம் ஆகிய உணர்வரிய மெய்ஞ்ஞானம் இரண்டும் உணர்ந்தார் தவமுதல்வரான சம்பந்தர். மல்லல் நெடுந்தமிழால் மறைபாடினர். அப் பாடல் அம்மையப்பராகிய குருநாதரிடம் செல்லவேண்டித் திருச் செவியைச் சிறப்பித்து, ' தோடுடைய செவியன் ' எனும் மெய்ம்மொழித் திருப்பதிகம் பாடி, தாதையார்க்கு, ' எம்மை இது செய்தபிரான் இவன் ' என்று உச்சியில் எடுத்தருளும் ஒரு திருக்கை விரலால் சுட்டிக் காட்டி யருளினர். இது குருவருட்பயன்.

திருநாவுக்கரசு (சிவம்) வளர் திருத்தொண்டின் நெறிவாழவரும் ஞானத்தவமுனிவர் வாகீசர். அவர்க்குத் திலகவதியார் குரு. அவர் தாளிணைமேல் விழுந்து அயரும் தம்பியாரை நோக்கி, பெருமானருள் நினைந்து, கைதொழுது, பரசமயக்குழி விழுந்து அருந்துயர் உழந்தீர் எழுந்திரீர்' என்றார் குரு. கற்றைவேணியர் அருளே இது. திருநீற்றை அஞ்செழுத்து ஓதிக்கொடுத்தார். அதை உருவார அணிந்து பெருவாழ்வு பெற்றார். இது குருவருட்பேறு, திருவதிகைமாநகரை உற்றுத் தம்பிரான் திருவருளால் தமிழ் மாலைகள் சாத்தும் உணர்வுபெற உணர்ந்து உரைப் பாரானார். மெய்யெலாம் வெண்ணீறு சண்ணித்தமேனியராய், மெய்யன் புருவாய், மருள் (ஆணவம்) பிணி (கன்மம்) மாயை அறுத்திட, 'கூற்றாயினவாறு விலக்ககிலீர்' என்னும் திருப்பதிகம் ஏழுலகின் துயரும் ஏகுமாறு பாடியருளினார். சூலைநோய் அப்பொழுதே அகன்றது. உயிரோடு சிவஞானமும் உதவிய கருணையைப் போற்றினார்.

திருநாவுக்கரசர்க்கு அருள்செய்யவேண்டி எதிர்நோக்கிச் செந்நின்ற குருபரன் திருவருள்பெற்ற சிறப்பு அவரை அம்முதல்வன் கருணைக் கடலில் முழுகச்செய்தது. இத்தகைய குருவருள்பெறத் துணையாயிருந்த சூலையினுக்கு எதிர் செய் குறை என்கொல் எனத் தொழுவாரானார். அசரீரியாக ஆகாயத்தில். நின்நாமம் நாவுக்கரசு என்று மன்னுக. ஏழுலகினும் அது மன்னுக, என்று எழுந்தது. இது குருவருட்பயன்.

திருநாவலூரர் மணம்புரியும் திருநாளில், திருமணப்பந்தர் முன்பு வந்தவர் முந்தைமறையாயிரம் மொழிந்த திருவாயார். அவரே குருநாதர். 'இந் நாவல்நகர் ஊரன் என் அடியான் என்று அண்ணலை ஓலைகாட்டி ஆண்டார். ஆண்டவன் பின் ஆரூரரும் திரிமுகக்காந்தம் சேர்ந்தவல் இரும்பு அணையுமாறு போலக் கடிது சென்றார். ஈன்ற ஆன்கனைப்புக் கேட்ட கன்றுபோல் கதறி, மெய்யெலாம் புளகம் உற்று, கை தலைமேல் ஏற வணங்கி, வன்றொண்டராகி, பாட்டாகிய அர்ச்சனை செய்து, பித்தனும் பிறைசூடியை மறவாது, வெள்ளிமாமலையில் சிவபிரான் திருவணுக்கன் திருவாயிலை அணுகி அண்ணலார் திரு முன்பு நண்ணினார். சேணிடை விட்ட கன்று கோவினைக் கண்டு அணைந்தது எனச் சிவபிரானை அடைந் தார். ஆநந்தவடிவு நின்றதுபோன்று இன்பவெள்ளத்து மலர்ந்தார். கழலாத காயம் (களையாவுடல்) அறிவாத் ததைந்தார்.' குருவருட்பயன் இது. "தோடுகூற்று பித்தா மூன்றும் பீடுடைத் தேசிகன் பேரருளாகும்."

# திரு வெண்ணீறு

**வித்துவான், திரு. ச. சேதுசுப்பிரமணியப் பிள்ளை அவர்கள்**

தமிழ்ப்பேராசிரியர், பல்கலைக் கல்லூரி, தருமபுரம்.

உலகில் உள்ள எல்லா உயிர்களுமே துன்பத்தை நீக்கி இன்பத்தைப் பெற்று நுகரவேண்டும் என்று எண்ணுகின்றன. இது இயற்கை நிலை. இதற்கு எதிராக—நாடுகள் ஒவ்வொன்றும் குமுறிக்கொண்டு இருக்கின்றன, கொக்கரிக்கின்றன, தங்கள் தங்கள் நாடுகள் சுயேச்சையோடு வாழ—சுபிட்சைப் பாதையிலே செல்ல—அமைதியோடு வாழ.

மீண்டும் போர் மூண்டால் மனித சமுதாயமே நிர்மூலமாகிவிடுமோ என்ற எண்ணம் அச்சத்தை—பீதியைக் கிளப்பிவிடுகின்றன. கடந்த மகாயுத்தத்தால் சீர்கேடடைந்த நாடுகள், அதினின்றும் சலியா உழைப்பினுலும், விடா முயற்சினுலும் வறுமைப் பேயை ஒழித்து முன்னேற்றப் பாதையில் சென்று கொண்டிருக்கின்றன. தேன் பிழிந்தெடுக்கப் பட்ட தேன்கூடு போன்ற விடுதலை பெற்ற நாடுகளிலும் முன்னேற்றப் பாதைக்குப் பங்கம் விளைகின்ற நிலையில் சில காலமாக யுத்த பீதிகள் சஞ்சரித்துக் கொண்டிருக்கின்றன.

தங்கள் தங்கள் நாடுகள் வளமுற வேண்டுமானுல்—அமைதியோடு வாழ வேண்டுமானுல்—ஏனைய நாடுகளும் முன்னேற்றமடைய வேண்டும். அதற்கு வழி வகைகளை வகுத்து வழிகாண வேண்டும்—ஆக்க வேலை செய்யவேண்டும்—அந்த எண்ணத்திலே மனிதருள் மாணிக்கமாகிய இந்தியாவின் முடிசூடா மன்னராகிய நேருஜீ அவர்கள் பரந்து விரிந்திருக்கின்ற பாருலகமே நல்லெண்ணத்தோடு வாழ அல்லும் பகலும் அரும்பாடு படுகிருர்கள்.

செயற்கரிய செய்யும் அத்தகைய பெரியார் அவர்கள் இருபதாம் நூற்ருண்டின் சமாதானத்தூதர் என்று பாராட்டப் படுகிருர்கள். இது இன்று நாம் கண்கொண்டு காணுகின்ற நிலை.

இதே போன்று ஏழாம் நூற்ருண்டிலே அமைதியின்மை ஏற்பட்டது. எங்கே? மாடமாநகராம் மதுரையிலே. சங்கம் வைத்து முத்தமிழ் வளர்த்த பெருமையுடைய மதுரைமா நகரிலே. ஆலவாய் அண்ணலாம் சோமசுந்தரக்கடவுளே பாண்டிய மன்னனுக முடிசூட்டிச் செங்கோல் செலுத்திய மதுரைமாநகரிலே—கூன் பாண்டியன் என்னும் நெடுமாறன் ஆட்சி புரிந்து வந்த காலத்திலே அவனிடத்தில் சமணர்கள் அண்டி ஆதரவு

பெற்று வெண்ணீற்று ஒளியை ஆட்டங்கொடுக்கும் நிலைமைக்கு உலை வைக்க எண்ணற்ற எண்ணங்களை உருவாக்கி அரசனுக்குப் புகட்டினர். அந்த இருண்ட போதையிலே அரசனும் சொக்கி மதிமயங்கினன்.

இதன் விளைவு, நாடு பயங்கரப்பாதையை நோக்கி இருண்ட நெறியிலே விரைந்து சென்று கொண்டிருந்தது.

இதன் முடிவு பழமையின் ஆணிவேரை அறுக்கும் நிலையில் கொண்டு வந்து விடுமே—பழமை சீர்குலைந்தால் சைவம் எங்கே?—இன்பநிலை எங்கே?—புதுமைப் பேயல்லவா எங்குப்பார்த்தாலும் தலை விரித்துத் தாண்டவமாடுமே, இச் சந்தர்ப்பத்தைப் பயன் படுத்திக் கொண்டு சந்தர்ப்பவாதிகள் சமயோஜிதப் பேச்சாளிகள் சதிசெய்து விடுவார்களே இந்தநிலையை எவ்வாறு போக்குவது—தமிழ் மணத்தோடு? சைவமணமும் வீசின நாடாயிற்றே! என்று ஈசா! எனையாளும் தயாநிதியே!—என்று ஒரு தாயுள்ளம் இடைவிடாது முறையிட்டது—செபித்தது—இன்று நேருஜீ யுத்த பீதியை ஒழித்து உலகமக்களை உருவாக்க சமாதான மந்திரத்தைச் செபிப்பது போல.

அந்தத் தாய் பட்டத்தரசி மட்டுமல்ல; அன்று மங்கையர்களுக் கெல்லாம் உண்மையான அரசியர்க விளங்கிய மங்கையர்க்கரசியார் என்று சைவப்பெரு உலகத்திற்குச் சொல்லவும் வேண்டுமோ? அந்தத் தாய் என்ன செய்தார்? அவர் உளங்கனிந்த பிரார்த்தனையைச் செய்தார். பிரார்த்தனை விண்போகுமா? கண்ணீரைக் காணிக்கையாகச் செலுத்தினர்.

பிரார்த்தனையோடு கூடிய திலகவதியார் சிந்திய கண்ணீரல்லவா? திருநாவுக்கரசரின் போக்கை அடியோடு மாற்றிவிட்டது. இந்த வரலாறு காட்டும் உண்மை என்ன? அழுது காமுற்று அரற்றும் பிரார்த்தனைக்கு அணுகுண்டும் அஞ்சிப்பணியும். அகில உலகமும் அடங்கும். தீராத நோயும் தீரும். தீயமனமும் திரும்பும், என்ற உண்மைதானே. இக் கருத்தைக் கடைசிநாள்வரை பிரார்த்தனை செய்து யாதொரு உயிர்ச் சேதமும், பொருட்சேதமும் இல்லாமல் சுதந்திரம் வாங்கித்தந்தார் காந்தி மகான்.

இக்காலத்தில் காந்திமகான்காட்டியவழி அக்காலத்திலே கண்ட உண்மை - இவ்வித பிரார்த்தனை செய்த தாய்க்கு விளக்கிற்குத் தூண்டு கோல்போல உதவியாக இருந்தவர் குலச்சிறையார் என்ற பெயருடைய அமைச்சர்.

காந்திமகான் பிரார்த்தனை எப்படிப்பட்டது? தன்னலம் விரும்பாதது. பொதுநலம் விரும்புவது என்பதை அனைவரும் அறிவர். அதுபோல காழியில் தோன்றிய ஞானசம்பந்தரும் திருநெடுங்களம் என்ற தலத்திற்குச் சென்றார். உலகபிதாவாகிய மூர்த்தியைக் கண்டார். அஞ்சலிசெய்தார். நெக்கு நெக்கு விழிநீர் மல்க வேண்டுகிறார். என்ன வேண்டினார்? தனக்கென்றாவது தன்னுடன் இருக்கும் பதினாயிரம் அடியவர்களுக்கு என்றாவது வேண்டினாரா? இல்லை. எவராயிருந்தாலும் ஆகட்டும்! உனது இடத்திற்கு வந்து உனது அருள் மிகுந்த வெண்ணீற்றை அணிவாராகில் அவரது துன்பங்களை நீக்கவும், அவர் இன்ப நிலையில் வாழவும் வரம் வேண்டினார். பொது நலமாக மக்கள் இன்பம் அடைய வெண்ணீறு விளங்க - வேண்டிய வரமல்லவா? இது. இதனை 'எம் பெருமான்அணிந்த நீறுகொண்டார் இடர்களையாய் நெடுங்களமேயவனே' என்று இவர் தலந்தோறும் சென்று பிரார்த்தனை செய்யும் பெருமை, மதுரையிலும் பரவியது. மந்திரியார் செவியிலும் புகுந்தது. அரசியார் அருள் உள்ளத்திலும் தங்கியது. தங்கிய எண்ணம் மேலும் தூண்ட எதிர்காலத்தில்,புறச்சமய இருள்நீங்கிச் சைவவெண்ணீற்றொளி விளங்க-தியநெறியில் சென்ற மதுரையும் மன்னனும் நல்வழியில் திருந்த - நற்றமிழ் வல்ல ஞானசம்பந்தரைப் பாண்டிமா தேவியார் அழைத்தார். அழைப்பிற்கு இணங்கி அவரும் மதுரையை வந்தடைந்தார். விண்ணில் ஒளிசெய்யும் சந்திர சூரியரைப்போல் இருவர் வெண்ணீற்றொளியை செய்து மண்ணில் வாழ்வதைப் பார்த்தார்.

" நீறில்லா நெற்றிபாழ் " என்று தமிழ் மூதாட்டி சொல்லியும் நெற்றி பாழாக இருப்பதைக்கண்டார். அங்கமெலாம் குறைந்து அழுகுகின்ற நோய் உருவெடுத்து வந்தாலும் காண்பேன், அஞ்ச மாட்டேன். ஆனால் வெண்ணீறணியாதவரைக் காணக் கண் கூசுகிறதென்று அஞ்சினார். திருநீறும் சாதனமும் வாழ்ந்த மதுரையா? இது. மன்னவனெப்படியோ மன்னுயிரப்படி என்ற பழமொழிப்படி ஒரே திரண்ட இருளாகக் காணும் தோற்றத்தைப் போக்குவது எப்படி எனஎண்ணினார். திருமறைக்காட்டிலிருந்து மதுரைக்குப் புறப்படும் சமயம் நாவுக்கரசர் தடுத்தபோது பாடிய "புத்தரொடமணை வாதில் அழிவிக்கும் அண்ணல் திருநீறு செம்மைதிடமே" என்ற உறுதி மேலும் ஊக்கத்தையளிக்க தமக்கமைந்த இடத்தில் தங்கினார்.

உடலை உழைக்காமல் உண்டு வாழும் புறமதத்தவர்கள் தங்களுடைய ஏகபோக வாழ்விற்கு அழிவு ஏற்படும் என்றஞ்சித் தங்களுக்கு நிலையான பாதுகாப்பு ஏற்படுத்திக் கொள்ளவேண்டித் திட்டம் தீட்டினார். அத்திட்டங்களில் ஒன்றுதான், உயிரற்ற உடலைத் தீவைத்துச் சுட்டெரிப்பது போல உயிருற்ற உடலாகிய திருஞானசம்பந்தர் தங்கிய இடத்திற்கே தீவைத்தனர். இத்தீயே திருஞானசம்பந்தர் ஏவுதலா

பாண்டியமன்னனைத் தாக்கி வெப்பநோயாக மாறி அரசனை வாட்டி எடுத்தது. இது சமணர்களுக்கு ஒரு சோதனைக்காலம். நெருக்கடியான கட்டம். இந்த நெருக்கடியைச் சமாளிக்க புறமதத்தார் கை வரிசை எல்லாம் காட்டினர். அரசனுக்கு வந்த நோய் வேகம் தணிய வில்லை. கணந் தோறும் மிகுந்துகொண்டே வந்தது - வெம்பநோயைத் தணிக்க அவர்கள் செய்த முயற்சி எல்லாம் - சாமர்த்தியமெல்லாம், வீண்போகவே அரசனுக்கு அவர்களிடமிருந்த நம்பிக்கை குறைந்தது. மதிப்பும் குறைந்தது. இந்த நிலையில் இந்தக் கொடூரமான நோயை ஒரு கணத்தில் போக்கக்கூடிய உண்மையிலே ஆற்றலும் அருகதையுமுடைய ஒரு பெரியார் நம்நகருக்கு வருகைபுரிந்துள்ளார், அவரை அழைத்து வந்தால் இந்நோய் நீங்கும் என்றார் மங்கையர்க்கரசியார். நெருப்பில் துடிக்கும் புழு தன்னை எவ்வாற்றானும் காப்பாற்றிக்கொள்ள முயற்சிப் பதைப்போல் அரசனும் சொல்லொணாத துன்பத்தினின்றும் காப்பாற்றிக் கொள்ள வழிதெரியாது தத்தளிக்கும் நிலையில் யாவராயினும் அழைத்து வருக என்றான்.

அரசன் உத்தரவுபெற்று அழைத்துவந்த ஞானசம்பந்தர் பாண்டி யனைக் கண்டார். அப்போதும் விட்டார்களா ஒன்றார். ஒரு பாதியைச் சம்பந்தரும், மற்றொரு பாதி உடலில் உள்ள நோயைத் தாங்களும் தீர்க்க வேண்டினர். அப்படியே ஆக என்று அரசன் சொல்ல, பாண்டியன் பாவத்தை நீறுக்குவது நீறே என்று வெண்ணீற்றை எடுத்தார். பதிகம் பாடினார். பாடலோடு வெண்ணீற்றைப் பூசினார். வெப்பம் விலகி உடல் குளிர்ந்தது. பூசும் சமயத்தில் பாடிய அருட்பாடல் திருநீற்றுப் பதிகம். தீப்பிணி தீரத்தென்னவனுக்காகப் பாடப்பட்டதாயினும், பொது நோக்கங்கொண்டு, இப்பதிகத்தைச் சொன்னவர் யாவராயினும் அவர் தீயநோயில் விலகி நல்லவராவார் என்பதைத் "தேற்றித் தென்னன் உடலுற்ற தீப்பிணியாயின தீரச் சாற்றிய பாடல்கள் பத்தும் வல்லவர் நல்லவர்தாமே" என்ற கடைக் காப்புச்செய்யுளினால் விளக்கி யருளினர். சமணர்கள் தீர்ப்பேன் என்ற ஏனைய பாதி உடலில் அமைந்த வெப்பநோயையும் நீக்கியது இப்பதிக வெண்ணீறே.

## இப் பதிகத்தின் கருத்து

உடல் நோயையும், துன்பத்தையும் விலக்கி இன்பம் தருவது. திரு நீற்றைப் பேணியணிபவர் யாவர்க்கும் பெருமை அளிப்பது. எண் திசையோரும் ஏத்தும் பெருமையுடையது. மந்திரமும், சுந்திரமும், தந்திரமும் ஆக விளங்குவது. வேதம் சொல்வதும், புண்ணியர் பூசுவதும், அறிவை அளிப்பதும் இஷ்ட சித்தியைத் தருவதும் இதுவே. இருமை இன்பத்திற்கும் உதவியாவதும், இறப்பை விலக்குவதும் இதுவே.

இராவணன் அணிந்துகொள்ளும் படியான சிறப்பும் உடையது. பூச இனியதும் உண்மையில் விளங்குவதும் இதுவே என்று சிறப்புச் சொல்லி, இவ்வெண்ணீறே அமணர்கள், சாக்கியர்கள் கண்களைத் திகைக்கச் செய்து என்றும் இதைப் பூசாதவர் அடையும் கொடுமையும் இப்பதிகத்தில் கூறினர்.

உவர் மண் காய்ந்த வெண்மைஉடம்பையுடைய வனைக்கண்டபோது. வண்ணனென்று கருதினர் சேரமான் பெருமான். வாரவேடம் நினைப்பித்தீர்—அன்புள்ள திருநீற்றொளி வடிவை நினைக்கச் செய்தீர் என்று கூறினர்.

இவைகளால் திலகவதியார் தாம் நேரே வெண்ணீற்றைக் கொடுத்துத் தம்பியின் சூல நோயைப் போக்கினர்—மங்கையர்க்கரசியாரும் ஞானசம்பந்தரைக் கொண்டு வெண்ணீற்றொளியைப் பரவச் செய்தார். இன்றும் இப்பதிகத்தை ஓதி நீறணிந்து, சுரநோய் நீங்கப் பெறுகிறவர்களைக் கண்கூடாகக் காண்கிறோம், ரெட்டியப்பட்டி சுவாமியை வழிபடுவோர் விபூதியைக் கொடு நோயிலும், மகப்பேறுகாலத்திலும் உண்டு நன்மை யடைவதை நேரில் காண்கிறோம். இவ்விதப்பெருமை தரும் வெண்ணீற்றை யாவரும் அணிந்து திருநீற்றுப் பதிகமும் சொல்லி இன்பம் அடைவோமாக.

## 4 அறிவிலிகளது வறுங்குரைத்தல்

தவைச்வர்யம் யத்தத் ஜகதுதய ரக்ஷா ப்ரலயக்ருத்
த்ரயீ வஸ்து வ்யஸ்தம் திஸ்ருஷு குணபின்னஸு தனுஷு ।
அபவ்யானு மஸ்மின் வரத ரமணீயா மரமணீம்
விஹந்தும் வ்யாக்ரோசீம் விததத இஹைகே ஜடதிய : ॥

இஷ்டங்களையளிப்பவனே உலகங்களை ஆக்கல், காத்தல், அழித்தல் என்ற உனது பெருமை குணங்களால் வேறுபட்ட மூன்று உடல்களில் வேதங்களால் பிரித்துக்காட்டப்பட்டது. சில மூடர்கள் இதை மறுப்பதற்காக, கயவர்களுக்குச் சிறந்து தோன்றக்கூடியதும், விஷ்ணு பெரியவன், சிவன் பெரியவன், பிர்மா பெரியவன் என்ற வீணான (பயனற்ற) துமான கூச்சலை இடுகிறார்கள். (குரைத்தல் கூச்சல் என மருவிற்று)

# அஞ்செழுத்துண்மை

வித்துவான், நெல்லை, திரு. ம. சிவசம்பு அவர்கள்
தமிழாசிரியர், ஆதீனக் கீழைக்கலை உயர்நிலைப்பள்ளி, தருமபுரம்.

" நாளை நாளை என்பீராகில்
நமனுடை முறை நாள் ஆவதும் அறியீர்
நம்முடை முறை நாள் ஆவதும் அறியீர்
எப்போதாயினும் கூற்றுவன் வருவான்
அப்போது அந்தக் கூற்றுவன் தன்னைப்
போற்றவும் போகான் பொருளொடும் போகான்
நல்லார் என்னுன் நல் குரவு அறியான்
தீயார் என்னுன் செல்வரென் றுன்னுன். " (கபிலர் அகவல்)

என்பது தெரிந்து வாழ்நாளை வீணே கழிக்காது வையத்துள் செவ்வனே வாழ்ந்து இறைபணியும் மக்கள் தொண்டும் செய்து உலகில் நிலையாப் புகழை நிறுத்தி இன்ப வீட்டை அடைந்த பெரியோர்கள் பல்லாயிரவர். இவ்விதம் அவர்கள் இன்ப வீட்டை அடைவதற்குக் காரணமாக இருந்த மூலமந்திரம் அஞ்செழுத்தே. இதன் உண்மையைத் திருஞானசம்பந்தப் பெருமான் ஓதிய நமச்சிவாயத் திருப்பதிகமும், திருநாவுக்கரசுப்பெருமான் ஓதிய நமச்சிவாயத் திருப்பதிகமும், சுந்தரமூர்த்திப்பெருமான் ஓதிய திருப்பாண்டிக் கொடிமுடிப் பதிகமும் நன்கு விளக்கும்.

" போற்றவும் போகான் பொருளொடும் போகான் "

என்ற நமனைப் போக்கிய புண்ணியமூர்த்தி ஒருவர் உண்டு. அவர்தாம் மார்க்கண்டேயர். இவர் காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கித் திருவஞ் செழுத்தை ஓதிய முனிவர். இந்நிகழ்ச்சியை நாவுக்கரசர்பெருமான் "விட எடுத்தது காலனை" "கன்றிய காலனைக் காலால் கடிந்தான் அடியவற்கு" என்று கூறி இருப்பது கவனிக்கத்தக்கது. இதனால் கூற்று வனும் அஞ்சும்படியாக உதைத்துக் காத்தன திருவஞ்செழுத்தே. இது,

" கூற்றஞ்ச வுதைத்தன வஞ்செ ழுத்துமேன "

" கொல்ல நமன்றமர் கொண்டு போமிடத்து
அல்லல் கெடுப்பன அஞ்செழுத்துமே "

என்ற ஞானசம்பந்தப்பெருமான் திருவாக்குக்களால் அறியலாம். இந்த ஐந்தெழுத்து அந்தணர்கள் மாலைக்காலத்திலே ஓதும் மந்திரம் ஆகும்.

"வேதியர்க்கு அந்தியுள் மந்திரம் அஞ்செழுத்துமே" என்பதால்தெரிகிறது. இவ்வஞ்செழுத்தை ஓதினவர்க்கு எவ்விதத் துன்பமும் வாராது.

"தும்மல் இருமல் தொடர்ந்த போழ்தினும்
வெம்மை நரகம் விளைந்த போழ்தினும்
இம்மை வினையடர்த் தெய்தும் போழ்தினும்
அம்மை யினும் துணை அஞ்செழுத்துமே."

இப்பாடல் இக்கருத்தை நன்கு விளக்குகிறது. தொண்டர்களுக்கு முத்தி இன்பத்தைக் கொடுப்பதும், வினையைக்கெடுப்பதும், இவ்வஞ்செழுத்தே.

"தொண்டர்கள் கொண்டு துதித்த பின் அவர்க்கு
*அண்டம் அளிப்பன அஞ்செழுத்துமே"

"வினைப்பகைக்கு அத்திரம் ஆவன அஞ்செழுத்துமே"

இவ்வஞ்செழுத்து மனிதனைத் தேவமகாதேவனுகச்செய்யவல்லது. எல்லா மக்களுக்கும் இன்பத்தைக் கொடுக்கவல்லது வல்வினையைச் சிதைக்க வல்லது. முத்தியாகிய செல்வத்தைக் கொடுக்கவல்லது. பந்தபாசத்தை அறுக்கவல்லது. கல்லைக்கட்டிக் கடலிலேள்தளினுலும் நல்ல துணையாக இருப்பது. பாவத்தை நண்ணி நின்று அறுப்பது. நடுக்கத்தைக்கெடுப்பது. நாவுக்கு அருங்கலமாக இருப்பது. இல்லக விளக்காகவும், சொல்லக விளக்காகவும், பல்லக விளக்காகவும், பலருங்காண நல்லக விளக்காகவும் இருப்பது. இதனை,

"இல்லக விளக்கது இருள் கெடுப்பது
சொல்லக விளக்கது சோதியுள்ளது
பல்லக விளக்கது பலருங் காண்பது
நல்லக விளக்கது நமச்சிவாயவே."

என்ற நாவுக்கரசர் பெருமான் வாக்கால் உணரலாம். நன்னெறியாக இருப்பதும் நமச்சிவாயவே என்னும் மந்திரமே. இதன் உண்மைப் பொருளை உணர்ந்து அனுபவித்த சுந்தரமூர்த்தி சுவாமிகள் "நற்றவா உனை நான் மறக்கினும் சொல்லு நா நமச்சிவாயவே" என்ருர்.

இவ்வஞ் செழுத்தினைக் குருவருளால் அன்றி உணர முடியாது. குரு அருளால்தான் உய்த்துணரவைக்க முடியும் என்பது,

* அண்டம் - முத்தி.

" எவ்வெவர் கோட்படு பொருளு மஞ் செழுததி
நடக்கிய வற் றியல்பு காட்டி
மெய் வகையஞ் சவத்தையினு நிற்குமுறை
யோது முறை விளங்கத்தேற்றி
அவ்வெழுத்தி னுள்ளீடு மறிவித்துச்
சிவ போகத் தழுத்தி நா யேன்
செய்வினையும் கைக் கொண்ட வேலப்ப
தேசிகன்ருள் சென்னி சேர்ப்பாம். "

என்ற திருப்பாட்டால் அறியலாம். அறியவே குருவருள் பெற்று அஞ்செழுத்தின் உண்மை அறிந்து அதை ஓதிப் பயன் அடைவோமாக.

---

மதிப்புரை

## சிவானந்த கீதை

ஸ்ரீசுவாமிசிவானந்தா அவர்கள் அருளியது. தமிழாக்கியவர் ஸ்ரீசிவானந்த விஜயலக்ஷ்மீ M. S. G. S. S. D. L. S. யோகவேதாந்த ஆரண்ய விஸ்வ வித்யாலயப்பதிப்பாக வெளியிடப்பட்டது. பக்கம் 236. விலை 2—0—0 சுவாமி சிவானத்த மகாராஜின், பத்தமடையில்பிறப்பு, திருச்சியில் படிப்பு, மலேயாவில் மருத்துவப்பணி, ஆச்ரமம் ஏற்றல், ஆனந்தகுடீர் அமைத்தல், தேவஜீவனசங்கம் ஏற்படுத்துதல், யாத்திரை முதலிய சரிதம் விரிவாகக் கூறப்பட்டுள்ளன. 18 அக்ஷௌஹிணி 18 நாட்கள் போரிட்ட வரலாற்றை 18 பர்வங்களில் வர்ணிக்கும் பாரதத்தில் உள்ள கீதை 18 அத்யாயங்களின் சாரரூபமான சுவாமிகளின் 18 கடிதங்கள்முறையே தென் மொழியிலும்தேவ மொழியிலும் இந்நூலின் ஆதியிலும் இறுதியிலும் உள்ளன. சிறந்தவன் செய்வதை, அவன் பிரமாணமாகக்கொள்வதை உலகமனுசரிக்கும் என்ற கீதையின் வாக்கியப்படி மக்களுக்குப் பெரிதும் பயன்படுவன. அறிவாளிகளுக்கு இலக்கியமும், பாமர மக்களுக்கு நாடகமும், பசு சிசு செடி கொடி யாவற்றிற்கும் இசையும் இன்பமுமூட்ட வல்லன. அதிலும் யாவராலும் விரும்பப்படும் வில்லுப்பாட்டு ரூபமாகவும் பல பக்தர்களின், இசைப்பாட்டு ரூபமாகவும், வசனநடைரூபமாகவும் சுவாமிகளின் சரிதம் பெருமை முதலியன எழுதப்பட்டுள்ளன. தேகம், இன்னது தேகி இதுவென உணர "நான்யார்" என்ற தலைப்பிலுள்ளது பெரிதும் பயன்படும். இன்பம்தேடி இமையம் செல்லாது இருந்தஇடத்தில் சகல காரியங்களையும் கடவுளுக்கு அர்ப்பணம் செய்து அவன் நாமபஜனை செய்தேபெறலாம் என்பது சுவாமிகளின் பொன்னுரை. இன்பம் அமைதி சக்தி யாவற்றையும் இந்நூலைப் பலமுறை படித்தலால் பெறலாம். பேரானந்தப் பேற்றைத்தரும் குருமகிமை விரித்துரைக்கப்பெற்றுள்ளது.

கே. இராஜகோபால சாஸ்திரிகள்

# கோயில்

வித்துவான், திரு. வி. சபேசன் அவர்கள்
தமிழாசிரியர், ஆதீனக் கிழைக்கலை உயர்நிலைப்பள்ளி, தருமபுரம்.

கோயில் என்பதைக் கோஇல் எனப் பிரித்துக் கடவுள் எழுந்தருளியுள்ள இடம் எனப் பொருள் கூறுவர். எங்கும் நிறைந்திருக்குங் கடவுளைப் பார்ப்பது பக்குவமுள்ளவர்களுக்கே வாய்க்கும். ஆகலின் பக்குவமில்லாதவர்களும் கடவுளைக் காண—அடைய முதற்படியாகக் கோயிலைக் கொண்டு, அங்குக் கடவுளை வழிபடுதல் வாயிலாகப் பக்குவமுடையவர்களாகித் திகழ்கிறார்கள். பின்னர் எங்கும் நிறைந்திருக்கும் பரம்பொருளை - கடவுளைத்தான் இருந்த இடத்திலிருந்தே கண்டு களிக்கிறார்கள்.

நமது சைவசமய குரவர்களாகிய நாயன் மார்களும் மக்களுக்கு வழிகாட்டிகளாய்த் திகழ்ந்து கோயில்களுக்குச் சென்று கடவுளைத் துதித்து வழிபட்டுவந்தார்கள். மேலும் அவர்கள் வழிபடும்போது தாங்கள் தனித்த நிலையில்இருந்து இறைவனைவழிபடுவதைவிட, பலரும் கூடி வழிபடுவதில் ஓர் இன்பங்கண்டார்கள். அவ்விதம் வழிபடுவதைச் சிறந்த தொண்டாகவுங் கருதிவந்தனர். அவர்களைச் சிவனடியார் திருக்கூட்டம் என்ற பெயரால் அழைக்கலாயினர். இப்போதுங்கூடப் பற்பல இடங்களில் வாரவழிபாடு முதலியன தொடங்கிப் பலர் ஒன்றுகூடிக் கோயிலுக்குச் சென்று இறைவனை வழிபட்டு வருகிறார்கள். கோயில் ஒவ்வோரூரிலும் இருக்கவேண்டும் என்றும், ஆலயத்தில் இறைவனைவழிபடுவது சிறந்தது என்பதையும்

" கோயிலில்லா வூரிற் குடியிருக்கவேண்டாம் "

" ஆலயம் தொழுவது சாலவும் நன்று "

என்ற தொடர்கள் நமக்கு வற்புறுத்துகின்றன

இது கருதியே இறை வழிபாட்டிற்காகக் காஞ்சியில் காடவர்கோன் என்ற அரசன் மிகுந்த பொருட்செலவில் ஒரு கோயிலைக் கட்டினான். குடமுழுக்கிற் கென்று ஒரு நாளையும் குறிப்பிட்டான். யாகசாலை முதலியவற்றிற்கும் சிறந்த முறையில் ஏற்பாடு செய்திருந்தான். ஆனால் அதே காலத்தில் திருநின்றவூரில் பூசலார் நாயனாரும் ஆகமமுறைப்படி பிராகாரம் முதலியன அமைத்து ஒரு கோயிலைக் கட்டினார். அவரும் அரசனும் குட முழுக்கு விழாக் கொண்டாடக் குறித்த நாள், அருளால்

வேறு படாமல் ஒன்ருயிற்று. இறைவன் அரசனுடைய கனவில் எய்தி "நின்றவூர்ப் பூசல் அன்பன் நெடிதுநாள் நினைந்து செய்த நன்று நீடாலயத்து நாளை நாம் புகுவோம் நீ இங்கு ஒன்றிய செயலை நாளை ஒழிந்து பின் கொள்வாய்" என்று கூறிப் பூசலார் நாயனுர் கட்டிய உள்ளக் கோயிலுக்கே முதன் முதலில் எழுந்தருளினுர். நாயனுர்மனத்தில் இறைவனை வைத்துக் குடமுழுக்கு விழாவைச் சிறப்பாக நடாத்தினுர்.

அரசனும் அங்குச்சென்று பூசலார் உள்ளக் கோயிலில் இறைவனை வைத்து வழிபடும் தன்மையைக் கேட்டு அவர் பெருமையை வியந்து வணங்கிப் பின் தன்னூர்போய்ச் சேர்ந்தான். இவ்விதம் உள்ளக்கோயிலில் இறைவனை வைத்து வழிபடும் பக்குவமுடைய பூசலார் போன்றவர் களுக்கே முன்னதாக அருள் வழங்கிப் பின்னரே மற்றையவர்களுக்கு அருள் வளங்குகின்ருன் இறைவன். இவ்விதம் அருள் வழங்கும் நிலையில் இறைவன் எழுந்தருளியுள்ள இடங்களைத்தான் கோயில் என்கிருேம். இவ்விதம் உள்ள கோயில்களுள் பாடல் பெற்றவை மிகப்பல. அவற்றுள் சிறந்தனவற்றைச் சைவசமய குரவர்களாகிய நாயன்மார்கள் மூன்று பதிகங்களால் தொகுத்துக் கூறியுள்ளார்கள். அவைகளுள் பிறக்க முத்திதரும் திரு ஆரூரையும், காண முத்திதரும் தில்லையையும், இறக்க முத்திதரும் காசியையும், நினைக்க முத்திதரும் அண்ணுமலையையும் இதுபோன்ற பல தலங்களையும் குறிப்பிடுகின்றனர்.

மேலும், அங்குள்ள இறைவனை

"எண்ணுய் இரவும் பகலும் இடும்பைக்கடல்
நீந்தலாங் காரணமே"

"விரும்பாய் அரும்பாவங்களாயின தேய்ந்தறவே"

"நித்தன்னிமலன் உமையோடுங் கூட
நெங்காலம் உறைவிடம் என்றுசொல்லாப்
புத்தர் புறங்கூறிப் புன்சமணர்
நெடும் பொய்களை விட்டு நினைந்துய்மினே"

என்று பலவாருகக் கூறித் துதிக்கின்றனர் சமயாசாரியர்கள். கோச்செங்கட் சோழன் என்ற அரசன் முன்னைப்பிறவியிற் கொண்ட யானைப் பகை யினுல் யானை புகாதபடி கோயில்கள் கட்டியுள்ளான் அவைகளுக்கு மாடக்கோயில் என்றும், மலைக்கோயில் என்றும் பெயர்கள் வழங்குகின்றன. இவைகளையெல்லாம் "வையமகிழ்தர வைகன் மேற்றிசைச் செய்ய கண்வளவன் முன்செய்த கோயிலே" எனவும், "வம்பியல் சோலைசூழ் வைகன் மேற்றிசைச் செம்பியன் கோச்செங்கணுன் செய்கோயிலே"

எனவும், வரும் தேவாரங்களால் அறியலாம். மேலும் இறைவன் எத்தேவு மேத்தும் முழுமுதற்றலைவன். அவன் ஒருவனையே நான் முகன், திருமால், இந்திரன் முதலிய தேவர்களும் பூசித்து இருத்திய திருக்கோயில்கள் பல இடங்களிலும் இன்றும் உள்ளன. இவற்றை" எத்தானத்தும் நிலவு பெருங் கோயில் பல கண்டால்" எனவும் அவைகளிலெல்லாம் "கயிலாய நாதனையே காணலாமே" எனவும் கூறியவற்றால் அறியலாம் மேலும் அவன் அருள்பெற ஆலயங்கள் பல எடுக்கவேண்டுமென்பதையும், அவனருளாலே முத்தி முதலிய எல்லாவற்றையும் பெறலாம் என்பதையும்

" பதியான பாசந்தன்னிற் பட்டுழல் பசுநாமென்றே
விதியொடு மறைகள் கூறுமெய்ம்மையைத் தெளியவேண்டின்
இதுவென வுரைப்பன் யாங்களிவ் வரசியற்றவீச்ன்
அதிர்கழலருச் சித்தேத்து மாலயம் பலவுங் காண்டி "

எனவும்.

" அவனருள் பெறுது முத்தியடைந்தன ரில்லையல்லா
லவனருளின்றி வாழும மரரும் யாருமில்லை
யவனருளெய்தி னெய்தாவரும் பொருளில்லை யாணை
யவனலதி றைவனில்லை யவனை நீயடைதி யென்றான்."

எனவும் வரும் கந்தபுராணத்தால் அறியலாம்.

அவ்வாறு ஆண்டவன் அருள் ஊறும் இடங்களாகிய திருக்கோயில் களே நாமெல்லாம் உய்யும் வகை செய்வன. அவற்றைப் பேணிவழி படுதல் சைவர்களாகிய நமக்கு உற்ற கடமையாகும்.

---


மதிப்புரை

உருவ வழிபாட்டு விளக்கம்

மதுரைத் திருவருள் தவநெறி மன்ற வெளியீடு. ஆசிரியர்: மதுரைத் திருஞானசம்பந்த சுவாமிகள் ஆதீன இளவரசு திருப்பெருந்திரு சோமசுந்தர தேசிக பரமாசாரிய சுவாமிகள் அவர்கள்.

உரையாடல் ரூபமாக எழுதப்பெற்றுள்ளது. தற்காலம் உலக வழக் கத்திலுள்ள பல உதாரணங்களைக் காட்டி, படிப்போரின் உள்ளத்தில் எழும் ஐயம் விலகும்படி எளிய நடையில் உள்ளது. விலை அணு 0-1-

# சிவன் உருவம்

வித்துவான், திரு. பா. து. கண்ணப்ப முதலியார் அவர்கள்
தமிழ் விரிவுரையாளர், புதுக்கல்லூரி, சென்னை.

எல்லாம் வல்ல முழுமுதற் பரம் பொருளாம் சிவபெருமானைப்பற்றி அனுபவம் மிக்க அறிஞர்கள் போற்றி வருகின்ற முறையில் அவன் உருவன் அருவன் அருவுருவன் ஆவன்.

சிவன் உருவம் என்னும் பொருள் செறிந்த அருந்தொடரை நமக்கு நினைப்பூட்டிய பெரியார் அகத்திய முனிவர் ஆவர். அகத்திய முனிவர் அகம் கனிந்த உள்ளத்தராய்ச் சிவாலய முனிவர்க்குத் தேவாரத் திரு முறைகளைப் பாராயணம் செய்யுமாறு பணித்து, அத்திருமுறைகளிலிருந்து இருபத்தைந்து பதிகங்களைத் தேர்ந்தெடுத்து அவற்றைக் குருவருள், பரை யின் வரலாறு, அஞ்செழுத்துண்மை, கோயிற்றிறம், சிவனுருவம், திருவடி அருச்சனை, அடிமை எனப்பிரித்துப் பாராயணம் பண்ணுமாறு உபதேசித் தருளினர். சிவன் உருவம் என்னும் தலைப்பின்கீழ் அமைந்த பதிகங் களாக அகத்தியர் திரட்டித் தந்தவை ஐந்து. அவை ஆளுடைய பிள்ளையார் அருளிய எழுகூற்றிருக்கையும், திருக்கடவூர் மயானத் திருப் பதிகமும், ஆளுடைய அரசுகள் திருவாய் மலர்ந்தருளிய கோயிற்றிருப் பதிகங்களும் திருப்பூவணத் திருத்தாண்டகத்தில் "வடிவேறு" என்று தொடங்கப்பெறும் பதிகமும், ஆளுடைய நம்பிகள் அருளிச்செய்த "மருவார் கொன்றை" என்று எடுத்துப்பாடப்பட்ட திருக்கடவூர் மயானப் பதிகமுமாகும். இந்த ஐந்து திருப்பதிகங்களிலும் இறைவன் திருமேனியின் தோற்றங்கள் செவ்வனே எடுத்தியம்பப் பட்டுள்ளன.

ஈண்டு ஓர் ஆசங்கை அன்பர் சிலர் உள்ளத்தில் எழக்கூடும். அதுவே ஏனைய திருப்பதிகங்களில் இறைவன் திருவுருவத்தைப் பற்றிய குறிப்புகள் இல்லையோ என்பது. அகத்திய முனிவர்தம் அகத்தில் சிவனார் உருவத்திற்கு இவ்வைந்து பதிகங்களாகச் சிவன் உருவம் என்பதை உணர்த்த எழுந்தனவே அன்றி வேறன்று. இறை வனுக்குரிய திருநாமங்களில் ஒன்றான திருநீலகண்டம் என்பது மறைநவில் அந்தணர் நுவலவும் படுமே" என்று கூறப்பட்டிருப்பது கொண்டு இறைவனுக்கு அமைந்த ஏனைய திருநாமங்கள் அவ்வாறு "மறைநவில் அந்தணர்களால் நுவலப் படுதல் இல்லையே என்று யாம் யாங்ஙனம் வினவாது விடுப்பமோ அதுபோலவே இவ்வைந்து திருப்பதி கங்கள் தவிர்த்து ஏனைய திருப்பதிகங்கள் சிவன் உருவத்தைப்பற்றி அறிவிப்பன அல்லவோ என்று அறிந்து வினவாது இருப்போமாக. இனிச் சிவபெருமான் திருஉருவத்தைப்பற்றிச் சிலகருத்துக்களை ஈண்டுப் பொறிப்போமாக.

நம் முன்னோர்கள் ஓவியம் சித்திரம் முதலியவற்றைப் புனைவதில் தலை சிறந்தவர்கள். இவ்வாறு உருவங்களை ஓவியத்தின் மூலமாகவும் சித்திரத்தின் வாயிலாகவும் அமைத்துக்காட்டுபவர் அயல்நாட்டவர்களும் ஆவர். எனினும் அவ்வயல் நாட்டு உருவங்கள், சிறந்த உயரிய கருத்துக் களை உணர்த்தும் நோக்கத்தோடு அமைக்கப்படுவன அல்ல. இயற்கை யில் அமைந்த தோற்றத்தை மட்டும் அறிவிப்பன ஆகும். கிரேக்க நாட்டினர் ஜூலியஸ் வீனஸ் முதலிய தெய்வங்களின் உருவங்களை அமைத்தபோது மனித உடலமைப்பினை எவ்வளவு அழகாக அமைக்க இயலுமோ அவ்வளவு அழகு அத்தெய்வத்தின் உருவத்தில் அமைத்தார் களே அன்றிக் கடவுள் உணர்ச்சியைக் காட்ட வல்லனவாக அவ்வுரு வங்களை அமைத்திலர். இது உண்மை. இதனை எவரும் மறுக்க இயலாது. ஆனால் நம்நாட்டு உருவங்கள் உணர்ச்சிகளையும் கருத்துக் களையும் ஒருங்கே உணர்த்துவன.

இக் கருத்துக்களை உணர்த்துவதற்கே இறைவன் திருஉருவம் கொள்ளுகின்றான். அத்திருஉருவத்தைத்தான் ஓவியரும் காவியரும் தம் நுண்ணறிவுத் திறனால் நமக்கு வடித்துக்காட்டுகின்றனர். இறைவன் உருவங்கொள்வது நத்தம் கருமேனி கழிக்கவந்த கருணையின் வடிவு.

நினைவுபடுத்திக்கொள்ளவேண்டும்:— முதலில் நடராஜப்பெருமானது திருஉருவச்சிறப்பைக் காண்போமாக. கூத்தரசப் பெருமான் ஒரு கையினை வீசியும், ஒருகையில் மழுவினைத் தாங்கியும், ஒருதாளால் முயலகன் என்பானை அழுத்தியும் நிற்கின்றார். ஒருதிருவடியினைத் தூக்கி நிற்கின்றார். சென்னியில் கங்கையாற்றுடன் பொலிகின்றார். இது இறைவனை ஆன்மாக்கள் கண்டுகளித்து ஈடேற, நடனம் புரிந்த புறத் தோற்றத்தை உணர்த்தும் வடிவமாகும். இத்தோற்றத்தின் அகப்பொருள் யாது? அதாவது உள்பொருள் என்னை? ஒரு கையினை வீசி நிற்கும் தோற்றம் மாயையை உதறித் தள்ளுவதையும், மழுவினைக்கொண்டு நிற்றல் வல்வினையைச் சுட்டுப் பொசுக்கிவிடுவதையும், முயலகனை ஒருதாளால் ஊன்றி நிற்கும் காட்சி மலமானது மேலெழவொட்டாமல் அழுத்தி நிற்றலையும், தூக்கிய திருவடி, அருளை எடுத்துக்காட்டி இதனையே பற்றுங்கள் நல்வழிகாணலாம் என்பதையும், கங்கை முடிமேலிருத்தல் பிறவி வெம்மையால் அலைப்புண்ணும் சிவான்மாவைப் பிறவாத இன்பக் கடலில் திளைக்கச்செய்யும் குறியையும் குறிப்பிடுவன. இதனை யன்றோ

"மாயை தனை யுதறி வல்வினையைச் சுட்டுமலம்
சாய அமுக்கி யருள் தானெடுத்து—நேயத்தால்
ஆனந்த வாரிதியில், ஆன்மாவைத் தானழுத்தல்,
தானெந்தை யார்பரதந் தான். (உண்மை விளக்கம்)

எனக் குறிப்பிடுகிறது. மேலும், இறைவன் திருவுரு அமைப்பைப் பற்றி நம் நூல்கள் என்ன கூறுகின்றன என்பதை அறிதல் சாலும். இறைவன் திருமேனிக்கு விசும்பைக் கொள்வது அறிஞர்கள் துணிபு. திசைகளே திருக்கரங்களாகவும் கொள்ளல் மரபு. இதனையே, ஆகாசமாம் உடல், - (திருமந்திரம்) "விசும்பே உடல்" (பொன்வண்ணத் தந்தாதி) "விசும்பே கோலநின் ஆகம்" - (ஒருபர ஒருபஃது) திசைகளெட்டும் திருக்கைகள் "திசைதோள்" - "எண்டிசை எண்டோள்" - என்று திருமந்திரம், பொன்வண்ணத் தந்தாதி, ஒருபாஒருபஃது, போன்ற நூல்கள் சுட்டிச் செல்லுதலைக் காணலாம். திருவடியும் மலமறைப்பைப்போக்கி, இன்பத்தைக் கொடுப்பது. இதை

" ஈட்டிய வினைப்பயன் எவற்றையும் மறைத்து நின்று
ஊட்டுவதாகும் நின் ஊன்றிய பதமே" —எனவும்

" அடுத்த இன்னுயிர்கட்கு அளவில் பேரின்பம்
கொடுப்பது முதல்வ நின் குஞ்சித பதமே" —எனவும்

சிதம்பர மும்மணிக்கோவை கூறுவதும் அறிக. இறைவனுக்குள்ள மூன்று கண்கள் — சோமசூரியாக்கினி என்பவற்றைக் குறிப்பனவாகக் கூறுவர். இதனை, "கண்களோ ஒன்று காலையில் காணும் - மாலையில் ஒன்று வயங்கித் தோன்றும், பழிப்பின் ஒன்று விழிப்பின் எரியும்" என்று நால்வர் நான்மணிமாலை விளக்குதல் காண்க !

இறைவனது திருநீற்றுக்கோலம், பராசத்தியை புணர்த்தும் என்பதைச் சம்பந்தர் "பராவணமாவது நீறு" - என்று கூறுவதிலிருந்து அறியலாம். அது பாசமும் ஒழிக்கவல்லது என்பது கோயிற்புராணக் கூற்றன்றோ !! அவனது மேனியிற் பொலி வெண்ணூலோ வேதாந் தத்தை யுணர்த்துவது. இறைவனது கோவணம் வேதத்தை யுணர்த்து வதே.

" மன்னுகலை துன்னுபொருள் மறை நான்கே வான் சரடாத்
தன்னையே கோவணமாச் சாத்தினன் காண் சாழலோ "

(திருவாசகம் திருச்சாழல்)

என மணிமொழியார் கூறுவதும் இதுவன்றோ!! மேலும் சிலம்பும் கழலும் "வென்று பிறப்பறுக்கச் சாத்திய வீரக்கழல்" என்று போற்றப்பஃறொடை வெண்பா வுணர்த்துவதைக் கொள்ளலாம். காதுகள் பிரணவ வடிவைக் குறிப்பது. இதையே எடுத்த எடுப்பில் "தோடுடைய செவியன்" என்று சம்பந்தர் கூறிப்போந்தார். அக்கினி ஏந்தியிருப்பது சங்காரத்தைக் குறிப்பதாகும். திரிசூலம் முத்தொழில் - முக்குணம், முதலியவைகளை

நினைவுபடுத்துவன. மும்மூர்த்திகள் என்பதையும் காட்டி நிற்கின்றன. மணி ஏந்தியிருத்தல் மந்திரரூபி என்பதைக் காட்டும் என ஆகமங்கள் கூறுகின்றன. இறைவன் அபயகரம் 'அரும்பெரும் குறிப்பைக் காட்டு வதாகும். அமைந்தகரம், காத்தல் தொழிலினைக் காட்டி நிற்கிறது என்பர் குமரகுருபரர். என்னை?

" தனித்தனி வகுத்த சராசரப்பகுதி அனைத்தையும்
காப்பதுன் அபய பொற் கரமே "

என்றுராகலின், அவன் அணிந்துள்ள பாம்பு எவ்வுயிர்கட்கும் இயல் பானவன், இனிமைபயப்பவன் என்பதைக் காட்டுவதாகும். மற்றும் தினையே குண்டலமாகச் சிவன் தரித்தான் என்பது, உலகம் தோன்றவும், ஒடுங்கவும் தான் நிமித்த காரணன் என்பதை அறிவிக்கவே எனக் கொள்க. இதனை அப்பர்

" போர்ப்பனையானை உரித்தபிரான் பொரியரவம்
கோப்பது வானத் திரைகடல் சூழுலகம் இதனைக்
காப்பது காரணமாகக்கொண்டான் கண்டியூரிருந்த
கூர்ப்படை யொள்வாள் மழுவனையா மண்டர் கூறுவதே "

(தேவாரம்)

என்று அருளிச் செய்தார். இவன் திருவடியால் முயலகன் என்பானை ஊன்றி நிற்கிறார். அம்முயலகனது தோற்றம் மலத்தைக் குறிப்பதாகும். "மலம்சாய அழுத்தி நின்ற" என்ற தொடர் இதனைத் தெளிவுறுத்தும். மேல் திருவாசி ஓங்காரத்தைக் காட்டும். இதனை

" ஓங்காரமே நல் திருவாசி உற்றதனில்
நீங்கா எழுத்தே நிறை சுடரார்ம் " (உண்மை விளக்கம்)

என்பதனால் அறிக.

மான் ஏந்திய தோற்றமானது தான்வேத முதல்வன் என்பதைக் குறிக்கும். இன்னோரன்ன அரிய குறிப்புக்கள் இறைவன் திருவுருவத்தின் வாயிலாக உணர்ந்து ஆன்மா ஈடேறவேண்டியிருந்தலின், அகத்தியனார் ஆன்மா நல்வழிப்பட வகுத்துக்கொடுத்த எட்டுப் பிரிவுகளில் ஒன்றாகச் சிவன் உருவம் என்பதையும் குறிப்பிட்டனர் என்பதை உணர வேண்டும்.

# திருவடி

திரு. கீ. இராமலிங்கம் அவர்கள் எம். ஏ.,
முதல்வர், தருமையாதீனக் கீழைக்கலைக் கல்லூரி.

இன்பம் அடையவேண்டுமானால் பிறப்பு அற்றுப்போகவேண்டும். பிறப்பு வராமல் இருக்கவேண்டுமானால் இறவாமல் இருக்கவேண்டும். இறந்து விட்டால் பிறந்துவிடவேண்டியதுதான். எனவே பிறப்பு வராமல் தடுப்பதற்கு இறக்காமல் இருக்கும்வழியைத் தேடிக்கொண்டு, அதன்படி நடக்கவேண்டும். நல்லொழுக்கம், உயிர்களிடத்தில் இரக்கம், அறச் செயல்கள், திருவருள்பற்று, இவ்வகையான நல்வினைகளைச் செய்து வருவதே, இறவாது இருப்பதற்கான முதல் வழியாகும். இந்த நல்வினை களால் நமக்கு நல்ல உள்ளம் வாய்க்கும். வெற்றி கிடைத்தாலும் தோல்வி நேர்ந்தாலும், இன்பம் வந்தாலும் துன்பம் சூழ்ந்தாலும் ஒரே தன்மையான உணர்ச்சியுடைய உள்ளமே நல்ல உள்ளமாகும். அந்த உள்ளத்திற்கு விருப்பு வெறுப்பு இருக்காது. வேண்டும் வேண்டாம் என்பது இராது. நண்பர் பகைவர் என்பதும் தோன்றாது. இந்த நிலையையே "இருவினை யொப்பு" என்று மெய்ந்நூல்களில் சொல்லு வார்கள்.

இந்நிலை கைவந்ததும் உலக இன்பங்கள் நிலையானவை என்ற தப்பெண்ணம் மாயும். உலகச் செயல்களில் உள்ளம் தோயாது. மனம் கனிந்து தூய்மையடையும். இந்த நிலையைத்தான் மெய்ந்நூல்களில் 'மலபரிபாகம்' என்று கூறுவர். இந்நிலையை நாம் அடைந்துவிட்டால் இறைவன் மனித உருவில் ஆசிரியனாக நம் முன்பு எழுந்தருளி அருள் மொழி கூறி அருள் உணர்ச்சியூட்டுவான். அவன் அருள் நம்மீது கடல் மடை திறந்ததுபோல் பாயும். இந்த நிலைமையையே மெய்ந்நூல்கள் 'சக்தி நிபாதம்' என்று உரைக்கும்.

இவ்வாறு இறைவனால் அருள் உணர்ச்சி ஊட்டப்பெற்று விளங்கு கிறவர்களை 'ஜீவன் முக்தர்கள்' என்று சொல்லுவர். நமது சைவசமய குரவர்களில் மூவராகிய திருஞானசம்பந்த மூர்த்தி சுவாமிகள், திருநாவுக்கரசு சுவாமிகள், சுந்தரமூர்த்தி சுவாமிகள். ஜீவன் முத்த நிலை. அதாவது கட்டு அற்றநிலை எய்தியவர்களாவர். அந்த ஜீவன் முக்தநிலையை விளக்குகிறமுறையிலே அவர்கள் திருவாய் மலர்ந்துள்ள தேவாரப்பாடல்களில் இருபத்தைந்துபதிகங்களை, எட்டுத் தலைப்புக்களில் அகத்திய முனிவர் திரட்டியருளியுள்ளார். அத்தலைப்புக்கள் வருமாறு: குருவருள், பரையின்வரலாறு, அஞ்செழுத்து, கோயில்திறம், சிவனுருவம்,

திருவடிகள், அர்ச்சனை, அடிமை, நல்வினையாற்றி இருவினையொப்பும் மலபரிபாகமும்பெற்ற உயிர் சக்தி நிபாதமாகிய குருவருளைப்பெறும். குருவருள் பெற்றதும் இறைவன் திருவருளாகும் பராசக்தியின் விளக்கம் பூண்டு சிவபோக சமாதியில் அழுந்தும், அந்தச் சமாதிநிலை நிலைத்து இருக்கும் பொருட்டு ஐந்தெழுத்துஓதும். அறிவு வெளியேசென்று விடாத படி அதனை வசப்படுத்தக் கோயிலுக்குச் சென்றுவழிபடும். வழிபாட்டில் அகக்கண்ணால் இறைவனின் திருமேனியைச் சேவிக்கும். சேவித்து இறைவன் திருவடிகளில் திளைக்கும். திளைத்து இறைவனின் பேரருள் திறத்தினை வியந்து போற்றிப்பாடி அர்ச்சிக்கும். திருவருளுக்கு அடிமை பூண்டவர்களோடு கூடியிருக்கும். இந்த எட்டுமே ஜீவன் முக்தர்களது செயல்களாகும்.

அகத்தியர் தேவாரத்திரட்டிலே 'திருவடிகள்' என்ற தலைப்பின்கீழ் திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகளின் "பொடியுடை மார்பினர்" என்று துவங்கும் திருவாழ்கொளிபுத்தூர் பதிகமும், திருநாவுக்கரசு சுவாமிகளின் "அரவணையான் சிந்தித்து அரற்றும் அடி" என்று துவங்கும் திருவதிகை வீரட்டானப் பதிகமும், சுந்தரமூர்த்தி சுவாமிகளின் "அந்தணாளன் உன் அடைக்கலம் புகுத" என்று துவங்கும்திருப்புன்கூர்ப் பதிகமும் காணப்பெறுகின்றன.

## திருஞானசம்பந்த சுவாமிகள் திருப்பதிகம்

இப் பதிகத்தில் திருக்கடைக் காப்புப் பாடலாகிய பதினொராவது பாடல்தவிர, மற்றப் பத்துப்பாடல்கள் ஒவ்வொன்றின் கடைசி வரியிலும் மலர்தூவி இறைவன் திருவடிகளைக் காண்போம், சார்வோம், சேர்வோம் என்று கூறுகிறார். இறைவனைக் கறைமிடற்றன், விரிசடையன், தலைவன், எம்பெருமான், தாழ்சடையன், விகிர்தன், தோன்ற நின்றான் என்று குறிப் பிடுகிறார். இவ்வாறு குறிப்பிடுவதால் இறைவனின் பேரருள் திறமும், தலைமை நிலையும், நமக்கு எளிதில் வெளிப்பட்டுத் திருவடிக் காட்சி யளிக்கும் சிறப்பும் புலனாகும். இப்பத்துப்பாடலிலும் இறைவன் ஊர்திரிந்து பலபல கூறி நான்முகனின் வெள்ளை மண்டை ஓடு ஏந்தி ஊரார் இடும் பிச்சையேற்கின்ற செய்தி கூறப்படுகிறது. "யான்" 'எனது' என்ற முனைப்பு அற்ற நிலையே திருவடி நிலையாகும். நம்மிடமுள்ள 'யான்' என்ற முனைப்பையும் 'எனது' என்ற முனைப்பையும் இறைவன் பிச்சை கேட்டுவாங்கி வருகிறான். அதனால் நாம் திருவடிநிலையெய்த அருளு கிறான். ஒவ்வொரு பாடலிலும் இறைவன் மங்கையோர் பங்கினன் என்ற செய்தியையும் பலப்பல வகையாகக் குறிக்கிறார். இதுவும் இறைவன் திருவடிப்பேற்றை நமக்கு எளிதில் அருளுவான் என்னும் குறிப்பினதாகும். எங்ஙனமெனின் திருவடி என்பதற்கு 'அருள்' என்னும் பொருளும் உண்டு. அருள் என்பது அம்பிகையே யல்லவா?

## திருநாவுக்கரசு சுவாமிகள் திருப்பதிகம்

இப் பதிகத்தில் பத்துப்பாடல்கள். ஒவ்வொரு பாடலிலும் நான்கு அடிகள். ஒவ்வொரு அடியிலும் இரண்டு வரிகள். ஒவ்வொரு வரியிலும் அடி என்ற சொல் முத்தாய்ப்பாகக் கணக்கிடப் பெற்றிருக்கிறது ஆக அடி என்ற சொல் எண்பது தடவை இப்பாடலில் வருகிறது. 'திருவீரட்டானத்து என் செல்வன் அடி' என்று ஆறு பாடல்கள் முடிகின்றன. மற்ற நான்கு பாடல்களும் "நிறை கெடில வீரட்டம் நீங்கா அடி" "கமழ் வீரட்டானக் காபாலிஅடி" "தகைசால் வீரட்டத் தலைவன் அடி" "வீரட்டம் காதல் விமலன் அடி" என்று முடிகின்றன. திருவடியின் தன்மை பின்வருமாறு விளக்கப் பெற்றிருக்கிறது. திருவடி இன்ன உருவினது என்று உணரப்படாதது. அது எத்தனையோ சொற்களால் பாடப்பெற்றிருக்கிறது என்றாலும் உரையால் சொல்லிக் கேட்டு நாம் உணர்ந்துகொள்ள முடியாதது. நீண்ட வானத்தையும் ஊடுருவி நிற்பது. அதன் அகலத்தை எவரும் அளக்கமுடியாதது. கதிரவன் திங்களுமாக நின்றது. கணக்கு வழக்கைக் கடந்தது. எழுகின்ற செஞ்ஞாயிற்றைப் போன்றது. அதன் அழகினை எவரும் எழுத இயலாதது. அருள் வடிவமானது. ஓம் என்னும் ஒலியில் அடங்கியது. பாடல் வரிகளையே சுவைப்போம்:

"உருவென்று உணரப்படாத அடி"

"உரைமாலையெல்லாம் உடைய அடி"

"உரையால் உணரப்படாத அடி"

"நீள்விசும்பை ஊடறுத்து நின்ற அடி"

"அகலம் அளக்கிற் பாரில்லா அடி"

"செறிகதிரும் திங்களுமாய் நின்ற அடி"

"கணக்கு வழக்கைக் கடந்த அடி"

"அரும்பித்த செஞ்ஞாயிறு ஏய்க்கும் அடி"

"அழகு எழுதலாகா அருட்சேவடி"

"அரைமாத்திரையில் அடங்கும் அடி"

இந்த அடியை ஏத்தாதவர் இல்லை. திருமால் சிந்தித்து அரற்றுகிறார். நான்முகன் சென்னியில் அணிந்து கொள்கிறார். முருகன் கைதொழுது சார்கின்றார். வானவர்கள் தாம் வணங்கி வாழ்த்துகிறார்கள். பதினெட்டு கணங்களும் பாடுகின்றன. மார்க்கண்டேயர் தொழுதார். பெரும்பித்தர் கூடிப் பிதற்றுகிறார்கள். இரு நிலத்தார் அனைவருமே இன்புற்று ஏத்துகிறார்கள். பற்றற்றார் பற்றுகிறார்கள்.

இந்தத் திருவடியை, நாம் கைதொழுது ஏத்தினல் காணலாம். சார்ந்தார்கட்கு எல்லாம் சரணளிக்கும். பரவுவாருடைய பாவம் போக்கும். குறையுடையவர்கள் அடைந்தால் அவர்களே ஆழாமல் காக்கும். வஞ்ச வலையில் படாதபடி தடுக்கும். தவறு செய்துவிட்டாலும் மன்னித்துப் பிழைக்க வழியறிவிக்கும். இன்புற்றவர்கள் இட்ட பூவினை ஏற்றுக் கொள்ளும். சிறந்த அன்புடையவர்களுக்குத் தேனுக இனிமை விளைக்கும். பொருள்படைத்தார் கையில் மாற்றுடைய பொன்னுக நிற்பதும் அதுதான். மந்திரமும் தந்திரமுமாகி மருந்தாய்ப் பிணிதீர்க்க வல்லதும் அதுவே. நமது அருகே இருக்கின்ற பொருள்களில் ஒன்று அல்ல அது. தொலைவில் இருக்கின்ற பொருள்களிலும் ஒன்று அல்ல. ஆனாலும் தொழும் அடியவர்களுக்கு ஆர்அமுதமாக இருப்பது அதுவேதான்.

## சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருப்பதிகம்

பத்துப் பாடல்களில், திருக்கடைக் காப்புப் பாடலாகிய பத்தாவது பாடல் தவிர மற்ற ஒன்பது பாடல்களிலும், நான்காவது அடியில், 'உன் திருவடி யடைந்தேன்' 'நின் பொன்னடியடைந்தேன்' 'நின் குரைகழல் அடைந்தேன்' என்ற மூன்று தொடர்களில் ஒரு தொடரை அமைத் திருக்கிருர். திருவடியடைந்தால் கட்டாயம் திருவருள் கிடைத்துவிடும் என்று நம்புகிருர். அந்த நம்பிக்கைக்கு ஏதுவாக, திருவடி யடைந்ததால் இறைவனல் திருவருள் செய்யப்பெற்றவர்களுடைய வரலாறுகளை நினைவூட்டிக் கொள்ளுகிருர். அந்த வரலாறுகள் அவருக்குத் திட நம்பிக்கையளிக்கின்றன.

திருப்புன்கூர் உள்ளானே! அந்தணாளன் (மார்க்கண்டேயன்) உன்னிடம் அடைக்கலம் புகுந்தான். அவனைக் காப்பதற்காக அவன் உயிரைக்கொண்டுபோகவந்த எமனுடைய உயிரை வவ்வினீர்கள். தேவரீருடைய அருள் வளமையை அடியேன் அந்தச் செயலில் கண்டேன். என் தந்தையே! என்னை எமதூதர்கள் நலித்தால் 'இவன் என் அடியான்' எனத் தேவரீர் விலக்குவீர்கள் என்று நம்புகிறேன். அந்த நம்பிக்கையால் தேவரீரது திருவடிகளை யடைந்தேன்' என்று முதல் பாடலிலே விண்ணப் பித்துக்கொள்ளுகிருர். மற்ற பாடல்களிலும் திருவடியடையத் திடமூட்டும் செய்திகளே சொல்லப் பெறுகின்றன. அடியவர்களுக்கு இறைவன் அருள்செய்தவைகள் எல்லாம் அவருக்கு நம்பிக்கையைப் பெருக்குகின்றன. ஏயர்கோன் கலிக்காமர், சண்டேசர், நற்றமிழ்வல்ல ஞானசம்பந்தர், நாவினுக்கரசர், நாளைப்போவார், மூர்க்கர், சாக்கியர், சிலந்தியாயிருந்த கோச்செங்கட்சோழர், கண்ணப்பர், கணம்புல்லர் என்ற இவர்கள், குற்றம் செய்யினும் குணம் எனக்கருதும் அருட் கொள்கை கண்டு நின் குரை கழல் அடைந்தேன் என்கிருர்.

அமரர்களுக்கு அருள்புரிவதையே பித்தாகக்கொண்டு நீலமார் கடலின் விடத்தையுண்டு கண்டத்திலே அடக்கி வைத்துக்கொண்ட இறைவனின் சீலத்தை எண்ணுகிறார். திருவடியை அர்ச்சித்த தேவாதி தேவர்கள் எல்லாம் அருள்பெற்றதை நினைக்கிறார். கல்லால நீழலில் இருந்து உலகம் உய்ய நால்வர்க்கு அறமுதலாம் நாற்பொருளை அருளிய திறத்தைச் சிந்திக்கிறார். பகீரதனுக்காகக் கங்கையைச் சடையிலே ஏந்திக்கொண்டது, அர்ச்சுனனுக்குப் பாசுபதம் அளித்தது, திரிபுரம் ஆண்ட மூவர்க்கு அருளியது, இராவணனுக்கு அருள் புரிந்தது, முதலிய அருள் செய்திகள் அவரது அகக்கண் முன்னே வருகின்றன. நாமும் திருவடி யடைந்தால் திருவடி பெற்றுவிடலாம் எனத் திடங்கொள்ளச் செய்தருளுகிறார்.

இம்மூன்று பதிகங்களும் ஜீவன் முக்தர்கள் திருவடிகளைச் சிந்திக்கும் முறையைக் கூறுமுகத்தால் திருவடிகளின் தன்மையையும் பெருமை யையும் விதந்து ஓதி, திருவடிகளைப் போற்றி அருள்பெற்றோரது வரலாறு களை நினைவூட்டி, திருவடிகளை முழுநம்பிக்கையோடு பற்றிக்கொண்டு இம்மை, மறுமை நலங்களையும் பேரின்ப வீட்டையும் அடையத் திடம் அளிப்பனவாகின்றன.

---

மதிப்புரை

"மணிமொழி"

இரண்டாவது மணி. 15-16 ஆவது ஒலி. 1—12—1955 இதழ். தனியிதழ் அணா 0—2—0. ஆண்டுக் கட்டணம் ரூ. 3—0—0. கிடைக்கு மிடம் :- மணிமொழிப் பதிப்பகம், 18. தெற்குமாடவீதி, சென்னை 4.

தெய்வத் தமிழகத்தின் வளமான எதிர்காலத்தை வாழ்த்தி வரவேற்கும் திங்கள் இருமுறை (ஆங்கிலமாதம் 1 - 15 தேதிகளில்) இதழ் இது. "அருள்நெறி வளர்ச்சியைப் பரப்பப் பாடுபடும்" நோக்கம் உடையது. தமிழரின் கலாசார வாழ்வியக்கமான அருள்நெறித் திருக்கூட்டத்தையும், அதன் தந்தையாரான குன்றக்குடி ஆதீனக் குருமணியையும் பற்றிய பண்பாடுமிக்க செய்திகளை நாம் காணமுடிகிறது. அன்றியும், கலைமகளார் திரு. கி. வா. ஜகந்நாதன் எம். ஏ., அவர்களின் ஆராய்ச்சி மணமும், திரு. அ. மு. சரவண முதலியார் அவர்களின் விரிவுரை நறுமணமும் நெஞ்சை அள்ளுகின்றன. மற்றும், முகில்வண்ணன், கிருஷ்ணமூர்த்தி, சங்கீதபூஷணம் பி. சுவாமிநாதன், துரைசிங்கம் போன்றோரின் எழுத் தோவியங்களும் எழில் பயந்து இலங்குகின்றன. தக்க காலத்தில் தமிழர் நெறி காக்கப் புறப்பட்டிருக்கும் மணிமொழியை மனமாரப் பாராட்டு கிறோம்; வாழ்த்துகிறோம்; வரவேற்கிறோம். தமிழர் அனைவரும் வாங்கிப் பயன்பெறவேண்டிய வளமார் இதழ். —சொ. சி. வேலன்.

# அருச்சனை

வித்துவான், திரு. வி. சா. குருசாமி அவர்கள்

அருச்சனை என்ற தலைப்பில் அகத்தியர் தேவாரத் திரட்டு மூன்று திருப்பதிகங்களை நமக்கு எடுத்துக் காட்டுகின்றன. அருச்சனை இறைவன் திருவருளை எளிதில்பெற நாம் தோத்திரிக்கும் தோத்திரம். அருச்சனை களில் இறைவன் பெருமைகளை இனிது எடுத்தியம்பி அவனை வணங்கு கிறோம். சுந்தரரைச் செந்தமிழ் பாடச்செய்ய வலிய வந்தாட் கொண்டு திருவெண்ணெய்நல்லூர் திருமூலட்டானம் வரை அழைத்துச் சென்று மறைந்து தன்னை வெளிப்படுத்தினான் இறைவன். செய்வது யாதென்று திகைத்த செம்மலாரை இன்தமிழ்ப் பாடல்கள் இறைவன் பாடெனச் சுந்தரர் எவ்வாறு பாடுவேன் என்றனர். அதற்கு அப்பெருமான் 'அருச்சனை (தமிழ்ப்) பாட்டேயாகும் ஆதலால் மண்மேல் நம்மைச் சொற்றமிழ் பாடுக என்றார்'. மறையோதியவனை செஞ்சடை வானவன் திருவருளால் செந்தமிழ்ப் பாடல்கள் பல பாடினார் சுந்தரர் என்பது பெரியபுராணத்துட் காணப்பெறும் வரலாறு. பெருமான் தமிழ்ப்பாடல்களை அருச்சனையாக ஏற்றுக்கொண்டதற்கு இவ்வரலாறு ஒருசான்று. 'பேரா யிரம் பரவி வானோர் ஏத்தும் பெம்மான்; என்றும் 'ஆயிரம் பேருகந்தானும்' என்றும் திருமுறைகளில் வருவன இப்பொழுது நாம் செய்துவரும் ஆயிரம் திருநாமம் கூறி அர்ச்சிக்கின்ற அர்ச்சனையை நினைவுபடுத்தும். மற்றும் தெய்வத் திருமுறைகளில் அருச்சனை செய்யும் முறைகளும், பயனும், அர்ச்சித்தற்கேற்ற பதிகங்களும் காணப்பெறுகின்றன. அகத்தியர் தேவாரத் திரட்டும் திருமுறை அருச்சனையை ஒத்துப்பேசுகிறது. திருவாசகத்தில் போற்றித் திருவகவல் தமிழில் இறைவனை அருச்சித் தற்கு ஏற்றது. திருநாவுக்கரசு சுவாமிகள் அருளிய கயிலாயத் திருத் தாண்டகமாகிய 'வேற்றாகிவிண்ணாகி என்று தொடங்கும் திருப்பதிகம் அருச்சனை அமைதிகள் பலவும் நிரம்பியது. இதனுள் போற்றி என்ற தொடர் ஒவ்வொரு வரிகளின் இறுதியிலும் வந்து முடிகின்றது. அகத்தியர் தேவாரத்திரட்டினுள் அடங்காத திருவாரூர்த் திருப்பதிகமாகிய திருத் தாண்டகப் பதிகம் ஒன்று போற்றி போற்றி என்று முடிவுறுகிறது. இத் திருப்பதிகத்திற்கு ஒரு தனிச்சிறப்பு. இது அருச்சனை புரிதற்கேற்ற அமைப்போடு விளங்குகிறது. இதனுள் 108 முறை போற்றி என்று வருகிறது. திருக்கோயில்களில் வழங்கும் அஷ்டோத்திர அமைப்பை ஒத்து விளங்குகிறது.

"கற்றவர்களுண்ணும் கனியே போற்றி
கழலடைந்தார் செல்லும் கதியே போற்றி"

என்று தொடங்குவது. தமிழில் அருச்சிக்க விரும்புவோர் இத்திருப் பதிகத்தை மேற்கொள்ளலாம். பன்னிரு திருமுறைகளையும் கூறி

அருச்சித்தலும் பொருந்துவதொன்றே. எவ்வாறேனும் இறைவன்புகழ்கூறி மலரிட்டு வழிபடுவதெல்லாம் அன்பு காரணமாக அருச்சித்தலேயாகும். ஆன்மார்த்த பூசையில் மட்டு மன்றி இறைவன் திருக்கோயில்களில் நம் நன்மைக்கெனப் பெயர் பிறந்தநாள் கூறி அருச்சித்தல் நம் உயிர்ப்பயன் கருதியன்றோ? பரார்த்த வழிபாட்டில் அருச்சனை செய்வோர் அவ்வவர் நன்மைக்கே பெரும்பாலும செய்கின்றனர். எனவே திருக்கோயில்களில் தேவார திருவாசகங்கள் முழங்கட்டும். இறைவனை அர்ச்சிப்போர் இதைக் கருதியேனும் திருமுறைகளைப் படிப்பர். திருமுறைகளை உணர்ந்து உய்வர்.

திருவீழிமிழலைத் திருப்பதிகத்துள் திருஞானசம்பந்தமூர்த்தி நாயனர் தமிழர் அருச்சித்த வழக்கத்தை நன்குணர்த்துகிருர்கள்.

"செந்தமிழர் தெய்வமறை நாவர் செழுநற்கலை தெரிந்த அவரோடு
அந்தமில் குணத்தவர்கள் அருச்சனைகள் செய்ய அமர்கின்ற அரனூர்"

என்பது ஒரு திருப்பாடல். வேதியர் விரும்பும் பதியாகிய வீழிமிழலையில் செந்தமிழர் அருச்சித்த அழகை நன்கு விளக்குகிருர் திருஞானசம்பந்தர். திருஞானசம்பந்தர் அருளிய திருப்பூந்தராய்த் திருப்பதிகமாகிய "பந்து சேர் விரலாள்" என்ற பதிகம் போற்றுதும் என்று சொல் முடிபோடு அருச்சனைத் தலைப்பில் அகத்தியர் தேவாரத்திரட்டு காணப்படுகிறது. திருநாவுக்கரசு சுவாமிகள் அருளிய "வேற்ருகி விண்ணுகி" என்ற பதிகமும் போற்றி போற்றி என்ற சொல் முடிபோடு இத்திரட்டில் இரண்டாவதாக இடம்பெற்றுள்ளது. சுந்தரர் திருப்பதிகமாகிய "கொன்று செய்த" என்ற பதிகம் சென்று சென்று தொழுமின் திருக்கழுக்குன்றினை என்ற பொருளை ஒவ்வொரு பாடலிலும் உடையதாய் மூன்ருவதாகத் திகழ்கிறது. இம்மூன்று பதிகங்கள் 'அருச்சனை' என்ற தலைப்பில் அகத்தியர் தேவாரத்திரட்டில் காணப்பெறுவன. அன்பர்கள் ஓதி உணர்ந்து பயன் பெறுவார்களாக.

---

<u>மதிப்புரை</u>

## சமயமும் மனச்சாந்தியும்

மதுரைத் திருவருள் தவநெறி மன்ற வெளியீடு. ஆசிரியர்: மதுரைத் திருஞானசம்பந்த சுவாமிகள் ஆதீன இளவரசு திருப்பெருந்திரு சோமசுந்தர தேசிக பரமாசாரிய சுவாமிகள் அவர்கள்.

உரையாடல் ரூபமாக எழுதப்பெற்றுள்ளது. பணத்தால் சாந்தி ஏற்படாது. சமயநூல் பற்பல படித்தாலும் கற்றவகையில் ஒழுகாதவர்களும் அவதியுறுவர். சமூக முன்னேற்றம் சமய அறிவினுலேயே உண்டாகும். பல விஷயங்களை குறளினின்றும் பல மேற்கோள்காட்டி விரித்துரைக்கின்ருர். விலை அணு 0—1—0. –கே. இராஜகோபால சாஸ்திரிகள்.

# சிவாகம சிவார்ச்சனை

**திரு. எஸ். சுவாமிநாத சிவாசாரியார் அவர்கள்**
தலைமை ஆசிரியர், வேதசிவாகம பாடசாலை, தருமபுரம்.

" தவள விபுஷ மிந்தோர் மண்டலே ஸன்னி விஷ்டம்
புஜக வலய ஹாரம் பஸ்மதிக்தாங்க மீசம்
ஹரிண பரசு பாணிம் சாரு சந்தரார்த்த மௌவிம்
ஹ்ருதய கமல மத்யே ஸந்ததம் சிந்தயாமி " (சிவத்தியானம்)

" நறைமலிதரு மளறொடுமுகை நகுமலர் புகை மிகு வளரொளி
நிறைபுனல் கொடுதனை நினைவொடு நியதமும் வழிபடு மடியவர்
குறைவில பதமணை தரவருள் குணமுடை யிறையுறை வனபதி
சிறைபுனலமர் சிவபுரமது நினைபவர் செயமகள்தலைவரே "

மணம் நிறைந்த சந்தனக்குழம்பும் அரும்புகளாய் விளங்குகின்ற பூக்களும் மணம் மிக்க தூபமும் நன்கு எரிகின்ற தீபமும் நிறைவாயுள்ள நீரும் இவைகளைத் துணைகளாகக் கையிற்கொண்டு அருச்சித்தும் தூபதீபங்கள் காட்டியும் தன்னை என்னாளும் தவருது மனத்தினுல் நினைத்தும் வாக்கினுல் மந்திரங்கள் சொல்லி வழுத்தியும் வணங்குகின்ற அடியார்கள் தங்கள் அறிவுநிலைக்குத் தக்க அளவில் குறையாத சிவ சாமீப்ய முக்தியை அடையும்படி அருள் செய்கின்ற சிவபெருமான் - என்பது திருஞானசம்பந்தரின் திருவாக்கு.

" ஏசாத சுத்த புவனேத்பவ போக காமா :
த்வாமர்ச்சயந்தி விவிதெர்ய ஜனப்ரகாரை :
தேப்ய : ப்ரதாய பரமேச்வர சாதகேப்ய :
போகாந் ததாஸி ததந்தரமேவ மோக்ஷம்

எந்த ஆன்மாக்கள் சுத்த புவனங்களில் வஸிக்கும் விருப்பத்துடன் உன்னை அனேக விதமான பூஜா முறைகளால் அருச்சிக்கிருர்களோ அவர்களின் பொருட்டு முதலில் போகத்தைக் கொடுத்துப் பின் மோக்ஷத்தையுமளிக் கிருய் என்று அகோர சிவாசாரியர் பஞ்சாவரண ஸ்தோத்திரத்தில் கூறி யிரிக்கிருர். "இம்மையே தரும் சோறுங் கூறையும் ஏத்தலாம் இடர் கெடலுமாம் அம்மையே சிவலோக மாள்வதற்கியாதும் ஐயுறவில்லையே" என்று சுந்தரமூர்த்தி நாயனுரும் கூறியுள்ளார்,

செல்வம் செழிக்கவும் இன்பமாக வாழவும் இறைவனுடைய அருள் வேண்டும். இறைவனுடைய அருள்பெற, பக்திசெய்தலே சிறந்த சாதனம் பக்தி செய்யப் பல வழிகள் உண்டு.

“ ச்ரவணம் கீர்த்தனம் சம்போஸ் மரணம் பாதஸேவனம்
அர்ச்சனம் வந்தனம் தாஸ்யம் ஸக்ய மாத்மநிவேதனம்

இறைவனுடைய புண்ய சரித்திரங்களைக் கேட்டல்: சமயாசாரியர்கள் அருளிச்செய்த தேவாரம் திருவாசகம் போன்ற தோத்திரங்களைச்சொல்லித் துதித்தல்: இடைவிடாது தியானித்தல்: இறைவன் திருவடிகளைச் சேவித்தல்: இறைவனுக்குரிய புஷ்பங்கள் பத்திரங்கள் இவைகளால் அருச்சனை செய்தல்; வணங்குதல்: இறைவனுக்குத் தோழனுதல். தன்னையே அர்ப்பணம் செய்தல்: என்று ஒன்பது வகையாக, பக்தி காணப்படுகிறது. அதனுள் அருச்சனை என்பதும் ஒன்றல்லவா?

“அர்ச்ச - பூஜாயம்” அருச்சனை என்பதற்குப் பூஜை என்பது பொருள். இறைவனுக்குப் பூஜாமுறைகளைக் கூறும் மூலாகமம் நித்யார்ச் சனுவிதி படலம், பச்சிமத்வாரார்ச்சனுவிதி படலம் என்று படலங்களுக்குப் பெயர்கொடுத்துப் பூஜை முறைகளைக் கூறுகிறது. எனவே, பூஜை என்பதும் அருச்சனை என்பதும் ஒன்றே.

அநந்தாஸனம், சிம்மாஸனம், யோகாஸனம், பத்மாஸனம், விமலா ஸனம், என ஐந்து ஆஸனங்களின்மேல் வீற்றிருக்கும் இறைவனைப் பூஜிக் கும் முன் செய்யப்படும் ஆஸன பூஜைக்கு, “சக்தியாதி சச்தி பர்யந் தார்ச்சனை” என்று பெயர். அதாவது. ஆதாரசக்திமுதல் குடிலா சக்தி வரையிலுள்ள ஆஸன தேவதைகளையும் அதனுள் அடங்கிய முப்பத்தாறு தத்துவங்களையும் தியானித்துச் செய்யப்படும் அருச்சனை.

அதன்பிறகு தத்வாதீதனுன இறைவனை மந்திர வடிவமுள்ளவனுக தியானித்து கலை தத்வம் புவனம் வர்ணம் பதம், மந்திரம் என்ற ஆறு அத்வாக்களால் செய்யப்படும் அர்ச்சனைக்குப் பெயர் ஷடத்துவார்ச்சனை.

இறைவனை ஆவாஹனம் செய்து பாத்யம் அர்க்யம் ஆசமனம் கொடுத்து, சந்தனம் முதலிய உபசாரத்திற்குப் பிறகு செய்யப்படும் அருச்சனை புஷ்பாஞ்சலித்ரயாருச்சனை. அதாவது ஆன்ம வித்யாசிவ தத்துவங்களை நினைத்து இம்மூன்று தத்துவங்களுக்கும் பரமகர்த்தாவாக இறைவனை நினைத்து மூன்று தடவை புஷ்பங்களை அருச்சித்தல்.

அவ்வாறே, “அஷ்ட புஷ்பிகயாப்யர்ச்ய, எட்டு புஷ்பங்களைக் கொண்டு எட்டு அருச்சனை செய்வது அஷ்டபுஷ்பாருச்சனை.

வெள்ளெருக்கு, சண்பகம், சுரபுன்னை, நந்தியாவர்த்தம், பாதிரி கண்டங்கத்திரி, அலரி, தும்பை என்ற இவைகளை அஷ்டபுஷ்பங்களாம். நமஸ்காரத்தை முடிவிலுடைய ஈசானம், தத்புருஷம், அகோரம், வாம தேவம், ஸத்யோஜாதம் என்ற ஐந்து பிரம மந்திரங்களாலாவது. பவன்,

சர்வன், பசுபதி, உக்ரன், ருத்திரன், ஈசானன், மஹாதேவன், பீமன் என்ற எட்டு மூர்த்தியதிபதிகளையாவது சொல்லி அஷ்ட புஷ்பங்களைச் சாத்தியருச்சித்தல். இவைகள் ஆன்மார்த்த பரார்த்த பூஜைகளுக்கு இன்றியமையாதன என்று மூலாகமங்கள் கூறுகின்றன.

நம: என்ற சொல் தன்னைக்காட்டிலும் மேலானவன் என்று உணர்த்தும் பொருளுடையது. மிக்காரும் ஒப்பாருமில்லாதவனும் சேர்ந்த ரியாக்கையனுமிருக்கிற இறைவனுக்கு இவ்வாறு ஆகமங்களில் காணப்படுவதுபோல வேதங்களிலும், புராணங்களிலும், அருச்சனை முறைகள் காணப்படுகின்றன. அவைகள் அஷ்டோத்தர சதநாமம், திரிசதி, சகஸ்ரநாமம், சதஸகஸ்ரநாமம் (அதாவது லக்ஷம்) என்று எண்ணிக்கை வகையால் பல பிரிவுகள் உண்டு. அவற்றுள் அஷ்டோத்தரம் என்பது அந்தந்த தேவதைகளுக்கு விருப்பமான, உரிய பத்திர புஷ்பங்களைக் கொண்டு நூற்றெட்டுப் பெயர்களைச்சொல்லி அருச்சிப்பது. பார்வதி தேவியார் வில்வதளங்களால் இந்த அருச்சனையைச் சிவபெருமானுக்குச் செய்து பாதி சரீரத்தைப்பெற்ருள் என்று மகாஸ்காந்தம் சொல்லுகிறது. கணபதி, சுப்பிரமண்யர், தேவி, துர்க்கை, லக்ஷ்மி, விட்டுணு, சூரியன் முதலான எல்லா மூர்த்திகளுக்கும் இந்த அருச்சனையைச் செய்தால் எல்லாவிதமான பலன்களையுமடையலாம், என்று 'கச்சபுடம் என்ற நூல் அறிவிக்கிறது.

முந்நூறுபெயர்களைச்சொல்லி அருச்சிக்கப்படும் மந்திரம் திரிசதி என்று பெயர். யசுர் வேதத்தின்கண் விளங்கும் ருத்ரப்பிரச்சனத்தில் "நமோ ஹிரண்ய பாஹவே, எனத்தொடங்கி நம ஆமீவத்கேப்யஹ, என்று முடிவாகவுள்ள முந்நூறு அருச்சனை. ருத்ரதிரிசதி அருச்சனை. இதைச் செய்தால் ஈச்வரனுக்கு ருத்ராபிஷேகம் செய்த பலன் உண்டாகும். தேவிக்கும் திரிசதி அருச்சனை உண்டு. இது, தேவியால் ஹயக்ரீவருக்கும், ஹயக்ரீவரால் அகஸ்தியருக்கும் உபதேசிக்கப்பெற்றது. பஞ்சதசாக்ஷரீ மகாமந்திரத்தை முதலெழுத்தாகக்கொண்டது. இதற்குப் பெயர் லளிதாத்ரிசதி அருச்சனை. இதைத் தேவிக்கு முறையோடு செய்தால், தனம், கல்வி, தளர்வரியாமனம், தெய்வவடிவம் முதலிய நல்லனவெல்லாம் கிடைக்கும். முருகனுக்கும், திரிசதி இன்றியமை யாததாக விளங்குகிறது. அதில், சரவணபவ என்ற அக்ஷரங்கள், ஒவ்வொரு அருச்சனைதோறும், குமாரதந்திர ஆகமத்தில் காணப்படும் மந்திராவதார முறைப்படி மாறிமாறி அமைந்து காணப்படுவதால் மிகச் சிறந்த அருச்சனையாகக் கருதப்படுகிறது. இதற்குப்பெயர் ஷடக்ஷரதிரிசதி அருச்சனை.

இதை முறையோடு செய்பவர் அல்லது செய்விப்பவர் சத்துரு பாதையினின்றும் நீங்கப்பெற்று ஷட்கரும சித்திகளைப் பெறுவார்கள் என்று சுருதி கூறுகிறது.

இதுபோல் ஆயிரம் அருச்சனை கொண்டது சகஸ்ரநாமாருச்சனை. இந்த சகச்ரநாமாருச்சனையை நூறு தடவை செய்தால் சத சகஸ்ரநாமார்ச்சனை (லக்ஷாருச்சனை) இவைகள் தனித்தனி விசேஷ பலன்களைத் தரக்கூடியன.

அஷ்டோத்தர சதநாமாருச்சனைக்கு தேங்காய், பழம், தாம்பூலம், நிவேதனம் செய்து கர்ப்பூரஹாரத்தி செய்து பிரசாதம் வழங்கவேண்டும். திரிசதி முதலான அருச்சனைக்கு வடை, பாயஸம் மற்றும் சித்திரான்ன வர்க்கங்களும் நிவேதனம் செய்வது சாலச்சிறந்தது. விசேஷமாகச் செய்வதற்கு விசேஷபலன் உண்டு, என்பது முதியோர் வாக்கு.

பாயஸம் பாக்யவ்ருத்திஸ்யாத் மாஷாபூபம் தனப்ரதம் ।
நாரிகேளம் ஜயம் ப்ரோக்த்தம் பலஞ்சா பீஷ்டசித்திதம் ॥
தாம்பூலம் ச்ரீகரம் ப்ரோக்த்தம் கர்ப்பூரஜ்யோதி தரிசனம் ।
ஜ்யோதிர்மயஸ்வரூபாட்ய புத்ர பௌதராயி வர்த்தனம் ।

பாயஸத்தினால் பாக்கிய விருத்தியும், வடையினால் தனவிருத்தியும் தேங்காயினால் ஜயமும், பழத்தினால் இஷ்டசித்தியும், தாம்பூலத்தினால் சோபையும், கர்ப்பூர தரிசனத்தினால் தேஜோவான்களான புத்திர பௌத்திராபிவிருத்தியும் உண்டாகும்.

ஆலயங்களில் இறைவனை வழிபட்டு இம்மை மறுமைப் பயன்களை யடைய வேண்டியதற்கு இன்றியமையாத காரணம் மூன்று.

அர்ச்சகஸ்ய ப்ர பாவேன அர்ச்சனஸ்யாதிசாயனாத் ।
ஆபிருப்யாச்ச பிம் பானாம் சிலா பவதி சங்கரஹ ॥

அர்ச்சகருடைய மஹிமையாலும், அருச்சனையின் மேன்மையாலும், அழகாக அமைந்த பிம்பங்களின் தோற்றத்தினாலும் சிலை மங்களத்தைச் செய்வதாக ஆகிறது. எனவே ஆலயங்களில் சிறந்த அறிவாளிகளான முன்னோர்கள் செய்துவந்த முறை வழுவாது இறைவனுக்கு அஷ்டோத்தர சத நாமம் முதலியவைகளைச் செய்தால் தம் தமது மனோபீஷ்ட சித்தியைப் பெறுவதற்கு யாதும் ஐயுறவில்லை.

அன்பே சிவம்

# தொண்டு

வித்துவான், தருமை. சொ. சிங்காரவேலன்

## தொண்டர்தம் பெருமை

உலகை வாழ்விப்பது தொண்டு. உயிர்களை வாழ்விப்பதும் அதுவே. தொண்டில்லாத வாழ்வு துலங்காது. வாழ்க்கை சிறப்பது தொண்டினல். உள்ளம் சிறப்பது தொண்டினல். உணர்வு தழைப்பது தொண்டினல். தொண்டுடையவர் பெருமை நிலைநிற்கும் பெருமை. அது சொல்லிலும் அடங்காது. 'தொண்டர் தம் பெருமை சொல்லலும் அரிதே' என்பது ஔவை அருள்மொழி. தொண்டின் அளவால் மனிதன் உயர்கிருன்.

## ஓடும் செம்பொன்னும்

தொண்டு மனப்பாங்கில் நடுவுநிலைமை உண்டு. தூய்மை உண்டு. எதையும் தாங்கும் இதயம் உண்டு. பொன்னுனலும் மண்ணுனலும் பொருளன்று தொண்டர்க்கு. 'ஓடும் செம்பொன்னும் ஒக்கவே நோக்குவார்-வீடும் வேண்டாவிறலின் விளங்கினர்'! என்று இயம்புவர் சேக்கிழார் பெருமான். மக்கள் தொண்டும், சமயத்தொண்டும் வேறல்ல. இரண்டும் ஒன்றே. மக்களுக்குச் செய்யும் தொண்டு மாதேவனுக்குச் செய்யும் தொண்டு. 'நடமாடும் கோயில் நம்பற்கொன்றீயின் படமாடக்கோயில் பகவற்கங்காகும்' என்பது திருமூலர் திருமொழி. மக்கள்தொண்டுபுரிந்த பரமஞானியரே நம் முன்னேர்.

## வேள்வியா தொண்டா ?

நமது சைவசித்தாந்த நெறியியே பரமுத்தி சித்திக்கும் நெறி. இப் பரமுத்திக்குச் சாதனம் சிவஞானமாகும். சிவஞானத்தை வளர்ப்பன சரியை, கிரியை, யோகம் என்ற மூன்றுமே.

இந்த மூன்றுமே தமிழ்நாட்டிற் பிறந்த சைவத் தமிழர் மேற் கொள்ளவேண்டிய தொண்டுகளாகும். இந்த மூன்று திறங்களுமே சிவஞானத்தைப் பயக்கவல்லனவாகும். அன்றி வேள்வி முதலியன சிவஞானத்தைப் பயக்குமென்றல் அறியாக் கூற்றே வேள்வி முதலாயின முன்பசித்து உண்டு பின்னும் பசிப்பானுக்கு அவ்வுண்டியால் வரும் இன்பத்தைப் போன்றே இன்பம் ஈயவல்லன. ஆனல் சரியைத் தொண்டும் யோக நெறியும் தருகின்ற இன்பமோ பசித்து உண்டு பின்னும் பசித்தலில்லாத தேவர்களுக்கு அமுத உண்டியால்வரும்

இன்பம் போன்றது. அமுதம் நரைதிரை மூப்பற்ற நிலைபேற்றைக் கொடுத்துப் பசியையும் தீர்த்தல் போன்றது இத்தொண்டுகளின் பயன். சிவஞானத்தைப் பயப்பதோடு மட்டுமன்றிப் பதமுத்தியையும் இத் தொண்டுகள் பயக்கும், இது புனைந்துரையன்று. அருளாளர்களின் உண்மைஉரை. திருத்தொண்டர் புராணத்து முன்னுரையில் நாவலர் பெருமான் அவர்கள் இதனை நன்றாக விளக்கிச்செல்வர்.

## தொண்டின் உறைப்பு

உறைப்புள்ள தொண்டுமனமே உலகத்தவரால் போற்றப்படுவது. அதுவே 'நிலையில் திரியாது' என்று வள்ளுவரால் பேசப்பெறுவதாகும்; அதுமட்டுமின்றி

" ஊழிபெயரினும் தாம் பெயரார் சான்றாண்மைக்கு
ஆழி எனப்படுவார் "

என்கிறார் திருவள்ளுவனார். அத்தகைய மன உறுதியைத்தான் 'உறைப்பு' என்கிறது சமயநெறி. 'ஐந்து பூதங்கள் தங்கள் தங்கள் நிலையினின்று கலங்கினும் சிவபிரான் திருவடியே மறவாத காதல், உறைப்பின் நின்ற தொண்டர்' என்று சேக்கிழார் (142) பெருமானார் தொண்டரின் இலக் கணத்தை நன்கு சொல்லிக்காட்டுகிறார்கள். அம்மட்டுமோ?

## திருத்தொண்டத்தொகை

திருவாரூர் செல்கின்ற சுந்தரர் பெருமானார், 'கண்ணுதல் கோயில் தேவாசிரியனும் காவணத்து' அடியார்கள் பெருமையைப் பார்க்கிறார்கள். 'இவர்க்கு யான் அடியேனாகப் பண்ணுநாள் எந்நாள்' என்று பரமர்தாள் பரவிச் செல்கின்றார்கள். பரவுகின்ற பரவை காதலர்க்குத் தொண்டர் பெருமையைக் கூற முற்படுகின்றான் பெருமான்; அங்கேதான் தொண் டரின் இலக்கணம், பண்பு, பெருமை, ஆற்றல் அனைத்தும் துலங்கு கின்றன.

தொண்டர்களின் பெருமையை நோக்கத் தாமே ஒப்பாவார்கள். பேணுதலால் பெருமானைப் பெற்றார்கள். ஆன்மநேய ஒருமைப்பாட்டு உரிமையால் அண்டமனைத்தும் வெல்லத்தக்க ஆத்மீக வெற்றி படைத்த வர்கள்; குற்றமென்றல் சிறிதும் இல்லாக் கொள்கையினர். அரிய நிலையில் நிற்பவர்கள்; அன்பினால் இன்பம் ஆர்வார்; இருமையும் கடந்து நிற்கும் இயல்புற்றவர்கள்; இத்தகையோர் அடியார், (தடுத்தாட் - 196) என்று முடிக்கின்றான் பெருமான். இவர்களைப் (பன்னுபாமாலை பாடும்

பரிசெனக்கு அருள்செய்' என்று சுந்தரர் வேண்டுகிறார். அப்போது தான் 'தொல்லைமால் வரை பயந்த தூயாள்தன் திருப்பாகன், அல்லல் தீர்ந்து உலகம் உய்ய, மறையளித்த திருவாக்கினால், 'தில்லை வாழ் அந்தணர்தம் அடியார்க்கும் அடியேன்' என்று எடுத்து இசைப்பாமொழி) என்று அருள்கின்றான். சுந்தரர் செந்தமிழ் சிந்தையில் தேங்கிச் செந்தேனைச் சிந்துகின்றது. அச்செந்தமிழ் மாலையே திருத்தொண்டத் தொகை என்பதைச் சைவஉலகம் அறியும்.

'தொண்டு' என்ற தலைப்பில் அகத்தியமாமுனிவரை ஈர்த்த தெய்வத் திருமுறைப் பதிகங்கள் மூன்றனுள் இதுவும் ஒன்றாகும்.

திருத்தொண்டத் தொகையே பெரியபுராணத்தின் வித்து. இதுவே திருத்தொண்டர் திருவந்தாதியாய் முளைத்துப் பெரிய புராணமாய் வளர்ந்து பேரருட்கனி கனிந்து விளக்கமுறுவதாகும். அடியார்களின் தொண்டுகளைத் தக்க அடைமொழிகளால் இதன் கண்ணேயே முதன் முதல் பாடிவைத்தனர் சுந்தரர் பெருமானார். அவ்வடைமொழிகள் சுந்தரர் பெருமானாரின் நுண்ணிய - அகன்ற வரலாற்றறிவை, தமிழறிவை விளக்கும். கலைமலிந்த சீர் நம்பி, வெல்லுமாமிகவல்ல, நாட்டமிகுதண்டி, பொய்யடிமை இல்லாத, நெல்வேலிவென்ற என்பன அவற்றுட் சிலவாகும். இதன் நலத்தையே விரிக்கப்புகின் நீளுமாதலின் இத்துடன் விடுத்து அடுத்த பதிகத்துக்கு வருவோம்.

## தொண்டர்க்கு யாவும் நல்லனவே!

'வேயுறு தோளி பங்கன்' என்ற திருப்பதிகம் தொண்டர்க்குக் கோள்களால் யாதும் நேராது என்பதை வெள்ளிடை மலையாக்குவது.

'திருமறைக்காடு நண்ணிச்' சிரபுரச் செல்வனார் அமர்ந்திருக்கிறார்கள். 'கன்னிநாடு அமணர் தம்மாற் கட்டழிந்து இழிந்தது' மங்கையர்க்கரசியாரும் குலச்சிறையாரும் விடுத்த தூதரால் கேட்டு அருளார்ந்த நெஞ்சோடு எழுகின்றார்கள். கூட இருந்த திருநாவுக்கரசு பெருமானாரிடம் சொல்லிக்கொண்டு புறப்படும் சமயம், அப்பரடிகளோ அமணர் அவதிமுற்றும் தெரிந்தவர். 'அமணர்களோ தீயவர்கள். இப்போது நாளும் கோளும் நன்றாக இல்லை; எனவே உடன்படுவ தொண்ணாது' என்று சொல்லுகின்றார்கள். அதற்குச் சம்பந்தப் பெருமானார் அளிக்கின்ற விடை சைவத்தின் ஆற்றலையும், தொண்டின் ஆற்றலையும் நன்கு விளக்குவதாகும். 'பரசுவது நம் பெருமான் கழல்கள் என்னால் பழுது அணையாது' என்று சொல்லிப் பரமனின் விரைசெய் மலர்த்தாள் போற்றிப் புகலிவேந்தர் 'வேயுறுதோளியை' எடுத்து விளம்புகின்றார்கள்.

'நாளென் செய்யும்வினை தான் செய்யும் எனை நாடிவந்த கோளென் செயும் கொடுங் கூற்றென் செய்யும்' என்று முழக்குகின்ற அருணகிரியாரின் அருள் முழக்கத்துக்கு வித்து இப்பதிகச் செந்தமிழே யாகும்.

இதனை இன்றும் சொல்லி எச்செயலைச் செய்யத் தொடங்கினும் அது ஊனமின்றி இயல்வதற்கு உறுதுணை செய்வதாகும். நம்பிக்கை வேண்டும். ஆயின் பயன் உறுதியாக உண்டு எனலாம்.

## தொண்டர்க்குத் தொண்டராம் புண்ணியம்:

அடுத்துள்ள பதிகம் 'குலம்பலம் பாவரு' எனத் தொடங்கும் நாவுக்கரசுப் பெருமான் திருவிருத்தப்பதிகம். இது திருவாரூர்க்கண் பாடி யருளப்பெற்ற திருப்பதிகமாகும். இதனுள் அப்பர்பெருமான், 'அமணரொடு இணைந்து தொடர்புற்ற தனக்கும், தொண்டர்க்குத் தொண்டராம் புண்ணியம் உண்டுகொலோ' என்று ஒவ்வொரு பாடலிலும் உள்ளுருகி உருகுகின்றார். உண்மையிலேயே அடியவர்க்கு அடியவராகத் - தொண்டர்க்குத் தொண்டராக இலங்குதலின் ஏற்றத்தை இப்பதிகத்தான் அறியலாம். அதுவே பெறுதற்கரிய பேருகும்.

'பொருந்துந் தவமுடைத் தொண்டர்' என்றும்,

'புலம்பு அலம்பாவருள் தொண்டர்' என்றும்,

'பொய்யன்பிலா அடித் தொண்டர்' என்றும்,

இதனுள் தொண்டர்களின் இலக்கணத்தை விதந்து கூறுகின்றார்கள் நாவரசுப் பெருமான். அத்தகைய தொண்டர்களுக்குத் தொண்டு செய் இன்ற பேறு எனக்குக் கிட்டுமா என்று அழுது உரைக்கின்ற திறத்தை இப்பதிகத்திற் காணமுடிகிறது. நமக்கும் அத்தகைய தொண்டுமனம் தேவையாகின்றது. 'என்கடன் பணி செய்துகிடப்பதே' - என்ற குறிக்கோளொடு தொண்டினாலேயே சிறப்புற்றவரல்லவா நாவரசுப் பெருமான்!

குமரகுருபரர் மதுரைக் கலம்பகத்திலே பாடுகிறார்கள். 'சிற்றடிய வர்க்க குற்றேவல்தலைக் கொண்டு, அம்மா கிடைத்தவா என்று, செம்மாப்புறாஉம் திறம்பெறற் பொருட்டே உன்னை இரக்கின்றேன்' என்று பரமனடி போற்றுகிறார்கள்.

இறைவனுக்கு அடிமைப்பட்டாலும், தொண்டர்க்குத் தொண்டு செய்திலனேல் அவனருளுக்கு இலக்காதல் என்றும் இல்லை. இதனைச் சிவஞான சித்தியார் தெளிவாகக் கூறுகிறது.

"ஈசனுக்கு அன்பில்லார் அடியவர்க்கு அன்பில்லார்
எவ்வுயிர்க்கும் அன்பில்லார் தமக்கும் அன்பில்லார்
பேசுவதென் அறிவில்லாப் பிணங்களை! நாமிணங்கின்
பிறப்பினிலும் இறப்பினிலும் பிணங்கிடுவர் விடுநீ!
ஆசையொடும் அரனடியார் அடியாரை அணைந்திட்டு
அவர்கருமம் உன்கருமம் ஆகச் செய்து
கூசி மொழிந்து அருள்ஞானக் குறியினின்று
கும்பிட்டுத் தண்டமிட்டுக் கூத்தாடித் திரியே."

ஆம்; தொண்டர்க்குத் தொண்டுசெய்யும் புண்ணியமே தொண்டின் உயர்வு நிலையாகும்.

## தொண்டு செய்வோம் வாரீர்!

அகத்தியர் தேவாரத்திரட்டில் 'தொண்டு' என்ற தலைப்பிற் காணப் படும். பதிகக் கருத்துக்களை இதுகாறும் சிந்தனை செய்தோம். இதன் பயன் இதனோடு மட்டுமன்று நாமும் தொண்டுசெய்தல் வேண்டும். தொண்டு செய்தலில் சிறிதும் தடைகூடாது. 'தொண்டர் சீர் பரவும்' சேக்கிழார் அடிகள் கூறுவதுபோல, அன்பினால் இன்பம் மேவ வேண்டும். ஆம்; அதுவே தொண்டின் வெற்றி. தொண்டின் உயர்வு. தொண்டு செய்வோம் வாரீர்! அதுவே அன்புருவாம் சிவத்தின் அருள்பெற்று உய்யும் ஒரே வழி.

---

<u>மதிப்புரை</u>

### ஆலயங்களில் கூட்டுப் பிரார்த்தனையின் அவசியம்

மதுரைத் திருவருள் தவநெறி மன்ற வெளியீடு. ஆசிரியர்: மதுரைத் திருஞானசம்பந்த சுவாமிகள் ஆதீன இளவரசு திருப்பெருந்திரு சோமசுந்தர தேசிக பரமாசாரிய சுவாமிகள் அவர்கள்.

எண்ணிறந்த காரியங்கள் நம்மால் செய்யமுடியாதன. நம் விருப்பப் படி நடவாதவை பல. யாவற்றையும் பயன்கருதாமல் நடத்தும் ஈசனிடத்து நமது நன்றியறிவைக் காட்டுவதற்காவது யாவரும் ஒன்று சேர்ந்து ஆலயங் களில் இசையுடன் துதிக்கவேண்டும். கானத்தில் பிரியன் ஈசன். தினம் கூட்டுப் பிரார்த்தனை செய்ய முடியாவிடினும் வாரத்தில் ஒரு நாளாவது செய்யவேண்டும். குடும்பத்தினர் யாவரும் வீட்டிலாவது ஒன்றுசேர்ந்து துதிக்கவேண்டுமென காலத்திற்கு வேண்டியதாகிய ஓர் அறிவுரையை நன்கு விளக்குகிறார். விலை அணா 0—1—0.

கே. இராஜகோபால சாஸ்திரிகள்.

மன வாசகங் கடந்தார் அருளிய

# உண்மை விளக்கம்

தருமபுர ஆதீனப் புலவர், சித்தாந்த ரத்நாகரம், மதுரகவி.

திரு. முத்து. சு. மாணிக்கவாசக முதலியார் அவர்கள்

(முற்றொடர்ச்சி மலர் 14. இதழ் 12.)

வித்தியா தத்துவம் எல்லாம் முன்னர் ஒருவாறு விளக்கப் பட்டமை குறித்து, 'வித்தியா தத்துவங்கள் ஏழும் விளம்பினோம்' என்று முடித்து, மேல், சிவதத்துவங்களை உணர்த்தத் தொடங்கு கின்றார். அதனால் சுத்தமாம் தத்துவங்கள் சொல்லக்கேள் என்று மாணுக்கரைத் தூண்டுகின்றார்.

சிவதத்துவம் சுத்த தத்துவம் என்பன வெவ்வேறல்ல, ஒன்றே. அவை ஐந்தும் 1. சுத்தவித்தை; 2. ஈசுரம்; 3. சாதாக்கியம். 4. சத்தி, 5. சிவம் என்ற பெயருடையன. இஃது ஒடுக்கமுறை பற்றியது. தோற்றமுறையில், சிவம், சத்தி, சாதாக்கியம், ஈசுரம், சுத்தவித்தை என்ற வரிசையில் கொள்ளப்படும்.

21 "வித்தியா தத்துவங்கள் ஏழும் விளம்பினோம்
சுத்தமாம் தத்துவங்கள் சொல்லக்கேள்—நித்தமாம்
சுத்தவித்தை ஈசுரம்பின் சொல்லும் சதாசிவம்நற்
சத்திசிவம் காண் அவைகள் தாம்,'

குறிப்பு:— முதலடி தத்துவங்களின் பெயரும் தொகையும் உணர்த்தி நின்றது. முற்கூறப்பட்டமையும் அறிவித்தது. பின் மூன்றடியும் சிவதத்துவங்களின் பெயரும் அவை சுத்தமாதலும் உணர்த்தின.

ஆன்மாக்கள் இச்சை, ஞானம், கிரியை என்னும் மூன்றன் வடிவாயிருக்கின்றன. அவற்றுள் இச்சையை ஒழித்து, ஒழிந்த ஞானம் கிரியை இரண்டும் தனித்தனியாக வியாபரிக்கின்றன. ஒத்து வியாபரிக்கின்றன. தம்முள் ஏற்றக்குறைச்சலாக வியா பரிக்கின்றன. அவற்றுக்குத் தக்க காரணம் இருத்தல் வேண்டும்.

ஆன்மாவின் இச்சைக்கு ஆண்டவன் இச்சை ஆதாரமாய் இருக்கிறது. ஞானத்திற்கும் கிரியைக்கும் ஆண்டவனுடைய ஞானமும் கிரியையும் ஏதுவாயிருக்கின்றன. ஆண்டவனது இச்சை ஆன்மாவினது இச்சையை எழுப்ப இடையே தத்துவங்கள் ஆகிய கருவிகள் உள்ளன. அவற்றை ஆண்டவன் தொழிற்படுத்துகின்றான். அம்முறைமையில் ஆண்டவனிச்சா ஞானக் கிரியைகள் ஆன்மாக்களின் இச்சாஞானக்கிரியைகளுக்கு ஏதுவாகின்றன.

திருவாவடுதுறை மடத்தினது பண்டாரசாத்திரத்தின் தொடக்கத்தில் உள்ள பிள்ளையார் காப்புத் திருவிருத்தத்தை உணர்தல் சாலநன்றாகும்.

> "ஒருவிய இச்சை ஆதி உதயமாய் ஒடுங்க என்பால்
> மருவிய இச்சை ஆதி மறைந்திட ஈசன் றன்பால்
> விரவிய இச்சை ஆதி விளங்கிஆங் கொடுங்கவேண்டித்
> திருவருள் வார ணத்தின் திருவடி சென்னி வைப்பாம்"

என்பது அது. அதனை இயற்றியருளியவர் மூன்றாவது பட்டத்தில் வீற்றிருந்தருளிய அம்பலவாணதேசிகர். அவரே சிவம். சிவமே அவர், 'குருவே சிவம் எனக் கூறினன் நந்தி'.

அவ்வுண்மையைக் குருமுகமாகக் கேட்டுணர்ந்தால், சிவதத்துவங்களின் உண்மை இனிது விளங்கும்.

1. சிவதத்துவம் ஞானமாத்திரமாயிருப்பதொரு நிலை. அந்நிலையில் கலக்குண்ட சுத்தமாயைக்கும் அதுவே பெயராயிற்று. ஏனைய நான்கற்கும் இவ்வாறே கொள்க.

2. சத்திதத்துவம் கிரியைமாத்திரமா யிருப்பதொருநிலை.

3. சாதாக்கிய தத்துவம் ஞானமும் கிரியையும் ஒத்துநின்றநிலை.

4. மகேசுரதத்துவம் (ஈசுரம்) ஞானம் குறைந்து கிரியை மிக்க நிலை.

5. சுத்தவித்தியாதத்துவம், கிரியை குறைந்து ஞானம் மிக்க நிலை.

இவ்வைந்து நிலையும் சிவசத்தி மூன்றனுள் ஞானசத்தி கிரியாசத்திகளின் வியாபாரபேதம். இவை லயம் போகம் அதிகாரம் என்னும் மூன்றவத்தையாயடங்கும். அவற்றிற்கு ஏற்ற ஆதாரங்களும் உள. உருத்திரன் ஒருவனே இவற்றிற்குத் தக்க பெயர் வேறுபாடுடையனுயிருப்பன்.

22 சுத்தவித்தை ஞானமிகும் தொன்மையாம் ஈசுரம்தான்
அத்தன் தொழில் அதிகம் ஆக்கியிடும்-ஒத்தல் இவை
சாதாக் கியம் என்றும் சத்தி சிவம்கிரியை
ஆதார ஞானவுரு வாம்-

குறிப்பு:— சுத்தவித்தை ஞானம் மிக்கது; கிரியை குறைந்தது 2. ஈசுரம் கிரியை மிக்கது; ஞானம் குறைந்தது; 3. சாதாக்கியம் இவ்விரண்டும் ஒத்த நிலையது. 4. சத்தி கிரியாரூபம்; 5. சிவம் ஞானரூபம். 'மிகும்' 'அதிகம்' என்றமையால் குறைதல்தானே பெறலாகும். 'ஆதாரம்' என்ற அடைமொழியை உளங்கொள்ளல் வேண்டும். (தொடரும்)

---

## அடியாரியல்பு

1 மெய்யரும்பல், 2 விதிர்விதிர்த்தல், 3 தலைமேற்கைகுவித்து வணங்கல், 4 கண்ணீர் ததும்பல், 5 உள்ளம் வெதும்புதல், 6 பொய்யொழிதல், (பொய்ப்பொருட்பற்று நீங்குதல் முதலியன.) 7 போற்றி போற்றி வெல்க வெல்க என்றுரைத்தல் முதலிய ஒழுக்கம், 8 நல்லியல்பெல்லாவற்றையும் நெகிழவிடாமை (கடைப்பிடி) ஆகிய எட்டியல்புகளும் ஆண்டவனடியை மறவாத அன்பர்க்கு உரியன.

" மெய்தான் அரும்பி விதிர்விதிர்த்து உன்வரை ஆர்கழற்குஎன்
கைதான் தலைவைத்துக் கண்ணீர் ததும்பி வெதும்பி உள்ளம்
பொய்தான் தவிர்ந்து உன்னைப் போற்றி சயசய போற்றி என்னும்
கைதான் நெகிழவிடேன் உடையாய்! என்னைக் கண்டு கொள்ளே. "

(திருவாசகம் 5.)

# எங்கள் குரு முதல்வர்

## சென்னையில்

சென்னையிலே உள்ள தருமபுர ஆதீனத்தின் சமயப்பிரசார நிலயத்திலே 14—11—55 மாலையில் இந்திய ஜனாதிபதி இராஜேந்திரபிரசாத் அவர்கள் விஜயம் செய்ததை மக்கள் யாவரும் அறிவர். அவர்கள் அங்கு அடைந்த இன்பம் பெரிது. அங்கு நிகழும் தேவாரவகுப்பு மாணுக்கர்களின் (பெண் ஆண்) இன்னிசைத் திருமுறைப் பாடலைச்செவிமடுத்தார்கள். அறிவுடைய மக்கள் திரண்டு அமர்ந்து விளங்கிய பேரவையிலே, உயரிய, அழகிய மேடையிலே வீற்றிருந்து, எங்கள் குருமுதல்வர் திருவாய்மலர்ந்த நல்லுரைகளையும் இந்திய ஜனாதிபதி அவர்கள் ஆற்றிய ஆங்கிலச் சொற்பொழிவையும் இவ்விதழில் படித்துணரலாம். அவற்றின் மிக்கசிறப்பைப் படிப்பவர் உணர்ந்து பெருமகிழ்ச்சி அடைவர். அன்றைய நிகழ்ச்சியை ஹிந்து, மெயில், எக்ஸ்பிரஸ், 'தினமணி' 'மித்திரன்' முதலிய பத்திரிகைகளும் உள்ளவாறு நல்ல முறையில் உலகம் அறிய வெளியிட்ட நலத்தை நல்லோர் எல்லோரும் மறவார். உரிய காலத்தில் செய்யத்தக்கனவற்றைத் திறம்படச் செய்வதே தக்கோர்கடன். அது பத்திரிகை யுலகிற்கு முக்கியமானது. அதை நன்குணர்ந்து ஓரிடத்தில் கேட்டவற்றை, கண்டவற்றை உலகமெங்கும் உணரச்செய்தன அப்பத்திரிகைகள்.

எங்கள் ஆதீன முதல்வரும் இந்தியா முதல்வரும் ஓரிடத்தில் ஆற்றிய அரும்பெருஞ் சொற்பொருட் பொழிவு நீரால் மக்கள் உள்ளமாகிய நிலமெலாம் நனைத்து, கடவுள் நெறியாகிய பயிரை வளர்த்து. துன்பமே இல்லாத இன்ப விளைவைச் செய்தது; அந்நிலயத்தின் இரண்டாவதாண்டு நிறைவிழா முகில்.

வாழ்க இந்திய ஜனாதிபதி! வாழ்க சமயப்பிரசார நிலயம்!!

வளர்க கடவுளுணர்ச்சி !!!

## திருச்செந்தூரில்

எங்கள் குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணியதேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்கள், சீடர்களுக்கு நடந்துகாட்டும் சம்பிரதாயத்துக்கு மாத்திரம் அன்றி, உண்மை யிலேயே விரதாநுஷ்டானங்களை முற்றும் உடையவர்கள் ஆதலின், ஆண்டுதோறும் மிக்க சீரிய நெறியில் மேற்கொண்டு ஒழுகும் ஸ்கந்த ஷஷ்டி விரதத்தை இவ்வாண்டிலும் திருச் செந்தூரில் எழுந்தருளியிருந்து காத்தார்கள். 'காப்பது விரதம்' என்பது முதுமொழி. முருகப் பெருமான் திருவருளால் எல்லாம் இனிய ஆயின.

வாழ்க குரு முதல்வர் ! வளர்க அவர் செய்தருளும் அறங்கள் !

## மதுரையில்

முன்னர், சிவநெறியை நிலைநாட்டி நன்கு நடைபெறச் செய்தருளினூர் திருஞானசம்பந்தர். எங்கு ? தமது சோழ நாட்டிலோ? அன்று. பாண்டிய நாட்டில். "உலகெலாம் உய்யக்கொண்ட ஞானசம்பந்தர் வாய்மை ஞாலத்திற் பெருகி ஓங்கத் தேனமர் கொன்றை யார்தம் திருநெறி நடந்தது" இது சேக்கிழார் திருவாக்கு. அவ்வாறு அங்கே திருநெறி நடந்த தற்கு ஏதுவா யிருந்தது 'வெறியார் மொழில் சண்பை வேந்தர் மெய்ப்பாசுரம்; அதுதான் "வாழ்க அந்தணர் வானவர் ஆன் இனம்" எனத் தொடங்கும் திருப்பதிகம். அதனேடு தருமைத் திருமடத்து முதல்வர்கள் அருளிய சில திருப்பாடல்களையும் கொண்ட கல்வெட்டுக்களை மதுரைத் திருவாலவாயில் நிறு வினர்கள். அச்சிவபுண்ணியம் எங்கள் குருமுதல்வர் திரு வுளத்தெழுந்த பெருங்கருணையின் எழிலுருவங்களுள்ஒன்றாகும். அதனை அங்குச் செவ்விதின் நிகழ்த்தியுதவியவர்கள் சிவஸ்ரீ ம. க சுந்தரேச பட்டர் அவர்கள். அவர்களது பெருமையை அறியாதவர் எவரும் இரார். 'மகனறிவு தந்தையறிவு' என்பது அவர்களாலும் நன்கு விளங்குகின்றது.

அன்று நிகழ்ந்த அவைக்குத் தலைமைதாங்கி இனிது நடத்தியவர் அக்கோயிலின் சிவப்பணியாளர் திரு. டி. ஏ. விவேகாநந்தம் பிள்ளை அவர்கள். திறப்பாளர்

மதுரைமாவட்டத்துக்கலெக்டர். திரு. ஆர். குஞ்சிதபாதம் ஐயர் அவர்கள். டாக்டர் திரு. மா. இராசமாணிக்கம் பிள்ளை எம். ஏ., எம். ஓ. எல்., பி. எச்டி., அவர்களும், நம் ஆதீன வித்துவான் திரு ஔவை சு. துரைசாமிப்பிள்ளை அவர்களும் திருஞான சம்பந்தரையும் திருப்பாசுரத்தையும் பற்றி மிகச்சிறந்த சொற் பொழிவாற்றி அவையோரைப் பெரிது மகிழ்வித்தார்கள்.

வளர்க திருநெறிய தமிழ்! வாழ்க உலகெலாம்!!

### பழனியில்

21—11—'55 அன்று காலை சண்முக நதியில் திருமஞ் சனமாடி மலைக்கு எழுந்தருளினார்கள். பழனி ஸ்ரீ தண்டா யுதபாணிக்கு விசேஷ அபிஷேக ஆராதனைகளும் ஷண்முகார்ச் சனையும் செய்விக்கப்பெற்று பொன்னுடையும் போர்த்தப் பெற்றது ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் செபத்திற்கு என்று வைத்திருந்த உருத்திராக்க மாலையை ஸ்ரீ தண்டாயுத பாணிக்கு அணிவித்து மகிழ்ந்தார்கள். அன்று மாலை பழனியி லிருந்து திருச்சி வழியாக சுவாமிமலைக்கு எழுந்தருளி முருகனை வழிபட்டு இரவு 11 மணி சுமாருக்குத் தருமைக்கு எழுந் தருளினார்கள்.

## தருமையாதீனத் தொண்டு

### திருவண்ணாமலையில்

கடவுள் நெறியில் ஓரளவு பற்று இல்லாத உயிர் இல்லை. திருமலையில், 'கமலா' எனப் பெரிய குரங்கு ஒன்று நன்னெறி யொழுக்கம் உடையதாயிருந்ததும், மறைந்ததும், அது பற்றிப் பலர் வருந்தியதும் 30-11-55இல் 'மித்திரன்' வெளியீட்டில் அறிந்திருக்கலாம். சென்னையில் ஒரு கோழி அவ்வாறு சிறந்து விளங்கிய உண்மையும் நாய் சொற்பொழிவு கேட்டதும் நினைவில் வரும். புராணங்களில் கூறப்படும் யானை, பூனை, புலி, எலி முதலியவை வழிபட்ட வரலாறுகளை மெய் என்பதற்குச் சான்று வேறு வேண்டுமோ! கடவுட் பற்றும், சமய ஞானமும், பலவகைத் தொண்டுகளும்

பொருள்நாட்டத்தை அடிப்படையாகக் கொண்டவை என்று பலர் சொல்கின்றனர். அது பொய்யன்று. முழுவதும் மெய் எனக்கொள்ளலும் இயலாது. மெய்ப்பொருளுக்காகக் கடவுள் நெறியில் ஒழுகும் மெய்யரும் சிற்சிலர் உளர். பொய்ப் பொருளுக்காக மெய்ப்பொருளை வழிபடும் பொய்யரும் பற்பலர் உளர்.

திருவண்ணுமலையில் இவ்வாண்டில் திருவிளக்குக் காட்சியைப்பெற—திருவிழாவைக்காண—வேறு பற்பலவற்றை நாடித் திரண்டு கூடிய மக்களின் தொகையை அளவிட்டுரைத் தல் எளிதன்று. எத்தனையோ ஆண்டுகளின் முன்பு இவ்வாறு பெருங்கூட்டம் திருவண்ணுமலையில் இருந்தது என்று கூறு கின்றனர். அக்கூட்டத்தினருள் திருவண்ணுமலையை வலம் வந்த மக்கள் தொகையும் மிக்கிருந்தது. சிவநாம முழக்கம் செய்துகொண்டே சென்ருர் பலர். திருமுறைகளைப் பாடிக் கொண்டு போனுர் பலர். அகத்தொருமை உடையார் எனப் புறத்தார் நினைக்கும் வண்ணம் தோன்றிச்சென்ருர் பலர். காஞ்சி மெய்கண்டார் கழகத்தைச் சார்ந்த கூட்டம் திரு முறையைப் பண்ணிசையில் இன்னிசைக் கருவிகளுடன் பாடிச்சென்று, பலர்க்குச் சிவபக்தி வளரச்செய்தது. தமிழகத்தில் கடவுளுணர்வு பெருகிவருவதற்குத் திருவண்ணுமலையை வலம் வந்த கூட்டமும் அதன் இயல்பும் உயரிய சான்ரு யிருந்தன.

சத்தி விலாசத்தில், தேவாலய பரிபாலகரால் சிறந்த ஏற்பாடு செய்யப்பட்டு நிகழ்ந்த சொற்பொழிவுகள் வழக்கம் போல, மிகச் சிறந்த நிலையில் விளங்கி உயர்ந்த நலங்களை உதவின.

திருவண்ணுமலையில் இவ்வாதீனத்தின் சார்பில், துணையாசிரியர் திரு. முத்து. சு. மாணிக்கவாசக முதலியார், வித்துவான், திரு. ம. சிவசம்பு இருவரும் சென்று சமயப்பற்று வளர்க்கும் சொற்பொழிவுகள் செய்தனர்.

வாழ்க கடவுள் நெறி! வளர்க மெய்யுணர்வு!!

உ

குருபாதம்

தருமபுர ஆதீனம் இருபத்தைந்தாவது மகாசந்நிதானம்

**ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்**

இந்தியக் குடியரசுத் தலைவர்

# டாக்டர் பாபு இராஜேந்திரபிரசாத் அவர்களுக்கு

**சென்னையில் தருமபுர ஆதீன மடாலய தேவாலய சமயப்பிரசார நிலைய இரண்டாவது ஆண்டு நிறைவு விழாவில்**

அருளிய

# வரவேற்பு

**பாரதத் தாயின் பண்புடைப் புதல்வ, வருக! வருக!!**

உலகத்திலே நம் நாடு ஆத்மிக நெறியினால் உயர்ந்தது. அவ்வழியினை இந்நாள்வரை கடைப்பிடித்துத் திகழுகின்றது. இந்திய விடுதலைப் போர் தொடங்கிய காலத்தில் 'கத்தியின்றி இரத்தமின்றி யுத்தம் ஒன்று வருகுது' என்று தமிழ்நாட்டுக் கவிஞர் பாடினார். இன்றளவும் உலகம் கண்டும் கேட்டும் இராத நிலையில் ஆத்மிக வழியிலே நின்று உலக வல்லரசு ஒன்றின் பிணைப்பிலிருந்து விடுதலை பெற்றோம். சுதந்திரம் அடைந்தோம். ஆத்மிக வழி அறியாத ஏனைய நாட்டினர் தமக்குள்ளே சண்டையிட்டு அழிவுக்கு ஆக்கம் தேடி அணுக் குண்டு ஜலவாயுக்குண்டு என்பவைகளை உற்பத்திசெய்வதிலேயே நாட்டம்கொண்டிருக்கிறார்கள். இதுவொன்றே நாம் இன்று காணும் காட்சி. மனிதனை மனிதன் வெறுப்பதில்லை என்பது நம்முடைய சிறந்த பண்பு. உணர்ச்சி வேகத்தினால் உந்தப்படுவதில்லை. ஆத்மஞான சக்தியால் எழுகின்ற பயனைக் கொண்டே முடிவு காண்பது நம்மனோர் மரபு. மக்கள் அல்லற்பட்டு அவதியுறும் காலத்தில் கடவுளின் கருணையால் பெரியோர்கள் அவதரிப்பார்கள் என்பது நம்மனோருடைய நம்பிக்கை. சரித்திர ஏடுகளைப் புரட்டிப் பார்த்தால் பல

பெரியோர்கள் அவதரித்து அறிவுரை வழங்கி ஆத்ம ஞானத்தைப் புகட்டி நாடு நன்மையுறச் செய்து மறைந்தார்கள் என்ற உண்மையை அறியலாம்.

**காந்தியடிகளின் வழிவரு தலைவ!**

நாம் வாழ்கின்ற இக்காலத்தும் மகாத்மா காந்தியடிகள் தோன்றி ஒரு ஒப்பற்ற அற்புத வழியை அமைத்து ராமபஜனையில் மக்களை ஈடுபடுத்தி நாட்டுக்கு விடுதலை வாங்கித் தந்து மறைந்தார். அந்நிகழ்ச்சியை நாம் கண்டோம். அந்தப் பெரியாருடன் உத்தமத் தோழராக நின்று உழைத்தவரன்றோ நீவிர்! காந்தியத்தின் பெற்றியை உலகமறியச் செய்வதற்குத் தங்களையும் தங்களுக்கு உறுதுணையாக நேருஜி, இராஜாஜி போன்றவர்களையும் விட்டுச் சென்றிருக்கிறார்கள். காந்தியத்தின் தத்துவத்தைத் தாங்கள் செம்மையாகக் கடைப்பிடித்துப் பரவச் செய்துவருவதால் இன்று உலகம்விழித்துக்கொள்ளத்தொடங்கியிருக்கிறது. ஆத்மிக பலத்தின் அற்புதத்தை அறிந்து உலக மக்கள் நம் இந்தியாவை உயர்ந்த நாடாக மதிக்கின்றனர்.

**சமயம் புரக்கும் சான்றோய் வருக!**

காந்தியம் – உண்மை, உழைப்பு, அன்பு இவற்றின் அடிப்படையில் எழுந்தது. ஆதீனத்தில் சைவ சமயக் கொள்கையும் அவ்வாறேயாம். அன்பே சிவம் என்பது சைவ சமயத்தின் அடிப்படைக் கொள்கை. ஆத்மிக வளர்ச்சிக்கு வழிகாட்டும் எந்தச் சமயத்தையும் சம்மதமாகக்கொண்டு முடிந்த முடிபான கொள்கையைப் பரப்பிவருகிறது. பதினாறும் நூற்றாண்டின் பிற்பகுதியில் ஸ்ரீலஸ்ரீ குருஞானசம்பந்த தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் இந்த ஆதீனத்தை அமைத்தார்கள். ஆதீனத்தின் கொள்கை சுத்தாத்வைத சைவசித்தாந்தம். அது பதி, பசு, பாசம் என்ற முப்பொருள் உண்மையை உலகுக்கு எடுத்துப் போதிப்பது. அத்தகைய சிறந்த கொள்கையை உலகம் அறிந்து உய்யவேண்டும் என்பது நம்முடைய குறிக்கோள். சைவசித்தாந்தத்தின் அடிப்படையில் அமையப்பெற்ற ஆலயங்களில் இருபத்தேழு கோயில்கள் இந்த ஆதீனத்தின் ஆளுகைக்குள் இருந்துவருகின்றன. அவற்றின் நிர்வாகம் செவ்வையாக இருப்பதாகப் பலரும் பாராட்டக் கூடிய

நிலையிலும் இருந்துவருகிறது. சென்னையிலும், மற்றும்பல இடங்களிலும் இடையருது சமயப் பிரசாரம் செய்துவருகிறது. மேலும் சமய இலக்கிய நூல்கள் வெளியிட்டு வழங்குகிறது. சமயப் பிரசாரப் பயிற்சி, குருக்கள் பயிற்சி, ஓதுவார் பயிற்சி இவ்விதமாகப்பல்லாற்ருனும் தொண்டுசெய்துவருகிறது. இஃதல்லாமல் பிரசவ விடுதி கட்டிக்கொடுத்தும் க்ஷயம், தொழுநோய்போன்ற கொடிய நோய் நீக்கத்துக்குப் பாடுபடும் நிலையங்களுக்குப் பெரும் பொருள் கொடுத்தும், ஹரிஜனசேவை, அனுதைக் குழந்தைகள் இல்லம் நடத்தியும், திக்கற்றவர்களுக்கும், பஞ்சத்தாலும், வெள்ளத்தாலும் அவதியுற்றவர்களுக்கும் ஆதரவு தந்தும் வருகிறது.

விழாவைத் தொடங்கும் வித்தக வருக!

மக்கள் வாழ்க்கைத் தரம் உயரவேண்டும். அதற்கு ஒவ்வொருவர் உள்ளத்திலும் தெய்வ சிந்தனை மலரவேண்டும் என்பது நம்முடைய பெருவிருப்பம். இதே கருத்தோடு பணி பல புரிந்துவரும் தங்களைக் காணப் பெருமகிழ்ச்சி அடைகின்ருேம். ஆத்மஞான வழியுடன் ஆழ்ந்த மத நம்பிக்கையும், ஆடம்பரமில்லாத அடக்கமும், குணத்திற் சாந்தமும், காந்தீயத்தில் அழுந்திய பக்தியும், நாட்டுச்சேவையிலே முழுத் தியாக புத்தியும் உடைய தங்களை உளங்கலந்த உவகையோடு வருக, வருக என வரவேற்கிருேம். இந்த சமயப் பிரசார நிலையம் தொடர்ந்து நல்ல சேவை செய்வதற்குத் தங்கள் அறிவு நிறைந்த அமைதி நிறைந்த சொற்கள் பெரிதும் பயன்தரும். தங்களுடைய பேச்சினுல் மக்களுக்குச் சமய நம்பிக்கையிலே அழுந்திய உணர்வும் அறிவும் உண்டாகும். தாங்கள் நீடூழி வாழ்க என வாழ்த்துகின்ருேம். எக்காலமும் தங்களுக்குக் கடவுள் சிந்தனை சித்திக்குமாக. தாங்கள் நல்லன எல்லாம் பெற்று நல்வாழ்வு வாழ நமது ஆதீன ஆத்மார்த்த மூர்த்தியாகிய ஸ்ரீ சொக்கலிங்கப்பெருமானை வணங்கி வேண்டுகிருேம்.

வாழ்க உலகெலாம்! அரன் நாமம் ஓங்குக !!


14—11—1955

சென்னை தருமபுர ஆதீன மடாலய தேவாலய சமயப் பிரசார நிலைய
இரண்டாவது ஆண்டுவிழாவில் ;



கனம் ராஷ்ட்ரபதி இராஜேந்திர பிரசாத் அவர்களை ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் பொன்னாடை போர்த்தி வரவேற்றல்.

சென்னை தருமபுர ஆதீன மடாலய தேவாலய சமயப் பிரசார நிலைய இரண்டாவது ஆண்டுவிழாவில் :



சென்னை கவர்னர் ஸ்ரீ ஸ்ரீபிரகாசாவை ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் பொன்னாடை போர்த்தி வரவேற்றல்




வரவேற்பு

சென்னை தருமபுர ஆதீன மடாலய தேவாலய சமயப் பிரசார நிலைய ஆண்டுவிழாவில் :




தேவார வகுப்பில் தலைவர்கள்.

சென்னை, தருமபுர ஆதீன மடாலய தேவாலய சமயப்பிரசாரநிலை।
இரண்டாவது ஆண்டுவிழா :




விழாத் தொடக்கம். 14—11—55

சென்னை, தருமபுர ஆதீன மடாலய தேவாலய சமயப்பிரசாரநிலைய
இரண்டாவது ஆண்டுவிழா:




வரவேற்புப்பத்திரத்தை கனம், தலைவரவர்கள் பெற்றுக்கொள்ளுதல்.

சென்னை, தருமபுர ஆதீன மடாலய தேவாலய சமயப்பிரசாரநிலைய இரண்டாவது ஆண்டுவிழா:




ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் ஆசி அருளுரை.

சென்னை, தருமபுர ஆதீன மடாலய தேவாலய சமயப்பிரசாரநிலைய
இரண்டாவது ஆண்டுவிழா :




ஸ்ரீ சு. இராமஸ்வாமி நாயுடு அவர்கள் பேச்சு.

சென்னை தருமபுர ஆதீன மடாலய தேவாலய சமயப் பிரசார நிலைய
இரண்டாவது ஆண்டுவிழாவில் :



இந்திய ஜனாதிபதி

சென்னை, தருமபுர ஆதீன மடாலய தேவாலய சமயப்பிரசாரநிலைய
இரண்டாவது ஆண்டுவிழா :



கூட்டத்தின் ஒரு பகுதி (14—11—55)

தருமபுர ஆதீன மடாலய தேவாலய சமயப்பிரசார நிலேய

## இரண்டாவது ஆண்டு நிறைவுவிழா

தருமபுர ஆதீனம் இருபத்தைந்தாவது குருமகாசந்நிதானம்

### ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்கள்

# ஆசியுரை

14—11—55

நமது அன்பிற்குரிய ஜனதிபதி அவர்களே! கவர்னர் அவர்களே! பேரன்பர்களே! நாம் எதைச்செய்தாலும் முதலில் தெய்வவணக்கம் செய்தபிறகுதான் தொடங்குவது வழக்கம். கடவுள்துணைக்கொண்டு செய்யும் எந்தக் காரியமும் வெற்றி கரமாக மங்களகரமாக முடியுமென்று நம்புகிறோம். இந்த நினைப்பு ஒன்றே நம்மை உலகத்திலே ஒரு தன்னம்பிக்கை யோடு வாழச்செய்கிறது. நாம்உயரவேண்டுமானல் நம்ஆத்மிக சக்தி வளரவேண்டும். இந்த ஆத்மிக சக்தியைக் கொண்டு நாம் உலகம் வியக்கும் செயல்கள் பல செய்திருக்கிறோம். எதையும் நாமே செய்துவிட்டதாக நினைப்பதில்லை. எதைச் செய்தாலும் கடவுளின் உறுதுணைகொண்டு அவனருள் இருக்கச் செய்ததாக எண்ணுகிறோம்.இந்தக் கடவுள் நினைப்பு நல்ல நினைப்பாக நினைக்கவும் நல்லகாரியமாகச் செய்யவும் நம்மைத் தூண்டுகிறது. தீயகாரியங்களைச் செய்யவிடுவதில்லை. அதிலே ஒருபயம். ஆழ்ந்த அனுபவத்தின் முடிவில் நம் பெரியோர் நமக்குக் காட்டித்தந்த இந்த ஆத்மிக நெறி இன்று நேற்று ஏற்பட்டதல்ல. பல ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக வளர்ந்து வந்தவை.

முன்னே சொன்னபடி நம்நாட்டில் அரசியல், சமூகவியல், இந்தவிதமாக எந்த இயலை எடுத்தாலும் அது கடவுள் நெறியை ஒட்டியதாகவே இருந்து வந்திருக்கிறது வருகிறது எனலாம். நம்முடைய சமயத்துக்கு ஆக்கமளித்து வளர்த்தவர்கள் நம் நாட்டு மன்னர்களும் அமைச்சர்களும் என்பதை நம் சரித்திரம் நமக்கு எடுத்துச் சொல்கிறது. நம் தமிழ்நாட்டை ஆண்ட

அரசர்கள் இந்த ஆத்மிக நெறியின் நிலைக்களமாக மடங்களை யும் ஆலயங்களையும் வளர்த்து வந்தார்கள். அந்த அரசர்கள் தங்கள் அரண்மனையைப் பெரிதாகச் செய்தார்கள் இல்லை. இந்தச் செய்தியைப் பல கல்வெட்டுக்களாலும் சரித்திரச் செய்திகளாலும் நாம் அறியலாம்.

இதனால் வீர உணர்ச்சியில், நாட்டுப்பற்றில் மற்ற எந்த நிலையிலும் வேற்று நாட்டவருக்கு நாம் குறைந்தவர்களாக இருக்கவில்லை. சிறந்து விளங்கினோம். உலகத்தவர் கண்டு வியக்கும்படியும் வாழ்ந்தோம். இவை எல்லாம் பழங்கதை.

நாம் வாழும் இக்காலத்திலேயே நம்மிடையே தோன்றிய காந்தியடிகள் என்னசெய்தார்கள்? "வெள்ளையனே வெளியே போ" என்றார்கள். ஆங்கிலேயர் உலகத்தில் தலைசிறந்த சக்தி படைத்த பெரிய ஆட்சியை உடையவர்கள் அல்லவா? அவர்களைக்கண்டு காந்தியடிகள் அஞ்சினார்களா? இதற்காக அழிவுவழியிலே காரியங்கள் ஏதாவது செய்தார்களா? அல்லது அவர்களுடைய தோற்றத்திலே, உடையிலே, நடையிலே ஏதா வது மிடுக்கோ அல்லது உணர்ச்சிவேகமோ காட்டினார்களா? பார்க்கப் பரதேசி கோலம்! வாழ்க்கையிலே எளிமை. சொல்லி லும் செயலிலும் வீரம். மக்களை அழைத்து எல்லா மதங்களையும் சமரச மார்க்கங்களாக எல்லோரையும் நம்முடைய சகோதரர்க ளாகத்தானேகருதச்சொன்னார்கள்? பஜனையில்லாத பிரார்த்தனை யில்லாத கூட்டம் ஏதாவது உண்டா? தன் மார்பிலே குண்டு பட்டு உணர்விழக்கும் சமயத்திலும் இராம மந்திரத்தைத்தானே சொன்னார்கள்? அப்பொழுதும் வெறுப்புணர்ச்சி எழுந்ததா? இவ்விதமாக நன்னெறியிலே நம்நாடு வளர்ந்து வருகிறது. இதுவெறும் பகீர்கள் மலிந்த நாடு என்று மதியா திருந்த அன்னியர்கள் இதன் வளர்ச்சிகண்டு உள்ளத்தின் உயர்வுகண்டு இப்பொழுது அஞ்சுகிறார்கள். இங்கே என்ன இருக்கிறது. என்றுகாண ஆசைப்படுகிறார்கள். இவ்விதமாக நாம்பெற்ற சுதந்திரம் உலகத்துக்குஒரு தனிப் பாடபோதனை செய்கிறது.

சுதந்திரம் வந்தது. நாட்டை ஆள நமக்குநாமே சட்டம் வகுத்துக் கொண்டோம். அதிலே முக்கியமான கொள்கை, இந்த நாடு ஒரு மதச்சார்பற்ற நாடு; யார் எந்தச்சமயத்தை

வேண்டுமானாலும் சம்மதமாகக் கொள்ளலாம்; அவரவர் கொள்கையயை அவரவரும் பரப்பிக் கொள்ளலாம் என்பது. இதனால் அரசாங்கம் எந்தஒரு மதத்தின் சார்பிலேயும் நின்று வளர்க்க முடியாது. பொதுவாக மதச்சார்பில்லாத நாடு என்றதுமே மதநம்பிக்கையில்லாத்—மதத்தை வளர்ப்பதில் பங்கு பற்றாத நாடு என்று வியாக்கியானம் செய்துகொண்டு அரசியல் வாதிகள் மதவளர்ச்சியில் அக்கரை கொள்ள வேண்டியதில்லை என்று பேசிவருவதைக் காண்கிறோம். இதனால் ஆட்சியில் உள்ளவர்கள் எந்தச்சமயத்தையும்சேராது கடவுள்நம்பிக்கையே இல்லாதவர்களாக இருக்கவேண்டுமென்பதில்லை. இதற்கு உதாரண புருஷராகத் தாங்கள் விளங்குகிறீர்கள். தங்களுக்கு இந்துமதத்திலே, கடவுள் நெறியிலே ஆழ்ந்த பக்தி உண்டு. அந்த காந்தீயவழியிலே அசைக்கமுடியாத நம்பிக்கை உண்டு. ஆனால் இந்த நாட்டிலுள்ள எந்த சமயத்தவரும் புண்படாமல் சகோதரர்களாக வாழும்படி சமரச நோக்கத்தோடு தாங்கள் காரியங்களைச் செய்யவில்லையா! ஏன்? இன்று இந்தச் சமயப் பிரசார நிலையத்துக்குத் தாங்கள் விஜயம் செய்வதே இதனை வலியுறுத்துகிறதல்லவா.

இவ்விதமாக அரசாங்கம் ஏற்பட்டபிறகு, அந்தந்தச் சமயத்தைச் சேர்ந்த மடங்களுக்கும் தேவாலயங்களுக்கும் அதன தன் சமயக்கொள்கையை நல்வினையிலே வைத்துக் காக்கும் பொறுப்பு அதிகமாகிவிட்டது. முன்னையிலும் அதிகப்பொறுப்பு உணர்ச்சியோடு வேலைசெய்யவேண்டியதாக இருக்கிறது. இதனால்ஒருசமயத்தவரை ஒருசமயத்தவர் வெறுக்கும்படியாகச் செய்யவேண்டுமென்பதில்லை. அவரவரும் அவரவர் சமயக் கொள்கையை விட்டுவிடாது கடவுள் நம்பிக்கையிலிருந்து மக்கள் பிறழ்ந்துவிடாது நல்ல நிலையில் வாழ அவ்வப்போதும், ஏன் நிரந்தரமாக ஒரு கண்காணிப்பு நிலையமாக வேலைசெய்ய வேண்டியதாக இருக்கிறது. ஆங்கிலத்திலே, **Watch Dog!** என்று சொல்வார்கள். மேலும் நமது சென்னை ராஜ்யத்திலே இந்த மத ஸ்தாபனங்களில் பரிபாலன கண்காணிப்புக்கு ஒரு இலாகா இருந்து வேலை செய்து வருவதிலிருந்து நம் நாட்டிலுள்ள சமய ஸ்தாபனங்கள் நல்லநிலையில் இருக்கவேண்டுமென்பதில் அரசாங்கத்துக்கும் பங்கிருக்கிறது. அதில் உள்ளவர்கள் மதவளர்ச்சியில் அக்கரையில்லாதவர்கள் என்பதில்லை என்பதை எடுத்துக் காட்டுகிறதல்லவா? அந்தந்த மதத்தையும்

அவரவரும் காத்துவரும் பணியில் நம் மதஸ்தாபனங்களும் பின்தங்கியதில்லை என்றிருக்கவேண்டும் என்பது ஒன்றுதான் நம்முடைய அவா.

இவ்விதமாக இந்த நிலயத்திலே தங்களை வரவேற்று உபசரிக்கும் வாய்ப்புக் கிடைத்ததற்குப் பெருமகிழ்வு கொள்கிறோம். இந்தச்சமயத்திலே நமதுராஜ்ய கவர்னரவர்களைப்பற்றிக் குறிப்பிடாமல் இருப்பதற்கில்லை. நல்ல சமயத்தில் நல்லவர் ஒருவர் எங்களுக்கு வாய்த்திருப்பது இந்தராஜ்யம்செய்த பாக்கியமே. நல்ல மதநம்பிக்கையும் நல்ல நினைப்பும் ஆட்சியிலே வல்லமையும் அதேசமயத்தில் அடக்கமும் தெய்வ பக்தியும் உடையவர்களாக வந்து எங்களைத் தம்மவராகவே மதித்துப் பழகி வருகிறார்கள்.

தங்களுக்கு எல்லாம் வல்ல சொக்கலிங்கப் பெருமான் நல்லன வெல்லாம் தந்து நல்ல திடகாத்திரத்துடன் நல்வாழ்வு வாழ அருளவேண்டுமென்று பிரார்த்திக்கிறோம். இன்று இங்கு எங்கள் அழைப்பிற்கு இணங்க வந்திருக்கும் அன்பர்களுக்கும் இறைவன் அருள் உறுதுணை நிற்பதாக.

வாழ்க! உலகெலாம்.

---

## திருவருளுரைப்பு

என் குடியே கெட்டுப்போவதாயினும் இந்திரபதவி, பிர்மபதவி, விஷ்ணுபதவிகளைப் பொருளாக்கொள்ள விரும்பேன். நரகத்திற்புகுந்தாலும் சிவனடியாரொடுதான் சேர்வேன். திருவருளிசைவாயின் நரகத்தையும் பேரின்ப வீடாகக்கொண்டு இன்புறுவேன். இகழ்ந்து துன்புறுவேனல்லேன். சிவபிரானை அல்லாமல் பிற தெய்வங்களை நினைத்தல் செய்யேன். எங்கள் முழுமுதற்பொருள் சிவபெருமானே இவ்வாறு படர்க்கையில் மாற்றி உணர்க.

"கொள்ளேன் புரந்தரன் மால்அயன் வாழ்வு குடிகெடினும்
நள்ளேன் நினதுஅடி யாரொடு அல்லல் நரகம் புகினும்
எள்ளேன் திருவரு ளாலே இருக்கப் பெறின் இறைவா
உள்ளேன் பிறதெய்வம் உன்னை அல்லாது எங்கள் உத்தமனே."

(திருவாசகம். 6.)

மதுரைத்

திருப்பாசுரக் கல்வெட்டுத் திறப்பு விழாவில்

தருமபுர ஆதீனம் இருபத்தைந்தாவது குருமகாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த

பரமாசாரிய சுவாமிகள் அவர்கள்

# ஆசியுரை

அன்பர்களே!

இன்று கார்த்திகைமாத முதற் சோமவாரநாள். சோம வாரம் சொக்கலிங்கப் பெருமானுக்கு உகந்த திருநாள். இப்பெருநாளில் திருப்பாசுரக் கல்வெட்டும், சொக்கநாத வெண்பாக் கல்வெட்டும் திறக்கப்பெற்றன. ஆலவாயரன் முன்னிற்க அவ்வப்போது நல்லன நடைபெறுகின்றன. 1300 ஆண்டுகட்கு முன்னர், சோழவளநாட்டில் சீகாழிப்பதியில் தோன்றினார் திருஞானசம்பந்தர். சிவம் பெருக்கினார். திருநீற் றெருளியின் மேன்மையை மேதினிக்கு விளம்பினார். அந்தக் காலத்தில் பாண்டியநாடு அமண் இருளால் அல்லலுற்றது. வளவர்கோன் பாவையாம் மங்கையர்க்கரசியார் வேண்டு கோட்படி திருஞானசம்பந்தர் மதுரை சேர்ந்தார். அமணர்கள் தீய கனவு கண்டனர். திருஞானசம்பந்தர் தங்கியிருந்த திரு மடத்திற்குத் தீயிட்டனர். அரசனும் அமண்வழிச் சார்ந்தவ னல்லவா? அத்தீ வெப்புநோயாகப் பையவே சென்று பாண்டி யனைப் பற்றியது. அமணர்களால் அந்நோய் நீங்கவில்லை. திருநீற்றின் பெருமையால் திருஞானசம்பந்தர் அந்நோயை அகற்றினார். "ஞாலம் நின்புகழேமிக வேண்டும்தென் ஆல வாயில் உறையும்எம் ஆதியே" என ஆலவாயண்ணலைப் பரவி அமணர்களை வென்றார். அனல் வாதம் செய்தனர். அதிலும் வெற்றி கண்டனர். புனல் வாதத்திற்கு அழைத்தனர். ஞானசம்பந்தர் 'வாழ்க அந்தணர்' என்று தொடங்கும் இத் திருப்பாசுரப் பதிகத்தை ஏட்டில் எழுதி வைகையாற்றிலே யிட்டார். மாதவர் மனம் உலகபாசத்தில் உழலாமல் எதிர்த் துச்செல்வதுபோல் ஏடு வைகைநீரை எதிர்த்துச்சென்றது. அரசனும் சைவனானான். அவனது கூனும் நிமிர்ந்தது. நெடுமாற னாயினான். பாண்டியநாடு சைவம் திகழும் திருநாடாயிற்று.

இத்திருப்பாசுரப் பதிகம் இத்திருக்கோயிலில் கல்வெட்டாக இலங்குமானால் மதம் மாறும் மனமுடையார்க்கு ஓர்படிப் பிணையாகுமல்லவா? எல்லாம் அரன் நாமமே சூழ்க என்பது முதற்பாட்டின் முடிபல்லவா? ஆகவே அத்திருப்பாசுரக் கல்வெட்டு நமது ஆத்மார்த்த மூர்த்தியாகிய ஸ்ரீ சொக்கலிங்கப் பெருமான் திருக்கோயிலில் நல்லன நாட்டில் பரவ வழியாமென அமைத்துள்ளோம்.

மேலும், நமது ஆதீன குருமுதல்வர் கண்ணுக்கினிய பொருளை - சொக்கேசரைப் பொற்றாமரையின் ஈசானபாகத்தில் கைவரப்பெற்று, தீக்ஷாகிரமத்தில் பூசித்துப் பேறுபெற்றார். அவர்களது அநுபவம் சொக்கநாத வெண்பாவாகவும் மலர்ந்தது. அப்பாடல்களிலும் சில கல்வெட்டில் இடம் பெற்றுள்ளன. நம்மிடையே உள்ள சிறப்பைத் தெரிந்து கொள்ளாமல், மக்கள் வறுமையாலும் அறியாமையாலும் மதம் மாறத் தலைப்படுகின்றனர். அது தவறான வழியாகும். எல்லாத் தமிழ் மக்களும் தமது பண்பாட்டையும் பண்பாட்டை உணர்த்தும் இலக்கணங்களையும் தெரிந்தே பிற மதம் காண முயலுதல் வேண்டும். அப்படிக்காணப் புகுவார் எந்தக் கருத்துக்களையும் நமது திருமுறைகளிலேயே காணலாம். திருமுறைகளில் இல்லாத ஒன்றனை வேறு எவரும் இன்றுவரை அறிவிக்கவில்லை. திருமுறைகளில் இலக்கியநயம் காணலாம். பொருள்நிலை காணலாம். அருள்நலம் காணலாம். கடவுள்நெறி நிற்கக் கற்றுக்கொடுக்கும்கதி காணலாம். அன்பின்திறம் காணலாம். அமைதிவழி காணலாம். பரம்பொருளைக் காண்பதற்கு மூலமாக விளங்குவது திருமுறையே.

இத்திருமுறை மக்கள் உள்ளத்தில் மலரவேண்டும். மலருங்காலம் வந்துவிட்டது. எல்லோரும் படித்து அதன்வழி நிற்க முற்படுவார்களாக. ஸ்ரீ சொக்கலிங்கப்பெருமான் திருவருள் என்றும் நின்று துணைசெய்வதாக. வாழ்க திருமுறை. வளர்க சிவநெறி.

ஆலந் தரித்த லிங்கம் ஆலவாய்ச் சொக்கலிங்கம்
மூலமாய் எங்கும் முளைத்தலிங்கம்—பாலொளியாம்
*மத்தனே கூடல் மதுரா புரிஉமையாள்
அத்தனே ஆலவா யா. —சொக்கநாத வெண்பா.

---

*மத்தன் - மத்தகன் என்பதன் குறை. சென்னியன் நெற்றியன் எனப் பொருள்படும். அத்தனே என்று பிரித்தல் பொருந்தாது.

# எதிர்காலம்

ஜோதிஷார்ணவம்

பிர்மஸ்ரீ முத்துஜோதிடர் அவர்கள், திருவிடைமருதூர்.

(மன்மதஞு மார்கழிமீ 1௳ முதல் 29௳ முடிய
16-12-55 முதல் 13-1-56 முடிய)

**1. மேஷம்** அசுவதி, பரணி, கார்த்திகை ¼.

அசுவதி நான்கு பாதங்கள் பரணி 1, 2, 4 பாதங்கள் சுப பலனைத்தரும். வியவஸாயிகள் லாபமடைவார்கள். வியாபாரிகள் லாபமடைவார்கள். உத்தியோகஸ்தர்கள் பிரமோஷன் அடைவார்கள். சுகஜீவிகள் கவலை இல்லாமல் சுகஜீவனம் செய்வார்கள். தெய்வபலமும் சுப ஸந்தோஷமும் ஏற்படும். பரணி 3 பாதமும் கார்த்திகை முதல் பாதமும் அசுபத்தைத் தரும். திகங்கள், புதன் சுபமாகும்.

**2. விருஷபம்** கார்த்திகை ¾ ரோஹிணி, மிருகசீரிஷம் ½

கார்த்திகை 2, 3, 4 ம் மிருகசீரிஷம் முதல் பாதமும் வெற்றியைத் தரும். வியாபாரம் ஓங்கும். ஆரோக்கியமுண்டாகும். ரோஹிணி நாலு பாதங்களும் மிருகசீரிஷம் இரண்டாம் பாதமும் வியாதியைத்தரும். கடன் விருத்தியாகும். சதா கவலை காட்டும். புதன் சனி சுபவாரமாகும்.

**3. மிதுனம்** மிருகசீரிஷம் ½ திருவாதிரை, புனர்பூசம் ¾

மிருகசீரிஷம் 3, 4 பாதங்கள் உத்தியோக லாபம் கீர்த்தி பத்திரம் கிடைத்தல் வியவஹாரவெற்றி வியாதி சாந்தி இவைகளைத்தரும். திருவாதிரை நான்கு பாதங்களும் ரோகத்தையும் சோகத்தையும் மிகுந்த கவலையையும்தரும். புனர்பூசம் 1, 2, 3 பாதங்களும் தீராத வியாதி பயத்தையும் எதிர்பாரத ஆபத்துக்களையும் சத்துரு விருத்தியையும் நஷ்டத்தையும் குடும்ப கஷ்டங்களையும் தரும். சனி, புதன் சுபவாரமாகும்.

**4. கடகம்** புனர்பூசம் ¼ பூசம், ஆயில்யம்.

புனர்பூசம் 4 பாதமும் ஆயில்யம் 4 பாதங்களும் ஜயத்தைத்தரும். சத்துருக்கள் அபஜயமடைவார்கள். தெய்வபலம் ஓங்கும். பூசம் நான்கு பாதங்களும் கஷ்டத்தை விசேஷமாய்க்

கொடுத்து நாஸ்தீகத்தை விருத்திசெய்து எங்கும் அபவாதத்தையும் தீராத ரோகத்தையும் பெருத்த விரோதங்களைத் தந்து சதா துன்பத்துக்குள்ளாக்கும். சனி செவ்வாய் சுபவாரமாகும். ஸிம்மராசி சம்பந்தப்பட்ட ஒன்பது பாதங்களும் பிரயாசையின் பேரில் நல்லபலனைத்தரும். இடம்மாற்றல் ஏற்படும். பெரியோர் மேலோர் அன்பு கிட்டும். லாபநஷ்டங்கள் ஸமமாகும். ஆரோக்கியமுண்டாகும். கீர்த்தி பத்திரம் கிடைக்கும். புதன், வெள்ளி சுபவாரமாகும்.

**5. சிம்மம் மகம், பூரம், உத்திரம் ¼.**

ஸிம்மராசி சம்பந்தப்பட்ட ஒன்பது பாதங்களும் பிரயாஸையின்பேரில் நல்ல பலனைத்தரும். இடம்மாறல் ஏற்படும். பெரியோர்மேலோர் அன்புகிட்டும். லாபநஷ்டங்கள் சமமாகும். ஆரோக்கியமுண்டாகும். கீர்த்திபத்திரம் கிடைக்கும். புதன், வெள்ளி சுபவாரமாகும்.

**6. கன்னி உத்திரம் ¾ ஹஸ்தம், சித்திரை ½.**

உத்திரம் 2, 3, 4 பாதங்கள் உத்யோக லாபத்தையும் பெரியோர் அன்பையும் அளிக்கும். மனம் மாத்திரம் ஸ்திரமில்லாமல் ஸதா சலனமடையும். ஹஸ்தம் முதல் பாதமும் 4 ம் பாதமும் அதிக விரயத்தையும் குடும்பத் தொல்லைகளையும் வீண் மனஸ்தாபங்களையும் உண்டுபண்ணும். ஹஸ்தம் 2, 3 பாதங்களும் சித்திரை 1, 2 பாதங்களும் சுப ஸந்தோஷங்களையும் உத்தியோக லாபத்தையும் வியவஹார வெற்றியையும் தரும். புதன், வெள்ளி சுபவாரமாகும்.

**7. துலாம் சித்திரை ½, சுவாதி, விசாகம் ¾**

சித்திரை 3, 4 பாதமும் சுவாதி நான்கு பாதங்களும் தொழில் மேன்மை வியவஸாயலாபம் உத்தியோகலாபம் பிரமோஷனுடன் இடம்மாறல் தூரயாத்திரை நூதன பிரபு ஸன்மானம் கிடைத்தல் எங்கும் நிறைந்த கீர்த்தி தெய்வபலம் கிட்டுதல் முதலிய சுபங்களைத்தரும். விசாகம் 1, 2, 3 பாதங்களும் நினைத்தற்கு மாறுகவே ஸகலமும் நடக்கும். துன்பமான பலனே மேன்மேலும் விருத்தியடையும். தொழில் நஷ்டம் விசேஷமாய் ஏற்பட்டு லோகாபவாதம் உண்டாகும். சனி, வியாழன் சுபவாரமாகும்.

8. விருச்சிகம் விசாகம் $\frac{1}{4}$, அனுஷம், கேட்டை.

விருச்சிகராசி சம்பந்தப்பட்ட 9 பாதங்களும் மங்களத்தைச் செய்யும். வம்சவிருத்திகள் ஆகும். குடும்பம் ஓங்கும். தொழில் ஓங்கும். பெரியோர் அன்புகிட்டும். தெய்வபலம் பிரகாசிக்கும். திங்கள், புதன் சுபவாரமாகும்.

9. தனுசு மூலம், பூராடம், உத்திராடம் $\frac{1}{4}$.

மூலம் நான்குபாதங்களும் சுபமிராது. ஸதா கவலையை பலவிதத்திலும் உண்டுபண்ணும். பூராடம் நான்கு பாதங்களும் உழைப்பின்பேரில் பலன்தரும். எதிர்பாராதபடி உத்தியோக லாபம் பிரமோஷனுடன் ஏற்படும். வியவஸாய லாபம் கிட்டும். நினைத்தகாரியம் ஜயிக்கும். உத்திராடம் முதல்பாதம் ரோக சாந்தியைத்தந்து இல்லற சுகத்தைத் தரும். கிரஹபூமி லாபங்கள் ஏற்படும். தொழில் ஓங்கும். புதன், வியாழன் சுபவாரமாகும்.

10. மகரம் உத்திராடம் $\frac{3}{4}$, திருவோணம், அவிட்டம் $\frac{1}{2}$.

உத்திராடம் 2, 3, 4 பாதங்களும் அவிட்டம் 1,2 பாதமும் அதிக உழைப்பின் பேரில் உலகில் விசேஷ நன்மதிப்பு ஏற்படச்செய்யும். உத்தியோகத்தில் கீர்த்திபத்திரம் கிடைக்கச் செய்யும். அடிக்கடி சஞ்சாரபலன் ஏற்படும். தெய்வபலம் பிரகாசிக்கும். திருவோணம் 4 பாதங்களும் அஸாத்தியமெல்லாம் ஸாதிக்கச்செய்யும். ஸபா பூஜ்யத்துவமும் ஸ்திர ஜீவனமும் நன்மதிப்பும் பெரியோர் அன்பும் கிட்டும். ஸதா தெய்வசிந்தனை வாய்க்கும். புதன், வெள்ளி சுபம்தரும்.


11. கும்பம் அவிட்டம் $\frac{1}{2}$, சதயம், பூரட்டாதி $\frac{3}{4}$.

கும்பராசி 9 பாதங்களும் சுபமாகவே நடக்கும். அடிக்கடி தூரதேசத்திலிருந்து சுபசமாசாரம் வரும். பந்துமித்திராளுடைய சேர்க்கை உண்டாகும். இல்லறசுகம் விசேஷமாகும். தொழில் மூலம் லாபந்தரும். ஆரோக்கியமுண்டாகும். மனம் ஸந்தோஷமாகவே இருக்கும். சனி, புதன் சுபவாரமாகும்.

12. மீனம் பூரட்டாதி $\frac{1}{4}$, உத்திரட்டாதி, ரேவதி.

பூரட்டாதி 4 ம் பாதமும் ரேவதி முதல்பாதமும் சுபமிராது. கவலை காட்டும். உத்திரட்டாதி 4 பாதங்களும் ரேவதி 2, 3, 4 பாதங்களும் நன்மைதரும். வெகுநாளாக அனுபவித்த கஷ்டங்கள் நீங்கும். தொழில் ஓங்கும். நன்மதிப்பு ஏற்படும். குடும்பம் தழைக்கும். ஸந்தோஷமுண்டாகும். புதன், வெள்ளி சுபவாரமாகும்.

குறிப்பு:- ஷை மார்கழி மாதத்தில் தொத்துநோய்கள் ஏற்படும். வடமேற்கு மாகாணத்தில் கலகம் அதிகமாகி யுத்தஸந்நத்தம் செய்வார்கள். தென்தேசத்தில் பயிர்களுக்கும் விளைந்த தான்யங்களுக்கும் பூச்சிகளால் துன்பம் ஏற்படும். மகாஜனங்கள் நாஸ்திகமில்லாமல் அவரவர்கள் மதாசாரப்படி நடந்துகொண்டால் உலகம் செழித்து சுபிக்ஷம் ஏற்படும். சுபம்.



## Sri Amirthagateswaraswamy Devasthanam

### Copy of the Visitors' Book,

I had the good fortune to have dharsan at this holy shirne to day with my family. A very large of pilgrims had gathered for the Krithigai Somavaram Sanga Abishekam festival today. I was delighted to find that the management spared no pains to arrange for convenient dharsan for all. The institution has every appearance of being well maintained not only with 'secular care' but with true bhakthi

(Sd.) S. Venkateswaran.
21—11—1955.

## Dharmapuram Adhinam
## Matalaya Devalaya Religious Propaganda Centre
## Velur Devasthana Iraipani Mantram
## Second Anniversary

(Speech Sri S. Ramaswamy Naidu Former Mayor of Madras)

14—11—55

On behalf of His Holiness Sri la Sri Subramania Desika Gnanasambandha Paramacharya Swamigal and of the Samaya Prachara Nilayam of the Dharmapuram Adhinam, I deem it my greatest fortune to welcome you, Sir, the President of India, and the distinguished audience to our Second Anniversary.

As the Head of our Republic, as an embodiment of culture, and character, and as a life-long friend of the Father of the Nation, you, Sir, can bless and guide our activities with appropriate authority. We shall ever remember, with grateful joy, your kindness in participating in this function.

The Dharmapuram Adhinam was founded over 400 years ago by St. Gurugnanasambandhar, who was a staunch advocate of Saiva Siddhanta Philosophy. The Math has been continuously serving the cause of learning and piety by running temples, where worship is conducted according to the Agamas and Saiva Siddhanta Philosophy. Their editions and publications of Tamil Classics, their patronage of Tamil and Sanskrit studies have contributed not a little to the growth of learning.

They have evinced great interest in Harijan welfare, besides putting up a building for Maternity Hospital, running Hindu Orphanage and rendering such other social and medical help.

Their main activity was religious teaching, and this was during the past centuries confined to the country-side in and around Tanjore District. But recently, there was a strong feeling that a Centre for Religious Propaganda would be most useful in the City of Madras. Hence this Nilayam was started in 1953 and was inaugurated by our beloved Rajaji.

Since then it has been doing a variety of services to this neighbourhood with the active cooperation of the good people of Thiagarayanagar. The Tamil Hymns are not only sung in the traditional style, but the art also is being systematically taught to youngsters. Weekly meetings and frequent special celebrations draw interested audience to the study and appreciation of the principles and artistic achievements of Saivam. But, discourses on Sankara and other Saints and Philosophers are also frequently arranged and are equally popular. In fact, the religion that is propagated here is far from sectarian and appeals to all Asthikas. Broad-minded catholicity in the approach to the spirit has been traditional in this ancient land of ours and Saiva Siddhanta which holds that all creatures are bound by love to the one Lord is no exception.

Once again, I have great pleasure in welcoming you, Sir, to this Nilayam and in requesting you to give your words of advice.

Speech

# Dr. Sri Rajendra Prasad

(President of India.)

14—11—55

I consider it a great fortune for me to be present this evening with you all and to participate in the Bhajan which has just been sung here and in the room adjoining. In India, we are passing through a stage of transition. All old values and old ideas are more or less in the melting pot and new things and new ideas and new conceptions are also equally in the melting pot. We have to make our choice whether we shall stick to our old ways, as far as possible, of course adapting them and adjusting them to modern conditions or we shall give up what is ours and adopt what is not ours and thus go into wilderness for ages That is the choice before us. And to every thinking person, it should not be a difficult choice to make and, to vote in favour of preserving the best that we have, and adopting the best that we can get from others. There is a line in Tulasidos which says "Do not accept anything and do not give up anything without clearly understanding it and examining it"; that is exactly what we have to do at the present moment.

Very often our approach to many questions is to dub them as unscientific. Many of our ideas are simply cast aside, because they are considered by some people to be unscientific. I do not know, if there is anything more unscientific than to accept or reject a thing without examining it. And we are at the present moment more or less in a mood to reject many things without understanding them, without caring to study them, and to accept other things in their place without at the same time examining or understanding them. That I consider to be a stage of transition

and here it is that institutions like the one, in the activities of which we are taking part this evening, can help us in making our choice.

Our forefathers were wise in establishing such institutions and in placing in their hands, facilities and resources, with the help of which they could not only keep up our traditional knowledge and our traditional culture, but also in course of time go on adapting them according to experiences freshly gained. And if there is any society in the world, it is the Indian society which through ages and centuries has been able to adapt itself to changing conditions, without giving up its fundamental position. And that is why after so many thousands of years, we still exist, whereas many other, nations and civilisations which had their time are no longer in existence and some knowledge about them can be gathered and gleaned from only books and other records available to-day. This is a great heritage which we in India have and we would be foolish to throw away that heritage, at any rate, without examining it fully. I have, therefore, pleaded more than once that there is a great deal in our culture, in our religion and in our mode of life which requires to be studied and to be preserved and propagated also.

To-day we are, of course, carried away by a current and we are trying to adapt this physically, bringing them from other countries and establishing them in our midst. We are not able to see that many of those things which look so noble and splendid, have not lasted long enough, have not been tested by time, have not had the opportunity of being buffetted by the world during long periods and surviving those buffets. In our country, we have things which have stood the test of time and the test of experience, and which have still maintained us. Why should we give them up? Why should we not try to understand them and adapt them to modern conditions or rather adapt modern conditions to

our own ideas as far as possible. I cannot believe that it is not possible, because in the past we have successfully done that, times without number. Whereas in politics and administration we have suffered, we have been defeated, we have had our misfortunes, and after every fall, we have been able to rise; and that shows that there is life, which does not give way only to misfortune, but which can stand the misfortunes, and which can defy such misfortunes. I would therefore humbly suggest to all well wishers of the country to give a thought to those spiritual values which have been at the basis of our life and culture through centuries and ages, (hear, hear) and in so doing, we shall be doing only what is the minimum that can be expected of us not only by ourselves but also by the world.

-

At best, we can only be successful imitators of the West. We cannot have anything original to contribute to what they in the West possessed and what they invented. But we have something which is absolutely original so far as they are concerned; and I am quite sure in my mind that the world needs what we have got and what the rest of the world has not got at present. It is that which we have to preserve and develop and present in a form which would be easily intelligible to the modern world and which the modern world can understand and accept. This is a great responsibility which is devolved on us after independence.

Undoubtedly it is correct to say that you cannot have big and high ideas with an empty stomach. So we are doing our best to fill our stomachs. But what I say is, that we should not be content with filling our stomachs and starving our mind and spirit. We should also try to fill the mind with noble thoughts and develop that kind of spiritual and moral force which has enabled us even in our difficulties to reach the stage which we have so far reached. It is really astonishing how soon after Gandhiji's death we have forgotten

so many of the things, which appeared to us to be absolutely clear and open and almost self-evident while he was living. It is really astonishing how those things, which appeared to us to be self-evident, now appear to us to require proof and even appear to be wrong in many matters. What was the fundamental thing which Gandhiji said. Of course, he often spoke about the improvement of the economic condition of the people, about the removal of hunger and disease. All these he has not ignored or was indifferent. In fact, he did his best to remove these, but at the same time, he built the whole thing upon the solid foundation of the spirit and morals. This foundation we are not able to see to-day, but if we build upon it we shall be able to build greatly and strongly in future.

Therefore, when I was asked to come to this institution this evening I accepted the invitation with pleasure, because, I felt that I would be able to draw some inspiration from institutions like this and that inspiration is needed by all of us, more so by men like me, who can, I believe influence others also to some extent by what he learnt from such institutions. I am therefore here to thank the Swamiji and the organisers of this institution. I hope with their blessings and with their prayers, great work which lies ahead of the country will be carried out to a successful fruition. (cheers)

# செய்திகள்

## திருக்கடவூரில் :

### ஜன்ம நக்ஷத்திரவிழா

தருமபுர ஆதீனத்துக்குச்சொந்தமான திருக்கடவூர் ஸ்ரீ அமுத கடேசுவர சுவாமி தேவஸ்தானத்தில் 11—11—55 ஆம் நாள் வெள்ளிக் கிழமையன்று தருமபுர ஆதீனம் 25-ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்களது ஜன்ம நக்ஷத்திர விழா மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பெற்றது. ஜன்ம நக்ஷத்திர விழாவை முன்னிட்டு ஸ்ரீ அமுதகடேசுர சுவாமிக்கும், ஸ்ரீ அபிராமி அம்பாளுக்கும், ஸ்ரீ காலசம்ஹார மூர்த்திக்கும் விசேஷ அபிஷேகம், அலங்காரம், ஆராதனைகள் நடைபெற்றன. இவ்விழாவை முன்னிட்டுக் கீழ்க்கண்ட அறிஞர்கள் சொற்பொழிவுகள் நிகழ்த்தினர்கள்.

திருநள்ளாறு தேவஸ்தானம், கட்டளைவிசாரணை, வித்துவான் ஸ்ரீமத். இராமலிங்கத்தம்பிரான் சுவாமிகள் 'அருட்பெருகு தனிக் கடல்'; சீகாழி தேவஸ்தானம் கட்டளைவிசாரணை ஸ்ரீமத் மாணிக்கவாசகத் தம்பிரான் சுவாமிகள் 'அன்பு செறிகடல்'; மாயூரம் குமரக்கட்டளை தேவஸ்தானம் கட்டளைவிசாரணை ஸ்ரீமத் மகாலிங்கத் தம்பிரான் சுவாமிகள் 'வன்பெருந் தொண்டர்'; திருக்கடவூர் தேவஸ்தானம், கட்டளை விசாரணை ஸ்ரீமத் முத்துக்குமாரசாமித் தம்பிரான் சுவாமிகள் 'பரமானந்தப் பயன்'; தருமபுர ஆதீனம் ஸ்ரீ சட்டைநாதக்குட்டி 'எங்கள் பாக்கியப் பயன்'; தருமபுர ஆதீனப் பல்கலைக்கல்லூரி பிரின்ஸ்பால் திரு. கி. இராமலிங்கம் எம். ஏ., 'மாளிகைத் தேவரும் வண்புருடோத்மரும்' தருமபுர ஆதீனப் பல்கலைக்கல்லூரி வைஸ்பிரின்பால், புலவர், திரு. முத்து. சு. மாணிக்கவாசக முதலியார் 'திருவார் சேந்தரும் கருவூர்த் தேவரும்'; வித்துவான் திரு. சொ. சிங்காரவேலன் 'பெருவேணாட்டிகளும் திருவாலியமுதரும்'; தருமபுர ஆதீனம் ஓரியண்டல் உயர்நிலைப்பள்ளித் தமிழாசிரியர்கள், வித்துவான், திரு. ச. சபேசன் 'சிவபோகசாரம்' வித்துவான், திரு. ம. சிவசம்பு 'குருவே சிவம்'; தருமபுர ஆதீனத் தேவாரபாடசாலை ஆசிரியர், திரு ரா. வேலாயுத ஓதுவார் 'திருமுறைகள் ஓதாய்' என்பன பற்றிச் சொற்பொழிவுகள் நிகழ்த்தினர்கள்.

## குன்றக்குடியில்

இங்நகர் இளைஞர் அருள்நெறி மன்றத்தின் சார்பில் 11—11—55 அன்று மாலை டாக்டர் திரு. சி. எஸ். மணியம் தலைமையில் ஸ்ரீ தெய்வ சிகாமணி அருள்நெறி ஆரம்பப்பாடசாலையில் தருமபுர ஆதீனகர்த்தர்

அவர்களின் ஜென்ம நக்ஷத்திர விழாக் கொண்டாடப்பெற்றது. திரு. ச. முனீஸ்வரன் வரவேற்றுப் பேசிய பின்னர் தலைவர் தமதுரையில் குறிப்பிட்டதாவது. 'சமய உலகில் மறுமலர்ச்சியைக் கண்டு மக்களிடத்தில் அருள் நெறியை வளர்த்துவரும் தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்களைத் தந்தது தருமை ஆதீனம் தான். அவ்வளவு சிறப்பு வாய்ந்த ஆதீனத்தில் அருளாட்சி செய்துவரும் திருப்பெருந்திரு சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்தப் பரமாசாரிய சுவாமிகளின் ஜன்மநக்ஷத்திர விழா இன்று நாடெங்கும் சிறப்பாகக் கொண்டாடப்பெறுகின்றது. அவர்கள் நீடூழிகாலம் வாழ்ந்து நாட்டிற்கும், சமய உலகிற்கும் நல்லன செய்ய வேண்டுமென இறைவனைப் பிரார்த்திப்போமாக. தருமை தந்த செல்வமாக விளங்கும் தவத்திரு அடிகளார் அவர்களின் அருள்நெறி வழியைப் பின்பற்றி நல்லன செய்வது நமது கடமையாகும்'' என்று பேசிய பின்னர் கவிஞர் திரு. கா. சி. திருவாழ்மார்பன், தருமை மகா சந்நிதானம் அவர்கள் நிறைந்த அருட்செல்வத்துடன் நீடூழிகாலம் வாழவும் அவர்களுடைய அருளாட்சி அவர்களுடைய சைவத்தொண்டு வளரவும் எல்லாம் வல்ல இறைவனை இக்கூட்டம் பிரார்த்திக்கின்றது'' என்ற இத்தீர்மானம் ஏகமனதாக நிறைவேறியது.

திருக்கடவூரில் கார்த்திகையில் ஒவ்வொரு சோமவாரத்திலும் 1008 சங்காபிஷேகம் மிகச் சிறந்த முறையில் நடைபெற்று வருகிறது. 5—12—52 அன்று மாலை 4-மணிக்குக் கீழ்க்கண்ட சொற்பொழிவுகள் நிகழ்த்தப்பெற்றன. தருமபுர ஆதீன சமயத்தொண்டர் திரு. கோ. சிவஞானம் அவர்கள் சோமவார விரதச்சிறப்பு. தருமபுர ஆதீனப்புலவர், சித்தாந்த ரத்நாகரம், மதுரகவி, திரு. முத்து சு. மாணிக்கவாசக முதலியார் அவர்கள் அபிடேகச்சிறப்பு. திருப்பனந்தாள் செந்தமிழ்க்கல்லூரி பிரின்ஸ்பால் திரு. கே. எம். வேங்கடராமையா எம். ஏ. பி. ஓ. எல்., அவர்கள் 'தொண்டுசெய்'. தருமை ஆதீனப் பல்கலைக்கல்லூரி நான்காம் ஆண்டு மாணவர்கள் திரு. வை கல்யாண சுந்தரம் 'நெஞ்சுறு பணி'. திரு. சா. ஞானப்பிரகாசம், 'அபிராமி அருள்' திரு. என். முத்தையன் (இரண்டாம் யாண்டு) 'கலைக்கோயில்' திரு. இராமமூர்த்தி (தேவாரபாடசாலை மாணவர்) 'திண்ணனுர் பெருமை'. என்னும் பொருள் பற்றிப் பேசினுர்கள். ஸ்ரீமத் முத்துக்குமாரசாமித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் (திருக்கடவூர் கட்டளை விசாரணை) தொடக்கவுரையையும், நிறைவுரையையும் சிறந்த முறையில் ஆற்றினுர்கள்.

---

# திருக்கேதார யாத்திரை

[முன் தொடர்ச்சி]

## உலகம் போதும்:

சிறிது நேரம் அங்குள்ள சாதுக்களோடு அளவளாவினேம். நல்ல பல விஷயங்களைப்பற்றியும் பேசினேம். அந்த ஊரைப் பற்றிப் பேச்சுத் தொடங்கியது. பெரியார் சொன்னர். 'ஹரத்துவாரம் மாயாபுரி; ரிஷிகேசம் மாயாகுண்டம் கீர்த்திநகர்; செல்லும் உந்தூர்திக்கு 'ஜகத் பஸ்' என்று பெயர். மாயாபுரி நம்முடைய உலகபந்தங்கள் தொடுமிடம் மாயாகுண்டத்திலே அவைகளை மாய்த்து உலகபந்தங்களினின்று விடுதலை பெற்றுக்கொண்டு 'உலகம் போதும்' (ஜெகத்+பஸ்; ஜெகத்=உலகம், பஸ்=போதும். இது இந்தி) என்ற நிலையிலே தவச்சாலையாகிய தெய்வ மலையிலே மேலே மேலே போகிறேம். கடவுட் காட்சியைக் காண்கிறேம்' என்ற கற்பனை நயம் செறியப் பேசினர். இவ்வாறு இனிமையாக அன்றைப்பொழுது கழிந்தது.

## அரனெனத் தொழுமே:

அன்று மாலையில் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களும் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமிகள் அவர்களும் எல்லோரும் உடன்வரக் கங்கைக் கரைக்கு எழுந்தருளினர்கள். தொலைவிலே சிவானந்த ஆசிரமம் கண்ணுக்குப் புலப்பட்டது. பல தவச்சாலைகளும் காணப்பெற்றன. சாதுக்கள் பலரும் கங்கையில் நீராடிப் புனிதமடைந்து அவரவர் ஆசிரமங்களுக்குத் திரும்பிக் கொண்டிருந்தார்கள். சூரியன் மலைவாயிலில் விழும்நேரம். சுற்றிலுமுள்ள ஆசிரமங்களிலிருந்தும் வழிபாட்டொலிகளும் பஜனைப் பாடல்களின் இன்னிசையும் காற்றிலே பக்தி வெள்ளத்தை வாரி வழங்கின. பேச்சுக்கள் சிவஞானபோத சூத்திரத்தை நாடிவந்தன. ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களின் திருவுள்ளத்திலே:

"செம்மலர் நோன்றாள் சேரலொட்டா
அம்மலம் கழீஇ அன்பரொடு மரீஇ
மாலற நேயமும் மலிந்தவர் வேடமும்
ஆலயந்தானும் அரனெனத் தொழுமே"

என்ற சிந்தனை தோன்றியது அதேகாட்சி, அதே இணக்கம். இந்த சூத்திரத்தின் இலக்கியமாக இருந்தது அந்தச் சூழ்நிலை. அங்கேகிடைக்கும் வாய்ப்பைத் திருவுளத்து அடைத்தார்கள். மிக உருக்கமான சிந்தனை

அது. உடன்வந்த எங்களையெல்லாம் உயர்த்தியது அது. இந்தச் சிந்தனையோடு ஆசிரமம் திரும்பினேம்.

மாலை மயங்கிற்று. வழிபாடுகள் முடிந்தன. இரவு உணவை முடித்துக்கொண்டு படுக்கைக்குச் சென்றேம். மலையடுக்கிலே மேலே மேலே செல்வது போலவும், பேராறும், பெருமலையும், பனிமலைக் காட்சியும் கண்டு கண்டு இன்புறுவது போலவும் கனக்கண்டு இரவும் கழிந்தது.

## கண்ணும் இமையும்:

இராமன் சீதைஉடன்வர, இலட்சுமணன் காவல்புரிய ஆரண்ய வாசம் செய்கிருன். இலட்சுமணன் காவல்காக்கிருன் அந்த ஆச்சிரமத்தை. கண்ணை இமை காப்பதுபோல இருந்தது அவனுடைய பணிவிடை. தர்பாசனமிட்டான். அதன்மேல் தமயனைத் தூங்கச் செய்தான். இராமனுக்குச் செய்யவேண்டிய பணிகளையெல்லாம் காலத்திற்செய்து இரவும் பகலும் காத்துநின்ருன் என்கிறது கம்பர் காவியம். அதுபோலவே ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானத்துக்கு அவ்வக்காலங்களிலும் செய்யவேண்டிய பணிவிடைகள் செய்விக்கப் பெறுகின்றனவா? எங்கேனும் ஏதேனும் வழுவுதல் உண்டா? என்ற நினைப்பிலே ஒவ்வொன்றையும் ஒவ்வொரு பொழுதிலும் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமிகளவர்கள் விசாரித்து அறிந்து கொண்டார்கள். நேரில் வந்தும் செய்யச் செய்தார்கள்; அடிக்கடிவந்து விசாரித்தார்கள். இதனை மேலே சொன்ன கம்பசித்திரத்தோடு ஒப்பிட்டு மகிழ்ந்தது ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானத்தின் திருவுள்ளம்.

## உந்தூர்தி புறப்பட்டது:

காலை 3 மணிக்கே நாங்களெல்லாம் உறக்கத்திலிருந்து எழுப்பப் பெற்றேம். அங்கே ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமிகள் அவர்கள் திருமஞ்சனம் வழிபாடு முதலியவற்றுக்குப் புறப்பட்டுக் கொண்டிருப்பதைக் கண்டோம். சுறுசுறுப்புக் கொண்டோம். எங்களுக்குமுன்னர் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் திருமஞ்சனமாகி வழிபாடுமுடித்துப் பாராயணம் நிகழ்த்திக்கொண்டிருந்தார்கள். 'கேதாரமும்' பின்னர் நாங்கள் கௌரி குண்டத்திலே முழுகி, வழிபாடுகளை முடித்துக்கொண்டு தயாராஞேம்.

எங்களோடுவந்த ஆதீன அடியவர் வித்துவான் ஸ்ரீமத் சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் சொக்கலிங்கப்பெருமான் பூசையிலே முழுகி இருந்தார்கள். மணி 4. ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமிகளவர்களும் கல்யாணசுந்தரம் பிள்ளையும் உந்தூர்தி நிலையம் விரைந்தார்கள். அந்த நேரத்தில் 6-மணிக்குப் புறப்படவேண்டிய உந்தூர்திகளில் பலரும் வந்து ஏறிக்கொண்டிருப்பதைக் கண்டார்கள். நாங்கள் புறப்படவேண்டிய உந்தூர்தி ஓட்டுபவர் வரவில்லை. உந்தூர்தி இயக்குநர் (Conductor)

வந்திருந்தார். அவருக்கு ஓட்டவும் தெரியும். உந்தூர்தியை எடுத்துக் கொண்டு ஓட்டுபவர் வீட்டுக்குச் சென்று அவரையும் அழைத்துக்கொண்டு நாங்கள் இருக்கும் ஆசிரமம் வந்து சேர்ந்தார்கள். நாங்களும் ஏறிக் கொண்டோம். 'அரகர' முழக்கமும், 'கேதாரத் தேவாரமும்' முழங்க உந்தூர்தி புறப்பட்டது. 'கேதார்நாத்கி ஜே', 'பதரிவிசால்ஜிகி ஜே' முழங்கின. பாட்டை ஒருவழிப்பாட்டை.

## ஒரு வழிப்பாட்டை:

ஒருபுறம் பல்லாயிரக் கணக்கான அடி உயரமுள்ள மலையும், மறுபுறம் மிகவும் 'கிடுகிடு' பள்ளத்திலே ஆறுமாக இந்த நிலையிலே அமைந்த பாட்டை. அரசாங்கத்தாரால் அனுமதிக்கப்பட்ட உந்தூர்திகள்தாம் செல்ல லாம், மற்ற எந்த வண்டியும் அங்குபோக அனுமதி இல்லை. ரிஷிகேசத்தி லிருந்தும், எதிர்ப்புறத்தில் கீர்த்திநகரிலிருந்தும் உந்தூர்திகள் குறிப்பிட்ட எண்ணிக்கையில் புறப்பட்டு வரும். தொகுதி தொகுதியாக விடப்படு கின்றன. இடையிடையே சாலைகள் அகலமாக அமைக்கப்பட்ட ஊர்களும் உண்டு. முதற்றொகுதியிலே விடப்பட்ட உந்தூர்திகள் அகலமாக அமைக்கப்பட்ட சாலைப் பகுதிக்கு வந்துசேரும். எதிர் வழியிலே வரும் தொகுதியும் அங்கே வந்து சேரும். இரண்டு வழி யாலும் வரும் உந்தூர்திகளிலே அந்தந்தத் தொகுதியிலும் கடைசியாக வருபவை ஒரு கொடி எடுத்துவரும். அவை வந்ததும் இரு வழிகளிலும் இரண்டு தொகுதிகளும் செல்லத் தொடங்கிவிடும். இவ்வாறு வியாசர் சட்டி, தேவப்பிரயாகை இரண்டிடங்களிலும் உந்தூர்திகள் மாறிக்கொள் வதற்குச் சாலை அகலமாக அமைக்கப்பெற்றிருக்கிறது.

நரேந்திரநகர் எல்லை வந்தது. உந்தூர்தியும் நிறுத்தப்பெற்றது சுகாதாரச் சான்றுப்பதிவுக்காக அலுவலர்கள் சோதனையிட்டனர் எங்களை. நாங்கள் காசியிலேயேசுகாதாரச்சான்றுப்பத்திரம்பெற்றுச்சென்றிருந்தோம் நாங்கள் ரிஷிகேசத்திலே அமர்த்திக்கொண்ட கூலி அச்சான்று பெற வில்லை. அங்கே அவனுக்கு ஊசிமருந்து குத்தப்பெற்றது. பதிவுச்சீட்டும் கொடுத்தார்கள். அங்கே ஆள்வரி (Poll Tax) உண்டு. உந்தூர்திக் கட்டணத்தில் அதுவும் சேர்ந்தது. இது முடிந்து சிவானந்தா ஆசிரமம் வழியே இலட்சுமணஜூலா வந்து நின்றது எங்கள் ஊர்தி. அங்கே மலைவழிக்கு அடைப்புப் போட்டிருக்கிறார்கள். காவலும் உண்டு. முன்னேயே சொல்லப்பட்டிருக்கிறது, உந்தூர்திகள் தொகுதி தொகுதி யாகச் செல்லவேண்டுமென்று. தொகுதி முழுதும் வந்து சேர்ந்ததும் காவலர் அடைப்பைத் திறப்பார். உந்தூர்திகளும் விரைந்து புறப்படும். இனி மலை வழிப்பாதை. ஒருபுறம் பெருமலைகள்; மறுபுறம் கங்கை கங்கைக்கரையிலே ஆங்காங்கு அழகான ஆசிரமங்கள். இலட்சுமண ஜூலாவில் சரத்தால் கங்கைக்குப் பாலம் அமைத்தான் இலட்சுமணன் தவம்செய்ய. அந்த இடத்தில் இப்பொழுதும் ஒரு தொங்கு பாலம் அமைக்கப்

பெற்றிருக்கிறது, உத்தூர்திப்பாதை கங்கையின் வலப்புறத்திலே போகிறது. பாதத்தைத் தாண்டி இடப்புறத்திலே பழையநடைபாட்டையும் இருக்கிறது. நல்ல செழிப்பான மலைவளத்தினூடே பல பெரியோர்களுடைய ஆசிரமங்களையும் தரிசித்துக்கொண்டு கால்நடையாகச் செல்லுவோர் அவ்வழிச்செல்வர். உந்தூர்திப் பாதைவழியே அவர்கள் செல்லார்.

## வியாசர்சட்டி:

வழியும் திறந்தது; ஊர்தித்தொகுதியும் புறப்பட்டது. உந்தூர்திகளிலே உள்ள வடநாட்டு பக்தர்கள் பஜனை பாடினர்; ஜே முழக்கம் செய்தனர். இப்படிப் பக்திவெள்ளத்திலே உந்தூர்திகள் மிதந்து சென்றன. வியாசர் சட்டி வந்தது. வழிநெடுகிலும் நெடியமரங்களோடு போட்டிபோட்டுக் கொண்டு கறிவேப்பிலை அடர்ந்து நின்றன. அப்படியே அவைகளைப் பறித்து மூட்டைகட்டிக்கொண்டு போகவேண்டும் போலிருந்தது எங்களுக்கு.

வியாசர்சட்டியிலே வந்து நின்றதும் அங்கிருந்த பலகை இப்போது கடல்மட்டத்திலிருந்து 1059 அடி உயரத்தில் இருக்கிறோம் என்று காட்டியது. பிரயாணிகள் தங்குவதற்கென அமைந்த கொட்டகையில் தங்கினோம். உணவை முடித்துக்கொண்டோம். திருமுறை ஒலிப்பதிவு நிகழ்ந்தது. தேநீர்க்கடைகளும் அங்கிருந்தன. இதற்குள்ளே கீர்த்தி நகரி விருந்துவரும் ஊர்தித்தொகுதியும் வந்துவிட்டது. அரகர முழக்கத்துடனும் கேதாரநாத்கி ஜே முழக்கத்துடனும் மீண்டும் புறப்பட்டது எங்கள் ஊர்தி.

## தேவப் பிரயாகை:

தேவப் பிரயாகை செல்லும்போது பகல் 11 மணி; இரண்டு மூன்று கல் தொலைவில் உந்தூர்தி வரும்போதே தேவப்பிரயாகையின் முழுத் தோற்றமும் கண்ணுக்குப் புலனுவதாயிற்று. கடல் மட்டத்துக்கு 1690 அடி உயரத்தில் தேவப் பிரயாகை இருக்கிறது. பாகீரதியும் அலகநந்தாவும் கூடும் சங்கம கட்டத்துக்கு மேலே அடுக்கடுக்காக அமைந்த கட்டிடங்கள் பலவும் சங்கமத்தில் ஒரு பெரிய ஆலயமும், உச்சியிலே இரண்டு ஆலயங்களும், சுற்றிலும் நெடிய மலைச் சிகரங்களும் மலைக்காடுகளும் ஆக இப்படிக் காட்சி யளிக்கிறது அந்த ஊர். அலகநந்தாவும் பாகீரதியும் சேர்ந்து செல்வதற்குக் கங்கை என்று பெயர். தேவப்பிரயாகையின் இக் கரையில் உந்தூர்தி நிலயம் இருக்கிறது. அங்கு இரண்டு புறமிருந்தும் வரும் உந்தூர்திகள் தங்குவதற் கேற்றவாறு சாலை அகலமாக இருக்கிறது. இரு தொகுதிகளும் அங்கே வந்து சேர்ந்து கொண்டிருக்கின்றன. ஒரு பெரிய சந்தைக் கூட்டம். பதரி, கேதாரம் செல்லுவோர்க்கு உதவிசெய்ய முன்வரும் பண்டாக்களுடைய ஏஜண்டுகளும் கூலிகளும் அவவளவு பெரிய கூட்டமாக சேர்ந்திருக்கிறுர்கள் என்பது பிறகு தெரியவந்தது.

## கம்பியில்லாத் தந்தி:

நாங்கள் கேதாரம் புறப்பட்டு வருவது குறித்து யாரிடமும் காசியில் சொல்லிக் கொள்ளவில்லை. ஆனால் நாங்கள் வரும் செய்தி கேதாரத்தி லுள்ள பிரபலமான நரஹரி சாஸ்திரி என்னும் பண்டாவுக்கு எப்படியோ தெரிந்து அவருடைய தேவப்பிரயாகை ஏஜண்டுக்குக் கடிதம் எழுதி யிருந்தார். மதராஸி மகந்த் இருவர், கேதாரயாத்திரையை மேற்கொண்டு வருகிறார்கள். அவர்களை உந்தூர்தி நிலயத்தில் சந்தித்து அவர்களுக்கு வேண்டியவசதிகளைச் செய்து கொடுக்கவும்' என்று சாஸ்திரியார் கடிதம் எழுதியிருந்தார். எங்களைக்கண்டதும் அவருடைய ஏஜண்ட் இக் கடிதத்தைக் கொண்டுவந்து காட்டி, "தங்களுக்கு நான் எந்தவிதத்தில் உதவிசெய்யவேண்டுமென்பதைத் தயவுசெய்து கூறுங்கள்"? என்றார். நாங்கள் அவரிடமிருந்து எதிர்பார்க்கக் கூடிய உதவி ஒன்றும் இல்லை; ஆகவே எங்களுடைய நன்றியை நரஹரி சாஸ்திரியார்க்குத் தெரிவித்து உதவி எதுவும் தேவையில்லை என்று அவர்க்கு எழுதிவிடும்படிச் சொல்லிச் சென்றோம். நரஹரிசாஸ்திரியார் பெரிய வழக்கறிஞர் நல்ல சொத்துக்காரருங்கூட; இருந்தாலும் கேதாரயாத்திரை செல்லும் யாவருக்கும் உதவிசெய்யும் நோக்கத்தோடு பல பெரிய க்ஷேத்திரங் களிலும் கிளை அலுவலகங்கள் வைத்து ஒரு சிறு ஊதியத்திற்கு உதவி செய்தும் வருகிறார். இதைப்போல யாத்திரிகர்கள் வருவதை எப்படியோ தெரிந்துகொண்டு அவர்கள் வருகைக்குத் தக்க வசதிகள் செய்வதற்குத் தயங்குவதில்லை அந்தப் பண்டாக்கள்.

தேவப்பிரயாகையிலிருந்து கங்கோத்ரி யமுனோத்ரி போவதற்குப் பாகிரதியின் வலதுகரையிலே நடைவழிப்பாதை போகிறது. எங்கள் ஊர்தி புறப்பட்டது. பாகிரதியின் பாலத்தின் வழியே தாண்டிச்சென்று மலையின்மீது வளைந்து வளைந்து ஏறி அலகநந்தாவின் வலதுகரையில் போகத் தொடங்கியது.

இதுவரை வந்த வழியைவிட இந்தவழியில் வளைவும் நெளிவும் அதிகம். கங்கைக் கரையிலே உந்தூர்தி வரும்போது சில இடங்களில் மட்டும் ஒருபுறம் பாதாளத்தில் ஆறு ஓடுவது போலவும், ஒருபுறம் வான் முகடுமுட்டிய மலைகளுமாகக் காட்சியளித்தன.

## கண்ணும் பூச்சி:

அலக நந்தாவின் கரையில் உத்தூர்தி செல்லத் தொடங்கியதும், காட்சி முற்றிலும் மாறிவிடுகிறது. எதிர்ப்புறத்திலே அலக நந்தாவின் இடது கரையிலே உயரமான மலைத்தொடர். அந்தவழியாகக் கேதாரம்

டோகும் கால்நடைவழி செல்கிறது. நடுவிலே ஆறு உந்தூர்தி செல்லும் வலது கரையிலும் ஒரு பெரிய மலைத்தொடர். ஊர்தி விரைந்து செல்லுகிறது. பலப்பல இடங்களில் ஆறு நமக்குப் பலப்பல வாறாகக் காட்சியளிக்கிறது. அது நமக்குக் கண்ணாம்பூச்சி விளையாட்டுக் காட்டுவதுபோல இருக்கும். ஒருசமயம் ஆழ்ந்த - அகன்ற ஆறாகத் தோன்றும். ஓரிடத்திலே ஒடுங்கிய - சலசலப்போடு கூடிய சிற்றாறாகத் தோன்றும். பல இடங்களிலே ஆற்றின் நடுவில் அமைந்த குண்டுக் கற்களின்மேல் குதித்தோடும்- சில இடங்களிலே கண்ணுக்குப் புலப் படாமலே போய்விடும், இவ்வாறாக நம்முடைய கண்ணுக்கு விளையாட்டுக் காட்டிக்கொண்டே செல்லும் அந்த நதி.

## கடவுட் சிந்தனை:

இரண்டு மலைத் தொடர்களிலும் பசுமையான காடு உண்டாக்க மரம் வைத்துப் பயிர் செய்கிறார்கள். தட்டுத்தட்டாகக் கோதுமை வயல் களும் சீராக்கப்பட்டிருக்கின்றன. வெயில் உறைக்கத் தொடங்கியது. நடுப்பகல் நேரம். எல்லோருக்கும் சோர்வு ஏற்படக் கூடிய வேளை. கேதாரப் பதிகத்தைத் தொடங்கி உருக்கமாகப் பாடினார். மேலும் கந்தரனுபூதியை முழுதும் பாடி, அபிராமிஅந்தாதியையும் பாடினார். மிகமிக உருக்கமாக அமைந்தது அந்த இசைவிருந்து. அது எல்லோருடைய உளத்திலும், உயிரிலும் தண்மையையும் இனிமையையும் உண்டாக்கியது இவ்வாறாகக் கலையும், காட்சியும், கடவுட் சிந்தனையுமாகப் பயணம் வழியோடு சென்றுகொண்டிருந்தது. தேவப்பிரயாகையிலிருந்து வரும் வழியில் ஓர் இடத்தில் கடல் மட்டத்திலிருந்து 3000 அடி உயரம் என்று குறித்திருந்தது.

## சிறு பூசல்:

பொதுவாக வண்டி நிற்குமிடங்களில் பிரயாணிகள் எல்லோரும் இறங்கித் தங்களுக்கு வேண்டிய சிறு வசதிகளைச் செய்துகொண்டு ஓய்வும் பெற்று வண்டி புறப்படும் சமயம் ஏறிக்கொள்வது வழக்கம். அவ்வாறே இயற்கை நியதிகளை முடித்துக்கொண்டு (தேவப்பிரயாகையில்) சாயா அருந்தி வண்டியேறினோம். எங்களோடு ஆந்திரா ஆசிரமத் திலிருந்து இரண்டு மூன்று கிழவிகளை அழைத்துக் கொண்டு குடும்பத் தோடு ஆந்திரநாட்டார் ஒருவர் வந்துகொண்டிருந்தார். ரிஷிகேசத் திலேயே அவர்கள் உடன்வந்த கிழவிக்குச் சுரம் வந்துவிட்டது. நடுக்கிக் கொண்டே காரிலே வந்தார்கள். இருப்புக்கொள்ளவில்லை. இரண் டொருவர் இருக்கையைவிட்டுக் கீழே உட்கார்ந்துகொண்டு நோயாளி களைப் படுக்கவைத்தார்கள். உந்தூர்தியும் ஓடிக்கொண்டிருக்கின்றது

மேலே கூறியபடி சிறு வசதிகளைச் செய்துகொண்டு எங்கள் கோஷ்டியார் உந்தூர்தியி லேறினோம். ஆந்திரர் எங்களவர் உட்கார்ந்திருந்த இடத்தில் வசதியாகத் தானும் தன் மனைவியும் காலைப்பரப்பிக்கொண்டு உட்கார்ந் திருந்தார். நன்றாகப்படித்தவராகவும் உலக அநுபவம் பெற்றவராகவும் தோன்றியது. ஆனால் பொதுஇடத்தில் பழகத்தெரியாதவர். நாங்கள் எவ்வளவுசொல்லியும் அவர்பக்கத்தில் அமர்ந்திருந்த எங்களவருக்கு இடமும் கொடுக்கவில்லை. நாங்கள்சொல்லுவது காதில் விழுவதுபோலக் காட்டிக்கொள்வதும் இல்லை. சுயநலம் அவரைக் குருடாகவும் செவிடா கவும் ஆக்கிவிட்டது. எங்களவர்எவ்வளவுநேரம் பொறுப்பார்? பொறுமை எல்லை மீறியது. வேகமாக அவர் மடியுல் போய் உட்கார்ந்தார். ஆந்திர ருக்குக் கொஞ்சம் புத்திவந்தது, முணுமுணுத்துக்கொண்டே காலைச் சற்று ஒடுக்கிக்கொண்டார். அந்தப்பழிவிலே எங்களவர் உட்கார்ந்தார் காரோட்டத்திலேற்பட்ட ஆட்டத்தில் வசதியாக உட்காருவதற்கு அவருக்கு முடிந்தது. உந்தூர்தி செல்லச்செல்ல ஓதுவாமூர்த்திகளுடைய பக்திப் பரவசப்பாடல்கள் எங்களை அப்பக்கம் இழுத்தது, கொஞ்சநேரம் கழித்துத் திரும்பிப்பார்த்தேன் என்னருகில் உட்கார்ந்திருந்த எங்களவர் ஒருவரும் அவர் எதிர்ப்புறத்து இருக்கையி லமர்ந்திருந்த ஆந்திரரும் காலா லேயே உதைத்து உதைத்துப் போரிட்டுக்கொண்டிருந்தனர். வாய்ப்பேச் சில்லை. மௌனமாகவே நடந்தது அந்தப் போர். நான் அவருக்குச் சொன்னேன்! 'மனமடங்க - நம்முடைய தீயசக்திகள் குறைந்து நற்சக்தி கள்பெருகி நன்மையடைவதற்காக 1000, 2000 மைல்களுக்கப்பாலுள்ள பதரியை - கேதாரத்தை நாடிச்செல்கிறோம்; புண்ணியபூமியில் - தவப் பெருஞ் சாலையில் நாம் நுழைந்தும் நம்மைவிட்டபாடில்லையே இத்தீய குணங்கள்? யாராவது ஒருவர் பொறுத்துப் போயிருந்தால் இந்தப் பூசலுக்கு வழி இல்லையல்லவா?' என்றேன். ஒருவாறாக அது அந்த நிலையிலேயே ஓய்ந்துவிடடது. பூனையும் எலியுமாக இருந்த அவ்விருவரும் கீர்த்திநகர் வந்து காரைவிட்டிறங்கியவுடனே பகைமை மறந்து நண்பர்களாயினார்கள். ஒருவருக்கொருவர் மணிஎன்ன என்றார்; எங்கே போகிறீர் என்றார். இவ்வாறு குசலப்பிரச்னம் தொடங்கிவிட்டது அவர் களிடத்திலே.

## கீர்த்திநகர் வந்தோம்:

மாலை மணி 2. எல்லோரும் இறங்கி அவரவர்களுடைய மூட்டை களைத் தூக்கிக்கொண்டு அலகநந்தாவின் அக்கரையிலுள்ள ஸ்ரீ நகர் செல்லும் உந்தூர்தி நிலையத்திற்குச் சென்றோம். அலகநந்தாவில் இங்கே ஒரு தொங்குபாலம் அமைத்திருக்கிறார்கள் அரசாங்கத்தார். அதன்வழியே சென்றோம். அரைகல் தொலைவேயாயினும், வெயிலின் கடுமையும் வழியிலே உள்ள ஏற்றம் இறக்கங்களும் எல்லோருக்கும் அயர்ச்சி

யைக் கொடுக்கக் கூடியதாக இருந்தது. ஆனால் அரசாங்கத்தார் மக்கள் நலம் கோரி உந்தூர்தி இக்கரைக்கும் வரக்கூடியதாக அவ்விடத்திலே பெரிய பாலம் ஒன்று அமைத்து வருகிறார்கள். வேலைவேகமாக நடக்கிறது இக்கரை வந்தோம். தங்குவதற்குக்கூட நிழல்இல்லை அங்கே. ஸ்ரீ நகரிலிருந்து உந்தூர்திகள் வருகின்றன, யாத்திரிகர்கள் அடித்துப்பிடித்து அவற்றில் ஏறிக்கொள்கிறார்கள். நாங்களும் ஒரு உந்தூர்தியிலே இடம் பிடித்தோம் எங்கள் உந்தூர்தியும் ஸ்ரீ நகர் எல்லையை அடைந்தது.

## ஸ்ரீ நகர் :

டெஹ்ரிகார்வால் ஸ்டேட்டினுடைய தலைநகரம். இந்த சமஸ்தானம் இப்போது உத்தரப்பிரதேச ராஜ்யத்தோடு சேர்ந்துவிட்டது. பொதுவாக உத்தரகண்ட யாத்திரையிலுள்ள எல்லா இடங்களும் இந்த டெஹ்ரி கார்வால் சமஸ்த்தானத்தைச் சேர்ந்தவையே. மன்னராட்சியில் இருந்த போதே யாத்திரிகர்களுக்கு ஆங்காங்கு பல வசதிகளைச் செய்துதந்திருக்கிறார்கள். எல்லாவற்றிற்கும் மேலாக கூலி அமைப்பு அலுவலகமும் அமைத்து, அதற்கு அலுவலர்களைத் திட்டம் செய்து, முட்டை தூக்கிகளைப் பதிவுசெய்து, பிறகு பதிவுசெய்யப்பெற்ற கூலிகளே யாத்திரிகர்களுக்கு மேலே செல்ல உதவவேண்டும் என்ற திட்டத்தையும் ஏற்படுத்தி வைத்துள்ளார்கள். பதிவுபெறாத கூலிகளை அமர்த்திச்செல்வோர் அவரவர் சொந்தப் பொறுப்பிலே அழைத்துச் செல்லவேண்டும். அவ்வாறு செல்வதால் ஏற்படும் இன்னல்களுக்கு அரசாங்கம் பொறுப்பானதல்ல.

அங்கேஒரு சவுக்கி. உள்ளே நுழைய ஆள்வரி உண்டு. சுகாதாரச் சான்றுகளை இங்கேயும் சோதனை செய்தார்கள். முடிந்ததும் ஸ்ரீநகருக்குள் சென்றடைந்தோம். பதரி, கேதாரம் செல்லும்வழியிலே இந்த ஊர் பெரிய நகரம்.

ஹரத்துவாரிலிருந்து நாங்கள் வந்ததுபோல கோத்வரா என்ற இடத்திலிருந்தும் உந்தூர்திகள் இங்கே வருகின்றன. இங்கிருந்து பத்ரி கேதாரம் வழியிற்செல்லும் உந்தூர்திகளும், கீர்த்திநகருக்குச் செல்லும் உந்தூர்திகளும், கோத்வாராவுக்குச் செல்லும் உந்தூர்திகளும், ஆக பல ஊர்களுக்கும் ஊர்திகள் செல்கின்றன. பத்ரி கேதாரம் செல்வோர் இங்கே உள்ள உந்தூர்தி நிலையத்தில் சீட்டுக்கள்பெற்று மீண்டும் ஊர்திகளில் இடம்பிடிக்கவேண்டும். கேதாரம் செல்வோர் உருத்திப்பிரயாகை வரை சீட்டுப் பெற்றுக்கொள்ளவேண்டும். பதரி செல்வோர் 'பிபல் கோட்டி' வரை சீட்டுப்பெற்றுக்கொள்ளவேண்டும். மாலை 3-30 மணிக்கு ஒருவழியாக எங்கள் ஊர்தியும் உருத்திரப்பிரயாகை வழியிலே செல்லத் தொடங்கியது. இதுவும் மலை வழியிலே ஒரு வழிபாட்டை, ஸ்ரீ நகர் எல்லையைத் தாண்டியவுடன் கடல் மட்டத்திலிருந்து 2,000 அடி உயரத்தில் இருப்பதை உணர்ந்தோம்.

உ

குருபாதம்

## —: தருமபுர ஆதீன வெளியீடுகள் :—

| எண் | புத்தகம் | விலை ரூ. அ. பை. | தபாற்செலவு ரூ. அ. பை. |
|---|---|---|---|
| 1. | திருஞானசம்பந்தர் தேவாரம் முதல் திருமுறை (ராப்பர்) | 3—8—0 | 1—5—0 |
| 2. | இரண்டாந்திருமுறை (காலிகோ) | 5—0—0 | 1—8—0 |
| 3. | சமயபோதச்சொற்பொழிவுகள் | 1—0—0 | 0-13—0 |
| 4. | பரமாணு புராணம் | 1—4—0 | 0—9—0 |
| 5. | நித்தியபூஜா லக்ஷண சங்கிரகம் | 1—8—0 | 0—9—0 |
| 6. | திருக்குறள் உரைவளம் பொருட்பால் (காலிகோ) | 13—8—0 | 2—4—0 |
| 7. | காமத்துப்பால் ,, | 6—0—0 | 1—8—0 |
| 8. | திருவாசகம் ,, | 2—0—0 | 0-14—0 |
| 9. | நால்வர் நான்மணிமாலை | 0—4—0 | 0—4—0 |

தொகையை முன்பே அனுப்பிப் பெறல்வேண்டும்.

கிடைக்குமிடங்கள் :

1. மானேஜர்,
   தருமபுர ஆதீனம், தருமபுரம், மாயூரம் போஸ்ட்.
2. தருமபுர ஆதீன மடாலய தேவாலய சமயப் பிரசாரநிலயம்.
   41, உஸ்மான் ரோடு, தியாகராயநகர், சென்னை-17.

ஆதீன இசைப்புலவர், இசையரசு
திரு. M. M. தண்டபாணிதேசிகர் அவர்கள் பாடிய,

**பாராயணத் திருமுறைப் பாடல்கள்**

| | | |
|---|---|---|
| செட் ஒன்றுக்கு விலை | ரூ. | 40—0—0 |
| தபால், பாக்கிங் செலவு | ரூ. | 6—-8—0 |

கிடைக்குமிடங்கள் :

1 காஷியர், ஸ்ரீ சட்டைநாதசுவாமி தேவஸ்தானம்,
  சீகாழி. தஞ்சாவூர் ஜில்லா.

2 தருமபுர ஆதீன மடாலய தேவாலய சமயப் பிரசாரநிலயம்,
  41, உஸ்மான் ரோடு, தியாகராயநகர், சென்னை-17.

உ

குருபாதம்

# குத்தகை ஏல விளம்பரம்

தஞ்சாவூர் ஜில்லா மாயூரம் தாலூகா தருமபுர ஆதீன மடத்துக்குச் சொந்தமான திருவிதாங்கூர் சமஸ்தானத்தைச் சேர்ந்த கீழ்கண்ட கிராமங்களிலுள்ள சொத்துக்களை வருகிற 1366 ம் பசலி முதல் ஐந்து பசலிகளுக்கு 1132 ம் ஆண்டு முதல் ஐந்து ஆண்டுகளுக்கு ரொக்க குத்தகையாக தருமபுரத்தில் ஆதீனக் கச்சேரியில் 1955 ம் வருஷம் டிசம்பர்மாதம் 19 ம் தேதியில் பகல் 2 மணிக்கு ஏலத்தில் குத்தகைக்கு விடப்படும். குத்தகை அபேக்ஷிப்பவர்கள் அன்று ஷை இடத்தில் ஆஜராகி ஏல கண்டிஷன்களுக்கு உட்பட்டு ஏலம் கேட்கலாம். மற்றும் வேண்டும் விபரம் வேண்டியவர்கள் ஷை ஆதீனம் கச்சேரியிலோ அல்லது திருநெல்வேலி ஜங்ஷன் வீரராகவபுரம் சிந்துபூந்துறையிலுள்ள தருமபுரம் மடத்திலோ கேட்டும் எழுதியும் தெரிந்துகொள்ளலாம்.

## சொத்து விபரம்

| | | ஏ. | செ. |
|---|---|---|---|
| திருவனந்தபுரம் கொச்சி இராஜ்யத்தைச் சேர்ந்த தோவாளா தாலூகா | தோவாளா பகுதியில் | 140 | 69 |
| ,, | தாழக்குடி பகுதியில் | 6 | 49 |
| ,, | அருமநல்லூர் | 2 | 87 |
| ,, | தெரிசனங்கோப்பு | 1 | 61 |
| அகஸ்தீஸ்வரம் தாலூகா | இரவி புதூர் பகுதி | 44 | 52 |
| ,, | தேரூர் | 15 | 36 |
| ,, | சுசீந்திரம் பகுதி | 1 | 21 |

பல விருக்ஷங்கள் மகசூல் வகையரா உட்பட

ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள்
ஆக்ஞைப்படி,
மானேஜர்.

தருமபுர ஆதீனம் கச்சேரி,
28—11—'55.

Printed & Published by K. Sundaresa Iyer, Agent, Dharmapuram Adhinam at the Gnanasambandam Press, Dharmapuram. (Mayuram). 10—12—1955.